www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20 ரூபா 11/00
දිනමුරසු වාරමලර් நவ.15–21,1998

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 283

## ஹெலிகொப்டர் குழப்பங்கள்

## உதையும் உபயோகமும்

திரைமறைவு உடன்பாடு



## சிம்ரானிடம் சூர்யா வெட்கம்!

## 79 வயதில் தேனிலவு

படிப்பகம்

சுவாரசியம் அது தான் தினமுரசு

www.padippakam.com

# முரசம்

## குரூர மௌனம்

**அன்புள்ள உங்களுக்கு**
**வணக்கம்.**

யாழ் குடாநாடு
திறந்தவெளி
சிறைச்சாலையாகிவிட்டது!

பாலியல் வல்லுறவுகள்,
தடுப்பு முகாம் மரணங்கள்,
சோதனைக் கெடுபிடிகள்
என்று பட்டியல்
நீண்டு கொண்டே போகிறது!

சமீபத்தில் யாழில்
படையினரால் கைதான
இராஜரத்தினம் உதயகுமார்
மரணமாகியுள்ளார்.

அவரது மரணம்
தற்கொலை என்று
தீர்ப்பாகியுள்ளது!

கால் விலங்கு
போடப்பட்ட அடையாளம்
காணப்பட்டிருக்கிறது!

அடி காயங்கள்
உடலில் இருந்துள்ளன!

இத்தனைக்குப் பின்பும்
தற்கொலைதான்
என்று எப்படி
உடன் தீர்ப்பளிக்கப்பட்டது?

நீதித்துறை
சந்தேகத்திற்கு அப்பாற்பட்டதாக
இருப்பது முக்கியம்!

கிருஷாந்தி வழக்கில்
கொடுக்கப்பட்ட தீர்ப்பு
நீதிபதிகளை
பாராட்ட வைத்தது!

ஆனால், தற்போது
இராஜரத்தினம் உதயகுமார்
மரணத்தில்
வழங்கப்பட்ட தீர்ப்பு
சந்தேகத்தைக் கிளப்பியுள்ளது!

அதற்கு முன்னரும்
புலி என்று கைதான
குடும்பஸ்தர் ஒருவர்
விசாரணையின்போதான
வதையில் பலியானார்!

அந்த விடயத்தில்
நடவடிக்கை எடுக்கப்போவதாக
பரபரப்பாக
அறிவிக்கப்பட்டதே தவிர,
பின்னர் நடந்ததை
நாமறியோம்!

ஒரு வாதத்திற்காக
தற்கொலை என்றே
வைத்துக்கொண்டால்கூட,

அப்போது
கடமையில் இருந்த
அதிகாரிகள்மீது
நடவடிக்கை எடுத்தாக வேண்டும்!

கைதி ஒருவர்
தடுப்பு முகாமிலோ
சிறையிலோ
கொலையாகாமலும்
தற்கொலை செய்யாமலும்
பார்த்துக் கொள்ளவேண்டியது
அதற்குப் பொறுப்பான
அதிகாரிகளது கடமையாகும்!

ஆனால், அவ்வாறுகூட
எந்த அதிகாரிமீதும்
நடவடிக்கை
எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை!

தற்கொலை என்று
நிரூபிக்க
காட்டிய அக்கறையை,
அதற்கான காரணங்களை
கண்டறிந்து
நடவடிக்கை எடுப்பதில்
ஏன் காண்பிக்கவில்லை?

யாழில் காணாமல்
போனோரின் விவகாரம்
உலகறிந்த விவகாரமாக
அறியப்பட்டுள்ளதால்தான்
அத்தகைய நிகழ்வுகள்
ஓரளவு குறைந்துள்ளன!

அவ்வாறில்லையெனில்
இராஜரத்தினம் உதயகுமாரும்
காணாமல் போனோர்
பட்டியலில்
சேர்க்கப்பட்டிருக்கக்கூடும்!

எங்காவது
மலசலகூடத்தின்
குழியில் இருந்து -
எப்போதாவது
எலும்புக்கூடாக
வெளியே வந்திருக்கலாம்!

அல்லது,
மண்ணோடு மண்ணாக
மக்கிப் போயிருக்கலாம்!

இத்தனைக்கும் இடையே
மிகக் குரூரம்...
தமிழ்க் கட்சிகளின்
தன்னல மௌனம்!

இராஜரத்தினம் உதயகுமார்
மரணத்தைப் பற்றிய
செய்திகளைப் பார்க்கும்
சாதாரணமானவர்களுக்கே
சந்தேகங்கள் எழுகின்றன!

ஆனால், தமிழ்க் கட்சிகள்
மேற்படி விவகாரத்தில்
வாயே திறக்கவில்லை!
எள் முனையளவுகூட
சந்தேகம் தெரிவிக்கவில்லை!

இத்தகைய மௌனம்
அடக்குமுறைகள் -
அத்துமீறல்கள் தொடர
மறைமுகமான
ஒத்துழைப்புக்கள்தான்!

புலிகள்தான்
யாழில் ஜனநாயகத்தை
மீறுவதாக
கூட்டணி உட்பட
சில கட்சிகள்
உலகத் தலைவர்களுக்கு
மகஜர் தயாரித்தன!

இக் கட்சிகளுக்கு
இராஜரத்தினம் உதயகுமார்
போன்றோரின் மரணங்கள்,
தொடரும் பாலியல் வல்லுறவுகள்
மற்றும் கெடுபிடிகள் -
புரட்சிகரமான சூழலாக
தெரிகிறதோ?!

இதுதான் இவர்கள்
நாடும் அமைதியா?
இதுதான் இயல்பு நிலையா?
இதனைக் கெடுக்காதீர்
என்றுதான் கூறுகிறார்களா?

இவர்கள் புலிகளை
எதிர்க்கட்டும்.
ஆனால், புலிகளை
எதிர்ப்பது என்று கூறியபடி
தமிழ் பேசும் மக்களுக்கு
குழிகள் வெட்டுகிறார்கள்:
அதுதான் துயரம்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
-ஆசிரியர்

# ஆன்மீகம்



## சரணாகதி

இக்கலியுகத்தில் நாம் சகல சௌபாக்கியத்துடனும், ஆரோக்கியத்துடனும், அஷ்ட ஐஸ்வரியத்துடனும் வாழ்வதற்கு மிகவும் அத்தியாவசியமானது சரணாகதிதான். பகவானின் பாத கமலங்களைச் சரணடைந்தால் நமக்கு சகல காரியங்களும் சித்திகின்றன.

அனுதினமும் காலையிலும், மாலையிலும் நாம் இறைவனின் நாமத்தை ஜபிக்க வேண்டும். இறைவனின் நாம மகிமையால் நமது ஜாதகத்திலுள்ள கஷ்டங்களைக்கூட பனிபோல் விலக்கமுடியும்.

சகல தேவதா மூர்த்திகளுக்கும் முதலாவதாக வணங்கப்படும் விநாயகர், ஜாதகத்தில் கேதுவிற்கு தசா நாதநாக விளங்குகின்றார். அதேபோல் முருகன் அங்காரகன் எனும் செவ்வாய்க்கு தசா நாதநாக விளங்குகின்றார்.

கணபதியை வணங்குவதால் ஜாதகத்தில் நமக்கு கேதுவால் நற்பலன்கள் ஏற்படுகிறது. அதேபோல் முருகனை வணங்குவதால் செவ்வாய்க் கிரகத்தால் நன்மை ஏற்படுகிறது. இவ்வாறு நவக்கிரகங்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே ஒவ்வொரு மூர்த்திகளை ப்ரீதி செய்து வழிபடவேண்டும்.

அதற்காகவே ஆலயங்களும், ஆலயங்களில் ஆண்டவனும், ஆண்டவனைப் போற்றி வணங்க தோத்திரங்களும், துதிமாலைகளும் சொல்லியுள்ளார்கள்.

எல்லாம் வல்ல அந்த பகவானின் நாமாவை நாமும் போற்றுவோம். குரு வருளால் திருவருளும், திருவருளால் பகவானின் திருவடி தரிசனமும் பெற்று பேரின்பம் பெறுவோமாக.

தொகுப்பு:- அ.அரசரெத்தினம், சேனையூர்-06.

## அரசைத் துறந்த மாமன்னர்

அக்காலத்து அரசர்களுள் ஒருவரான மாமன்னர் துல்கர்னைன் ஆண்ட நாட்டு மக்களில் சிலர், தமது வீடுகளுக்கு முன்பு புதைகுழிகளைத் தோண்டி வைத்துக்கொண்டிருப்பதைக் கண்ணுற்று அதிர்ச்சியடைந்து இதுபற்றி அம்மக்களிடம் விபரம் கேட்டார்.

"அரசே! நாம் வாழும் வயது மிகக்குறைவு. மரணம் என்று வரும் என எவராலும் சொல்ல முடியாது. எனவே, மரணத்தை ஒவ்வொரு வினாடியும் மறக்காமல் இருக்கவே இப்படிச் செய்கிறோம்.

இதோ! எதிரிலுள்ள மண்டை ஓட்டைப் பாருங்கள். இவன் அரசனாக இருந்து மக்களுக்கு இழைத்த இன்னல்கள் எண்ணிலடங்காது. இதோ! இந்த எலும்புக்கூட்டைப் பாருங்கள். இவனும் ஒரு காலத்தில் அரசனாக இருந்தான். ஆனால் மிகவும் நல்லவன். எனினும் இவர்கள் இப்போது எங்கே? எனவே, மரணம் வருவதற்கு முன் இறைவனை வழிபடுங்கள்." இதைக் கேட்ட மாமன்னர் அன்றே அரசைத் துறந்து முழுமையாக தன்னை இறைவழியில் ஈடுபடுத்திக்கொண்டார்.

அல்லாவின் உணவை உட்கொண்டுவிட்டு அவனுக்கே மாறுசெய்யும் இஸ்லாமிய நெஞ்சங்களே! அந்த கிராமவாசிகள் அரசன் துல்கர்னைனுக்கு உபதேசிக்கவில்லை. உபதேசமெல்லாம் உங்களுக்குத்தான்!

வை.எம்.தாஹிர்கரீம், கல்முனை-06.

## கவிதைப் போட்டி இல.280

இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:



### பரிசுக்குரிய கவிதை

### பயனில்லை!

எண்ணெழுத்தைக் கற்பதற்கு
ஏதுவான நூல்களெல்லாம்
குண்டடியில் சாம்பலாகி
மண்ணெழுத்தாய் போனதய்யோ-இனி
கிண்டுவதால் என்ன பயன்?

அ.சந்தியாகோ- அசோகா வித்தியாலயம், கண்டி.

### ஆராய்ச்சி

என்ன இது?
புதையலா....
பூத உடலா?

ந.மணிமாறன், தெமட்டகொட.

### அரசியல் வாதிகள்

இப்படி ஒரு
குட்டையை
குழப்பினார்கள்;
அதனால்தான்
எமது வாழ்வு
சாக்கடையில்....!

கா.சுஜந்தன், கிளிநொச்சி.

### முடிந்தது

இனி...
தோண்டியும்
பலன் இல்லை!
இருந்த தடயமும்
இரவோடு இரவாக
எரித்து முடித்தாச்சு!

த.நகுலேஸ்வரன்-மட்டக்களப்பு.

### எங்கெங்கும்....

செம்மணியென்று
செங்கலடியில் தோண்டினால்,
அங்கேயும் எலும்புகள்.

ஆர்.நிசாகரன்- பூனாகல.

### பரிதவிப்பு

செம்மணியில் புதையுண்ட
அன்னையவள் உடல் தேடி
நிலம் கிளறும் சேய்களது
வேதனையை யாரறிவார்?

முஸ்தபா ஜெஸ்மின்- ஏறாவூர்-06.

### மாற்றம்

நெஞ்சமெல்லாம் இனிக்க
வந்தது அன்று தீபாவளி!
நெஞ்சமெல்லாம் எரிக்க
வந்தது இன்று தீபாவளி!

நா.ஜெயபாலன்-பிபிலை.

### தோண்டிப் பார்

எட்டிப் பார்த்து எதைதான் காண....?
போகிறாய், கண்ணால் காண்பது பொய்!
காதால் கேட்பதும் பொய்!
தோண்டிப் பார்ப்பதே மெய்!
அதை நம்பித் தோண்டினால்,
தோண்டப்பட்டது மெய் என்று
அப்போதே புரியும், கவனம்!

ப.ராஜா-லிந்துல்ல.

### இணைந்துவிடும்

அன்புள்ள தம்பியரே....!
இந்த ரயில்பாதை இப்போது
வடகிழக்கைப் பிரிக்கிறது!
அந்தந்த உரிமைகளை
உடனடியாய்த் தந்துவிட்டால்,
பாதை திறக்கிறது; நாடு இணைகிறது!

கவிஞன் 'திக்கவயல்'-மன்னார்.

### சுற்றி வளைப்பு!

டேய்...
தம்பியவை....!
சுற்றிவளைப்பாம்
ஒடுங்கடா!

கயல்வண்ணன்-வவுனியா.

### செம்மணி...?

அம்மணி தோண்ட
மறுத்ததை;
இந்த-
கண்மணிகள்
தோண்டுறாரோ...?

விஜி பத்மநாதன்- நீர்கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.283



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 21.11.1998

முகவரி: கவிதைப் போட்டி இல.283
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

## வீடுவீடாக மிரட்டல்

தமிழ்க் கட்சி ஒன்று வீடு வீடாக வந்து தமது பத்திரிகையை வற்புறுத்தி விற்பனை செய்கிறது. ஆயுத கலாசாரம் ஒழிக என்று கூறிக்கொண்டு, மிரட்டி உருட்டி பத்திரிகை விற்பனை என்ற பெயரில் கப்பம் வாங்குகின்றனர். இது தொடர்பாக முரசு தீர விசாரித்து செய்தி வெளியிடவேண்டும். ஏனைய பத்திரிகைகள் வியாபார நோக்கம் கொண்டவை என்று அதே பத்திரிகை கூறுவதுதான் வேடிக்கை.

எம்.சுரேந்திரன், மட்டக்களப்பு.

## சுரணையே இல்லாமல்

அன்பு முரசுக்கு;

'லயன் எயார்' விமானத்தில் மக்கள் பலியானது சோகமான சம்பவமே. ஆனால் அதற்கு முன் பலதடவை முன்னறிவிப்பு கொடுத்ததையும் மறந்துவிடலாகாது. ஆனால் வாருங்கள் என்று அழைப்பு மேல் அழைப்பு விடுத்து 600 பேருக்கு மேற்பட்டோர் காணாமல் போக யார் காரணம்? இதோ விரைவில் என்று கூறிக் கூறியே செம்மணியை முடிமறைப்பது யார்? சமீபத்தில்கூட நாயன்மார்க்கட்டு இளைஞனுக்கு நடந்தது என்ன? இவை தொடர்பாக சுரணையே இல்லாமல் இருக்கும் தமிழ்க் கட்சிகள் ஜனநாயகம் பேசுவது ஏமாற்றுவேலை.

ஜி.கனேந்திரன், யாழ்.

## வெள்ளையடிப்பு போதும்!

செம்மணி விவகாரத்தில் இழுத்தடிப்பு ஒரு புறமிருக்க, பாதுகாப்புப் பிரச்சனை, மாநகரசபை குண்டு வெடிப்பு பிரச்சனை என்பவற்றைக் கூறி பூசிமெழுகுவதுதான் சகிக்கவில்லை. தமிழ் மக்கள் முட்டாள்களல்ல. யாழ் மாநகர சபை குண்டு வெடிப்புக்கு முன்னரே செம்மணி விவகாரம் அம்பலமாகிவிட்டது. அப்போது விமானங்களும் ஓடின. அந்த நேரம் மனித உரிமை ஆணைக்குழு எங்கே போனது? சட்டத்துறையினர் எங்கே இருந்தனர்? வெள்ளை அடிப்பதற்கும் ஒரு அளவு வேண்டாமா?

செ.விஜயகுமார், கொழும்பு-11.

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.



## மருந்துத் தடை யாருக்கு?

முரசுக்கு;

எல்லைக் கிராமங்களில் உள்ள சிங்கள மக்களுக்கு சுகாதார முகாம் நடத்தப்படுகிறது. இதனை ரூபவாஹினியும் காண்பித்தது. ஆனால் தமிழ்க் கிராமங்களுக்கு மருந்து அனுப்ப மட்டும் பயங்கரவாதப் பிரச்சனை என்று சாக்குப் போக்குகள் கூறப்படுகின்றன. ஓயாத அலைகள் மூலம் புலிகளுக்கு தேவையான மருந்தை அரசே கொடுத்துவிட்டது. ஆதலால் புலிகளுக்கு மருந்துகள் கிட்டக்கூடாது என்று மக்களுக்கு தேவையான மருந்துக்களை தடுப்பது அர்த்தமற்றது. மாற்றாந்தாய் மனப்போக்கு!

எஸ்.ரூபி, கிளிநொச்சி

### ஆரம்ப அமர்க்களம்

'மேற்கே ஒரு குற்றம்' சூப்பர் என்றால், அதே பக்கத்தில் வெளிவரும் 'டிசம்பர் பௌணர்மி' சூப்பரோ சூப்பர். 'உடைந்த இரவு', 'முள்நிலவு' போன்ற அம்சமான கதைகளைத் தந்த ராஜேஸ்குமாரின் 'டிசம்பர் பௌர்ணமி' ஆரம்பமே அமர்க்களம்.

ஜெ.காந்தமலர், அவிசாவளை.

### முதல்வாரமே

முரசே! சுபா தரும் 'உதட்டில் ஒரு மச்சம்!' கிளு கிளு சூடு. ராஜேஸ்குமாரின் 'டிசம்பர் பௌர்ணமி' முதல் வாரமே எம்மைக் கவர்ந்துவிட்டது. முரசு தரும் தொடர்களால் வாரா வாரம் காத்திருப்புத்தான். 'முரசு' எப்போது வரும் என்று படபடப்போடு நானும் என் தங்கையும் காத்திருப்போம்.

எ.ஃப்.நதீஷா, கல்முனை.

வன்னிச் சமர் பற்றிய 'எக்ஸ்ரே ரிப்போர்ட்' சூப்பர். 'டிசம்பர் பௌர்ணமி'யில் நான் உலாவினேன். அவ்வளவு வெளிச்சம் வசந்த கால பௌர்ணமியாக இருக்க வேண்டும் என்று எனது ஆசை....

ஆ.சந்திரமோகன், புஸ்ஸலாவ.

### அசல் வில்லன்

மரண தூதனோ என்று நினைக்குமளவுக்கு 'இடி அமீன்' பிரமிப்பு ஊட்டுகிறான். முன்னர் கார்லோஸ் வில்லனா- கதாநாயகனா என்று எம்மால் முடிவுக்கு வர முடியாமல் இருந்தது. ஆனால் 'இடி அமீன்' வில்லனேதான். மகாவில்லன். அவனை ரசிகன் தரும் பாணியும் வில்லத்தனம்தான்.

பூ.சிவபரன், சிலாபம்.

### கலக்கல் நயம்

'இலக்கிய நயம்' கலக்கல் நடத்துகிறது. சித்தூர் ராணி பத்மினியின் கதையை கவிதை நடையில் சுருக்கமாக சுவையாக தந்திருந்தார் ரசிகன். தூக்கலாக இருந்தது. அதேபோல 'இடி அமீனும்' ரசிகன் கைவண்ணத்தில் பலே பலே.

செல்வி இ.பிரேமலதா, கொழும்பு-06.

### உளவியல் பிரிப்பு

'உளவியல் பிரிப்பும், புவியியல் பிரிப்பும்' என்று 'இராஜதந்திரியார்' தந்த விளக்கம் கச்சிதம். வடக்கு-கிழக்கு என்று பிரித்தாள்வதும், அடக்கியாள்வதும் பேரினவாத முகாமின் நீண்டகாலத் திட்டம். அந்தத் திட்டத்திற்கு 50 வயதாகிவிட்டது. கிழக்கு மாகாண தமிழ் இளைஞர்களுக்காகக் கண்ணீர் வடிப்பவர்கள், கிழக்கில் படுகொலை புரிந்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்கட்டும். பின்னர் அவர்கள் கண்ணீரை நம்பலாம்.

ச.அழகராசா, மட்டக்களப்பு.

அன்பின் முரசே!

'முள் நிலவு' இதயத்தில் இடம் பிடித்துவிட்டது. 'சதாம் உசைன்' தொடர் அட்டகாசம். 'சிந்தியா பதில்'.. எனப்பல அம்சங்களும் வெகு ஜோர். நவரச முரசே உனக்கு வாழ்த்துக்கள் பல.

தி.தமயந்தி, வவுனியா.

என்னினிய முரசே!

உன் பக்கங்கள் அனைத்தும் அம்சங்களே! 'அதிரடி அய்யாத்துரை' அசத்த, 'காதிலை பூ கந்தசாமி' கலக்க, ரசிகனோ ரசிக்க வைக்க, முள் நிலவது முல்லைக் கொடியாக உள்ளமதில் படர்ந்துவிட்டது.

எஸ்.கே.வாணி, கிளிநொச்சி.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட
சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
பக்ஸ்- 074-513266


படிப்பகம்

www.padippakam.com

# மூவாயிரம் பேர் வரை புதிய உறுப்பினர்கள்

# வெற்றியளித்துள்ள புலிகளின் ஆட்திரட்டல்!

ஓயாத அலைகள்-02 இன் பின்னர் புலிகள் இயக்கத்தினர் அடுத்த பாரிய தாக்குதலுக்குத் தயாராகி வருகின்றனர்.

பெரும் தாக்குதல் ஒன்றுக்கான ஆட்திரட்டலிலும் புலிகள் ஈடுபட்டுள்ளனர். மட்டக்களப்பில் தாமாக வந்து புலிகளில் சேர்ந்தோரைத் தவிர, பல நூற்றுக்கணக்கானோர் கட்டாயமாகவும் அழைத்துச் செல்லப் பட்டனர்.

இதேவேளை முல்லைத்தீவில் மாணவர்களும், இளைஞர்களும், யுவதிகளுமாக ஏராளமானோர் புலிகளுடன் இணைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறைந்தது ஆயிரத்தி ஐநூறு பேராவது சேர்ந்திருக்கலாம் என்று தகவல்கள் கூறுகின்றன.

பொருளாதார முற்றுகை, நிவாரணத் தடை என்பவற்றால் பாதிக்கப்பட்ட வன்னி மக்களிடையே பெரும் அதிருப்திகள் தோன்றியுள்ளன. சில தாய்மார்கள் தமது பிள்ளைகளை தாமாகக் கொண்டு சென்று புலிகளில் இணைத்திருப்பதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

ஓயாத அலைகள்-02 இன் பின்னர் குறைந்தது மூவாயிரம் ஆண்களும், பெண்களும் புலிகள் அமைப்பில் இணைந்துள்ளனர்.

### யாழில் வதந்திகள்

யாழ் குடாநாட்டில் பாடசாலைகளை மூடிவிடுமாறு புலிகள் என்ற பெயரில் வதந்தி பரப்பப்பட்டு வருகிறது. கடிதங்களும் அனுப்பப்பட்டுள்ளன. புலிகளது பழைய கடிதத் தலைப்புக்களைப் பயன்படுத்தியே மிரட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

அக் கடிதங்களைத் தயாரித்தவர்கள் முன்னுக்குப் பின் முரணாக எழுதியிருப்பதால், அவை போலிகளே என்பது உறுதியாகியுள்ளது.

பாடசாலைகளை மூடுமாறும் கூறப்பட்டுள்ளது. பின்னர் பாடசாலை மாணவர்களை இயக்கத்திற்கு திரட்டித் தருமாறு ஆசிரியர்களிடம் கேட்கப்பட்டுள்ளது. பாடசாலை நடந்தால்தான் ஆட்திரட்டல் செய்ய முடியும். எனவே ஆட்திரட்டல் செய்ய விரும்பினால்

(நமது நிருபர்)

பாடசாலைகளை மூடிவிடுமாறு கோரப்பட்டிருக்காது.

கடிதத்தில் தாராளமான தமிழ்ப் பிழைகளும் உள்ளன. புலிகளுக்கு எதிரான சக்திகளே கடிதங்களை அனுப்பி வைத்துள்ளன. தமது கடிதங்களில் உள்ள முரண்பாடுகளை அவை கவனிக்கத் தவறியதால் கடிதங்கள் போலி என்று தெரிந்துவிட்டது.

யாழ் குடாநாட்டில் பாடசாலைகளில் புலிகளின் இரகசியத் தொடர்புகள் இருக்கின்றன. அவ்வாறிருக்கையில் ஆட்திரட்டுமாறு ஆசிரியர்களுக்கு கடிதம் மூலம் கோரும் அவசியம் இல்லை என்று மாணவர்கள் கூறுகின்றனராம்.

இக் கடிதங்களையிட்டு புலிகள் தமது மறுப்பை வெளியிடவேண்டும் என்று கல்வி தொடர்பான அதிகாரி ஒருவர் யாழ் மாவட்ட புலிகளது முக்கியஸ்தர் ஒருவரிடம் கேட்டுக் கொண்டாராம்.

"எமது மாணவர்களது கல்வியை நாமே பாழடிப்போம் என்ற அபாண்டமான கதையை நம்புகிறவர்களுக்கு நாம் ஏன் விளக்கம் கொடுக்க வேண்டும்?" என்று அம் முக்கியஸ்தர் பதிலுக்குக் கேட்டாராம்.

வன்னியில் தாமே பாலர் பாடசாலைகள் பலவற்றை நடத்த உதவுவதாகவும், தொண்டர் ஆசிரியர்களை நியமித்திருப்பதாகவும், கல்வியில் தமக்கும் அக்கறை உண்டென்றும் அவர் கூறியதாகவும் அந்த கல்வி அதிகாரி தெரிவித்தார். தனது பெயரை குறிப்பிட அவர் விரும்பவில்லை. புலிகளின் நிர்வாகத்தின்போது அவர்களுக்கு வேண்டப்பட்டவராக இருந்தவர் அந்த அதிகாரி.

## கைதான மாணவன் பிணமானான்!

### மற்றுமொரு சந்தேக மரணம்

யாழ் குடாநாட்டில் இராசரத்தினம் உதயகுமார் என்பவர் கைதான பின்னர் மரணமாகியிருந்தார். அது தற்கொலை என்று கூறப்பட்டது. அது தொடர்பாக பலத்த சந்தேகங்கள் எழுந்துள்ளன.

14.10.98 அன்று அம்பாறை மாவட்டத்தில் கல்முனையில் பொலிசாரால் கைதான தமிழ் மாணவர் ஒருவரது மரணமும் பலத்த சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

கல்முனையை அடுத்துள்ள பாண்டிருப்பு கிராமத்தில் 14.10.98 அன்று சதாசிவம் சஞ்சீவன் என்னும் பதினெட்டு வயது மாணவர் பொலிசாரால் கைதானார். மறுநாள் பிணமாக பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

மேலதிக விசாரணைக்காக சஞ்சீவனை அம்பாறைக்குக் கொண்டு சென்றபோது மல்வத்தையில் வைத்து புலிகள் தாக்கியதாகவும், அதனால் ஆஸ்பத்திரியில் மரணமானதாகவும் பெற்றோருக்கு கூறப்பட்டதாம்.

மாணவரின் கையிலும், கழுத்துப் பக்கமும் அடி காயங்கள் காணப்பட்டிருக்கின்றன. அது மட்டுமல்லாமல், புலிகள் தாக்கியிருந்தால் பொலிசாரும் காயமடைந்திருப்பார்களே, அவர்கள் எங்கே? அப்படி ஒரு சம்பவம் நடந்ததாக செய்திகளும் வெளியாகவில்லையே, என்றும் சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

பலியான மாணவன் கல்முனை கல்லூரி ஒன்றில் க.பொ.த.(சா.த) வகுப்பில் கல்வி கற்று வந்தார்.

## தென்னாபிரிக்க தொலைக்காட்சிப் பேட்டி!

### ஜனாதிபதிக்கு குமார் பகிரங்க சவால்

"இந்நாட்டுக்குச் சொந்தமானவர்களல்லாத சிறுபான்மை இனத்தவர்கள்- இந் நாட்டைப் பிரித்து தனி நாடு கோருகிறார்கள்!" இவ்வாறு தென் ஆபிரிக்காவின் தொலைக்காட்சிகளுக்கான போட்டியின் போது ஜனாதிபதி சந்திரிக்கா கூறியுள்ளார்.

இவ்வார்த்தைகள் முழுமையாக அடங்கிய பகுதியை ரூபவாஹினி இரவு ஆங்கிலச் செய்தியின்போது அப்படியே ஒலிபரப்பியது.

இதனைச் சுட்டிக்காட்டி திரு.குமார் பொன்னம்பலம் அவர்கள் பத்திரிகைகளுக்குத் தகவல் தெரிவித்ததுடன் ஜனாதிபதிக்கும் கடிதம் எழுதியுள்ளார்.

திரு.குமார் பொன்னம்பலம் ஜனாதிபதியின் மேற்குறிப்பிட்ட வார்த்தைகளைக் கொண்ட ரூபவாஹினி செய்திப் பிரதியைத் தன்னிடம் வைத்துள்ளார். பல பிரதிகள் இதிலிருந்து எடுக்கப்பட்டு பலரிடம் கொடுத்துள்ளார். ஈ.பி.டி.பி. தலைவர் திரு.டக்ளஸ் தேவானந்தா அவர்களையும் தனது வீட்டுக்கு அழைத்து இப்பிரதியை திரு.பொன்னம்பலம் போட்டுக்காட்டியுள்ளார்.

பாரிஸ் நகரிலிருந்து வெளிவரும் "ஈழமுரசு" பத்திரிகையிலிருந்து கூட்டணியின் மூத்த தலைவர் திரு ஆனந்தசங்கரியுடன் தொடர்பு கொண்டனர். "ஜனாதிபதி தமிழர்கள் பற்றிக் கூறியது உண்மையா?" என்று கேட்டுள்ளனர். "அது வெறும் பொய். திரு.பொன்னம்பலம் பொய் சொல்லுகிறார்!" என்று அவர் கூறினாராம்.

கூட்டணியின் யாழ் மாநகரசபை உதவி முதல்வர் என்.ரவிராஜ், குமார் பொன்னம்பலத்துடன் தொடர்பு கொண்டு, ஒலிப்பதிவு நாடா கைவசம் இருக்கிறதா? என்று வினவினார். கூட்டணியைச் சேர்ந்த எவர் வந்தாலும் தான் அதனைப் போட்டுக்காட்டலாம் என்று பொன்னம்பலம் கூறியுள்ளார். நவம்பர் 3ம் திகதி போயா தினத்தன்று காலையில் தனது இல்லத்தில் அந்த ஒளிப்பதிவினைக் காட்டியுள்ளார். இதன் பின்னரே ஜனாதிபதியின் உரையை கூட்டணி கண்டித்திருந்தது.

இதற்கிடையில் கடந்த 31ம் திகதியன்று அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன இயக்குநரின் 'ஜனமண்டல' நிகழ்ச்சியில் நேயர் ஒருவரது வினாவுக்குப் பதிலளிக்கும்போது, ஜனாதிபதி அத்தகைய வார்த்தைகளைக் கூறவில்லை என்று திட்டவட்டமாகக் கூறினார்.

திரு.பொன்னம்பலம், ஜனாதிபதிக்கு கடந்த 29ம் திகதி மற்றுமொரு கடிதத்தை அனுப்பியுள்ளார். தென் ஆபிரிக்க தொலைக்காட்சிகளுக்கு கூறிய பேட்டியின் போது 'தமிழர்கள் இந்நாட்டுக்குரியவர்கள் அல்லர்' என்று தான் கூறவில்லை என்று ஜனாதிபதி தெரிவித்தால் அரசியலை அடியோடு மறந்துவிட்டுப்போவதாக திரு.பொன்னம்பலம் கூறியுள்ளார்.

அவ்வாறு கூறியிருப்பதற்கான ஆதாரம் தன்னிடம் இருப்பதால் ஜனாதிபதி பதவியை உடன் துறந்தும் விடுமாறும் சவால்விட்டுள்ளார்.

## இதுவரைகால போரில் பலியான புலிகள்

### ஆண்கள்-10975 பெண்கள்-2211

விடுதலைப் புலிகளின் மாவீரர் தின அனுஷ்டிப்பு நவம்பர் 21இல் ஆரம்பமாகி நவம்பர் 27இல் பூர்த்தியாகும்.

புலிகள் இயக்கத்தில் முதலில் பலியானவர் சத்தியநாதன் (சங்கர்). 27.11.1982 இல் சத்தியநாதன் பலியானார். அன்றிலிருந்து இவ்வாண்டு அக்டோபர் இறுதிவரை புலிகள் தரப்பில் 10 ஆயிரத்து 975 புலிகள் பலியாகி உள்ளனர்.

இவர்களில் கரும் புலிகளாக பலியானவர்களில் 37 பேர் பெண்கள், 109 பேர் ஆண்கள்.

'ஜயசிக்குறுய்' நடவடிக்கைக்கு எதிரான சமரில் அக்டோபர் இறுதிவரை பலியானோர் ஆண்புலிகள் 1373பேர். பெண் புலிகள் 514 பேர்.

## கணவன் மனைவி ஒரே குழியில்!

கிளிநொச்சியில் உதய நகரில் மலசலகூடக் குழி ஒன்றில் இருந்து இரண்டு எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன.

ஒரு எலும்புக்கூட்டில் ஆண்கள் அணியும் உள்ளாடையும், இன்னொரு எலும்புக் கூட்டில் பாவாடை சட்டையும் காணப்பட்டதாம். அதனால் எலும்புக்கூடுகள் இரண்டுக்கும் உரியவர்கள் கணவன் மனைவியாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இதற்கு முன்பும் உதயநகரில் சில எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டன. கிளிநொச்சி சமர் முடிந்த பின்னர் அங்கு சென்ற மக்களே அவற்றை கண்டெடுத்தனர்.

மேலும் எலும்புக்கூடுகள் அப்பகுதிகளில் இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

## இலண்டனில் தவ இயக்கம்

இலங்கைத் தமிழர்களின் துயர்தீர தவ இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வெரித்தாஸ் வானொலி தமிழ் பிரிவும், இலண்டன் பல்சமய ஒருங்கிணைப்புக் குழுவினரும் இணைந்து இந்த தவ இயக்கத்தை நடத்துகின்றனர்.

வாரத்தில் ஒரு விரதம் இருப்பது என்றும், அதனால் மிச்சமாகும் பணத்தை வன்னி மக்களுக்குச் சேரும் விதமாக தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் ஊடாக அனுப்பி வைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## கடலில் பறிப்பு

கடந்த 6ம் திகதி கடலுக்குச் சென்ற திருமலை நகரப்பகுதி மீனவர்களுக்குச் சொந்தமான எட்டு வெளியிணை மோட்டார்கள் கடலில் வைத்து இனந்தெரியாதவர்களால் அபகரித்துச் செல்லப்பட்டிருக்கின்றன. இந்தச் சம்பவம் கோணேசர் கோவிலை அண்டியுள்ள கடற்பரப்பில் நிகழ்ந்துள்ளது.

இதேவேளை நவம்பர் மாதம் 7ந் திகதி- சனிக்கிழமை காலை 8.30 அளவில் சல்லி ஏழாம் வட்டாரப் பகுதியில் பனங்கூடல் ஒன்றுக்குள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த விடுதலைப் புலிகளை இராணுவம் சுற்றி வளைத்துத் தாக்கியதில் ஒரு விடுதலைப்புலி கொல்லப்பட்டார். ஏனைய மூவர் தப்பிவிட்டனர். கொல்லப்பட்டவர் ராஜன் என்றழைக்கப்படும் கார்த்திகேசு விஸ்வராஜா என்று தெரியவருகிறது. விடுதலைப் புலிகளில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

## கலாசார அமைச்சில் தமிழுக்கு இடமில்லை

(நமது நிருபர்)

கலாசார அமைச்சால் அரச ஊழியர்களுக்கிடையிலான இலக்கியப் போட்டியொன்று நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்டது. இதில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா 1998.10.30ல் கொழும்பு ஜோன் டி சில்வா மண்டபத்தில் இடம்பெற்றது.

கலாசார அலுவல்கள் அமைச்சர் கௌரவ லக்ஷ்மன் ஜயக்கொடியும் வருகை தந்திருந்தார். மூன்றரை மணிநேர நிகழ்ச்சிகள். அத்தனையும் தனிச்சிங்களம். மருந்துக்குக்கூடத் தமிழ் இல்லை. தமிழ்ப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான சான்றிதழ் கூடத் தனிச்சிங்களம்.

உடுவை தில்லை நடராஜாவும் விழா ஏற்பாட்டாளர்களில் ஒருவர். சான்றிதழ் வழங்கும்போது எத்தனையாவது இடம் என்பது மாத்திரம் தமிழிலும் கூறப்பட்டது. கலாசார அமைச்சர் லக்ஷ்மன் ஜயக்கொடிதான் தொல்லை தவிர்ப்புக் குழு தலைவராகவும் இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நீர் விநியோகம் துண்டிப்பு!

### வேண்டுகோளை அடுத்து அனுமதி

கிழக்கில் படையினரின் நலன்கள் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளைத் தேடிப் பிடித்துச் சீர்குலைப்பதிலும், படையினரின் கண்காணிப்பின் கீழ் உள்ள நிருவாகப் பகுதிகளில் படிப்படியாகப் பல்வேறு தடைகளை ஏற்படுத்துவதிலும் புலிகள் இப்பொழுது குறியாக இருந்து வருகின்றனர்.

மட்டக்களப்பு-வாகனேரிக் குளத்திலிருந்து நாளாந்தம் பல இலட்சம் கலன் நீரை விநியோகிக்கும் மின்சார இணைப்பைத் புலிகள் துண்டித்ததன் மூலம் வாழைச்சேனை காகித ஆலைக் கம்பெனிக்கும் அந்த ஆலையில் அமைந்திருக்கும் இராணுவ பிரிகேடியர் தலைமையகம் உட்பட மேலும் இருபது இராணுவ முகாம்களுக்குமான நீர் விநியோகம் தடைப்பட்டது.

கடந்த 02.11.98 அன்றிரவு நீர் விநியோகத்திற்கான மின் விநியோகம் புலிகளால் துண்டிக்கப்பட்டது.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வாகனேரிப் பகுதியில் மின் விநியோகத்தை திருத்தியமைக்க புலிகளின் அனுமதி தேவை.

நீர் விநியோகத் துண்டிப்பால் படையினருக்கு தற்காலிக பாதிப்பு ஏற்பட்டது. எனினும் மேற்கொண்டு மகாவலி வெலிகந்தைப் பகுதியில் இருந்து நீர் விநியோகம் பெற படையினருக்கு பல வழிகள் இருந்தன. எனவே சாதாரண மக்களும், காகித ஆலையுமே தொடர்ந்து பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டது. காகித ஆலையில் ஆயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர்.

இதனையடுத்து புலிகளிடம் சென்று பொதுமக்கள் சார்பாக பேசப்பட்டது. நீர் விநியோகத்தை தடுக்க வேண்டாம் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இதன் பின்னர் நீர் விநியோகத்திற்கு புலிகள் அனு மதித்தனர். 08.11.98 முதல் காகித ஆலைக்கும் நீர்விநியோகம் வழமைபோல் கிடைத்தது.

## "மன்னிப்புக் கேட்கவேண்டும் அமைச்சர்"

### ரெலோ இயக்கம் கண்டனம்

"தமிழ் மக்கள் இந்த நாட்டின் பூர்வீகக் குடிகளல்ல என்று ஜனாதிபதி சந்திரிக்கா தென்னாபிரிக்க தொலைக்காட்சிப் பேட்டியில் கூறியுள்ளார். அதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். அதற்காக ஜனாதிபதி தமிழ் மக்களிடம் வருத்தம் தெரிவிக்க வேண்டும்.

அவ்வாறு பேட்டி அளிக்கப்படவில்லை என்று கூறிய வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மன்னிப்புக் கேட்க வேண்டும்!" இவ்வாறு ரெலோ இயக்கம் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

ரெலோவின் நாலாவது தேசிய மாநாடு கொழும்பில் கடந்த 7ம் 8ம் திகதிகளில் நடைபெற்றபோதே மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டது.

இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு போர் நிறுத்தம் ஒன்றை மேற்கொள்வதுடன் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் முன்னிலையில் அரசும், புலிகளும் அரசியல் பேச்சு நடத்தவேண்டும் என்றும் ரெலோ தெரிவித்துள்ளது.

சமீபத்தில் ஜனாதிபதி கூட்டிய மாநாட்டில் கலந்துகொள்ளாமல் ரெலோ புறக்கணித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

வல்வெட்டித்துறை நகரசபை ரெலோ விடமே இருக்கிறது.

## மின் கம்பங்களின் கீழ் பொறி வெடிகள்!

### மட்டக்களப்பில் இரண்டு நிர்வாகம்

மட்டக்களப்புக்கும் அதனோடு இணைந்த நகரங்களுக்குமான இரு வழி மின் விநியோகத்தையும் கடந்த ஒக்டோபர் 10ஆம் திகதி முதல் புலிகள் துண்டித்து விட்டனர்.

ஹபறணை ஊடான மின் விநியோக வழியில் உள்ள 29 மின் கம்பங்களும் சாய்க்கப்பட்டன. இந்த மின் கம்பங்கள் சாய்க்கப்பட்ட இடங்கள் படையினரின் முகாம்களை அண்டிய கண்காணிப்புப் பகுதிகளாகும்.

இதனால் படையினரின் முனைப்புக் காரணமாக மின் கம்பங்களைத் திருத்தம் செய்யுமாறு கட்டாயப்படுத்தக்கூடும் என்ற ஊகங்கள் வெளியாகின.

தமது அனுமதியின்றி திருத்த வேலைக்குச் செல்ல வேண்டாமெனப் புலிகள் மின்சார சபை ஊழியர்களுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தனர். முன்னரே திருத்த வேலைக்குச் சென்றவர்களை விசாரணைக்கும் அழைத்திருந்தனர். அதனையடுத்து இ.மி.ச. ஊழியர்கள் அனைவரும் திருத்த வேலைக்குச் செல்வதில்லை என மின் பொறியியலாளருக்குத் தனித்தனிக் கடிதமெழுதியிருந்தனர்.

ஒருபுறம் படையினரின் பணிப்புரை கலந்த அரச நிர்வாகம்- மறுபுறம் புலிகளின் நிர்வாகம். இந்த இழுபறி நிலவிவரும் இவ்வேளையில் சாய்க்கப்பட்ட மின் கம்பங்களின் அடியில் பொறிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதை சில சம்பவங்கள் உறுதிப்படுத்துகின்றன.

அறுத்துச் சாய்க்கப்பட்ட மின் கம்பங்களின் அடியில் நின்றிருந்த இரு சிறுவர்கள் பொறி வெடியில் சிக்கியபோது ஒருவர் தனது காலை இழந்தார். ஏறாவூர்- ஆறுமுகத்தான்குடியிருப்பில் இது நிகழ்ந்தது. என். பவழசிங்கம் (14) என்பவரே காலை இழந்தவராகும். கே. தெய்வேந்திரன் (12) எனும் மற்றொரு சிறுவன் காயமடைந்தான். இச்சம்பவம் 06.11.98 அன்று இடம்பெற்றது.

அன்றைய தினம் இடம்பெற்ற மேலும் இருசம்பவங்களில் மாவடிவெம்பு இராணுவ முகாமைச் சேர்ந்த டி.எம்.தஸநாயக்க எனும் படைவீரர் பொறி வெடியில் அகப்பட்டுத் தனது காலை இழந்தார். கொம்மாதுறைப் படைமுகாமைச் சேர்ந்த எஸ்.எஸ். வைத்தியரெட்ண என்பவரும் பொறி வெடியில் சிக்கிக் காயப்பட்டார்.

## விறகு விற்கப் புலிகள் தடை!

மட்டக்களப்பு மாவட்டத்தில் தங்கள் வசமுள்ள காட்டுப் பகுதிகளிலிருந்து படையினரின் கண்காணிப்பின் கீழுள்ள நகரப் பகுதிகளுக்கு விறகு கொண்டு சென்று விற்பனை செய்வதைப் புலிகள் கடந்தவாரம் முதல் தடைசெய்துள்ளனர்.

இதுவரை காலமும் விறகு வெட்டி விற்பனை செய்து வந்த தொழிலாளர்களைத் தடுத்து நிறுத்தி இனிமேல் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்கு விறகு கொண்டு சென்று விற்பனை செய்ய வேண்டாம் என்று புலிகள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

படையினரின் கண்காணிப்பின் கீழுள்ள பகுதிகளுக்கான மின் விநியோகத்தையும் புலிகள் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாகத் தடைப்படுத்தி விட்டனர். இதனால் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள நகரின் இயல்பு வாழ்க்கை, தற்சமயம் விறகுத் தடைகொண்டுவரப் பட்டுள்ளதால் மேலும் மோசமடைந்துள்ளது.

விறகுப் பாவினை தடைப்படுத்தப் பட்டுள்ளதன் காரணமாக மண்ணெண்ணெய் அடுப்புகளுக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. மண் எண்ணெய் பெறுவதற்காக எரிபொருள் நிலையங்களில் மக்கள் நாளாந்தம் முண்டியடிக்கின்றனர்.

மின்சாரத் துண்டிப்புக் காரணமாக படையினருக்கும், பொலிஸாருக்கும் பெரும் பாதிப்புக்கள் ஏற்படவில்லை. சுயமான ஜெனரேற்றர்கள் மூலம் அவர்கள் மின் வசதியைப் பெறுகின்றனர்.

## திரும்பிச் சென்ற நிதி–படையினர் ஒத்துழைப்பில்லை!

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்திலுள்ள நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் புதிய பிரதேச செயலகம் அமைக்க ஒதுக்கப்பட்ட 50 இலட்சம் ரூபா நிதி திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

மன்னார் கச்சேரி நிர்வாகமே இதனை திருப்பி அனுப்பிவைத்துள்ளது. பாதுகாப்புத் தரப்பினரின் பூரண ஒத்துழைப்பு இன்மையே இந்நிதி திருப்பி அனுப்பப்பட்டமைக்குக் காரணம் ஆகும்.

நானாட்டான் பிரதேசம் கடந்த 1997 ஆம் ஆண்டு எடிபல' இராணுவ நடவடிக்கையின் பின் படையினரால் கைப்பற்றப் பட்ட பகுதியாகும். எனினும் முற்றுமுழுதாக இப்பகுதி படையினரின் கட்டுப்பாட்டில் இல்லை.

இதனால் இப்பகுதியில் சீமெந்து கொண்டு சென்று பிரதேச செயலகம் அமைக்க பாதுகாப்புத் தரப்பினர் சற்று இறுக்கமான நடைமுறையைக் கையாண்டனர். சீமெந்து புலிகளுக்கு சென்றுவிடக்கூடாது என்பதே இதற்கான காரணம் என்று கூறப்பட்டதாம்.

இதன்படி 5 சீமெந்துப் பக்கெட்டுக்கள் மாத்திரமே அப்பகுதிக்குக் கொண்டு சென்று அதனைப் பயன்படுத்திய பின் மீண்டும் வெற்றுப் பைகளை காட்டிய பின்பே மீண்டும் 5 பக்கட் சீமெந்து கொண்டுசெல்ல முடியும் என அறிவிக்கப்பட்டது.

டிசம்பருக்குள் இவ்வாறு கொண்டு சென்று கட்டடம் அமைக்க முடியாதநிலை ஏற்பட்டது. இதனையடுத்தே இந்நிதி திருப்பி அனுப்பப்பட்டது.

இதேவேளை வவுனியாவில் இருந்து மன்னாருக்கு மா மூடைகளுடன் வந்த லொறி ஒன்றில் தடைசெய்யப்பட்ட ஊசிமருந்துகள் கொண்டுவரப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து சாரதியும், நடத்துனரும் தலைமறைவாகியுள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com

# "மின்சாரம், போக்குவரத்து என்ற போர்வையில் எம்மை நசுக்குவதே அரசின் நோக்கம்!"

## பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவிப்பு!

யாழ்ப்பாண் பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் இவ்வளவு நாட்களாக மௌன மொழியையே வெளிப்படுத்திருந்தோம். காலாகாலமாக தனித்துவமாக கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்த நாம் வாய்மூடி மௌனியாகும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டோம். இருப்பினும் இனியும் எம்மால் கருத்துச் சுதந்திரத்தைக் கட்டிப்போட முடியாது. எமது இரு சக மாணவிகளின் மரணத்திற்கான முழுப் பொறுப்பையும் அரசாங்கமே ஏற்றுக் கொள்ள வேண்டும். இராணுவக் கட்டுப்பாடு-அதன் மூலமான சுதந்திரம், அடிப்படை வசதிகளான மின்சாரம், போக்குவரத்து என்ற போர்வையில் அரசாங்கம் எம்மை இராணுவப் போர்வைக்குள் குளிர் காயவைக்கிறது. அடிப்படையில் இவர்கள் எங்கள் நலன்களில் அக்கறை கொண்டவர்களாகக் காட்டிக்கொண்டாலும் அவர்களுடைய முழுக்கவனமும் இராணுவ மேலாண்மைக் கரங்களால் எம்மை நசுக்குவதேயாகும்."

இவ்வாறு யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் என்ற பெயரில் யாழ்ப்பாணத்தில் விநியோகிக்கப்பட்டுள்ள பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எமது வளாகத்தைச் சேர்ந்த 3 மாணவர்கள் உள்ளிட்ட 600க்கும் மேற்பட்டவர்கள் காணாமல் போய்விட்ட நிலையில், செம்மணி புதைகுழியைத் தோண்டுவதற்கான முயற்சியில் அரசு பின்னிற்கிறது. புதைகுழிகளின் எலும்புகளை எண்ணி ஆட்சிப் பீடம் ஏறியவர்கள் இன்று அதனை எண்ணிப் பயங்கொள்கின்றனர். இனியும் போர்மூலம் சமாதானம் என்றுகூறி மக்களை ஏமாற்றமுடியாது. உங்கள் கொள்கைகள் யாவுமே தோற்றுப்போகும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

அரசின் பிற்போக்குத்தனத்துக்கு பக்கப்பாட்டுப் பாடுகின்றன எமதருமைச் சகோதரர்களே! இனிமேலாவது உங்கள் துரோகத்தனத்துக்கு முடிவுகட்டுங்கள். யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் என்ற போர்வையில் கொழும்பிலிருந்து அகலமாய் அறிக்கைவிடும் உங்கள் குரல்கள் செம்மணிக்கு மட்டும் ஏன் அடங்கிப் போனது? நீங்கள் உங்கள் சுகபோகங்களுக்குள் எங்கள் உரிமைகளை புடம்போட்டுப் பார்க்கின்றீர்களேயன்றி உருப்படியாக உங்களால் என்னதான் செய்யமுடிகிறது?

வன்னியில் பலநாட்களாக உண்ணாவிரதம் இருந்து பட்டினிச்சாவை எதிர்கொள்கின்ற மக்களுக்காக எத்தனைபேர் குரல் கொடுத்தீர்கள்? மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிப்பதுபோல் ஏற்கனவே போரின் தாக்கத்தால் காயப்பட்ட மக்களை மேலும் பொருளாதாரத் தடையாலும் நிவாரணத் தடையாலும் அவர்களின்மேல் ஆற்றமுடியாத வடுக்களை ஏற்படுத்துகிறீர்கள். 20,000க்கு மேற்பட்ட சிறுவர்கள் பாலியல் துன்புறுத்தலில் (SEXUAL ABUSE) ஈடுபட்டு வெளிநாடுகளில் களங்கம் ஏற்படக் காரணமானவர்களை முன்னிறுத்தாதவர்கள்ப் போரில் ஈடுபடும் சிறுவர்களைப்பற்றி பேசுவது எந்தளவிற்கு நியாயமாகும்?

* முடிவாக-இனிமேலாவது சமாதானத்தைப்பற்றிச் சிந்தியுங்கள்.
* பேச்சு வார்த்தைக்கான மூலோபாயங்களைத் தேடுங்கள்.
* பாதைகளை அடைத்து பயணங்களை பயங்கரமாக்கும் பயங்கரவாதத்தை கைவிடுங்கள்.
* ஆக்கிரமிப்பை நிறுத்துங்கள்.
* செய்தித்தடையால் உங்கள் முகங்களுக்கு சாயமிடும் போக்கை மாற்றுங்கள்.

இவ்வாறு அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பின் அரச நிர்வாகம் இழுபறி நிலையில்!

சமீப சில நாட்களாக கிழக்கு மக்களுக்கிடையில் ஒருவகைக் கொந்தளிப்பு நிலை உருவாகியுள்ளது. வடபகுதிச் சமரின் உக்கிரத்தின் விளைவாகவே இந்நிலையேற்பட்டிருக்கிறதென்று அவதானிகள் கருதுகின்றார்கள்.

கிழக்கிலும் அரச நிருவாகத்தை முடக்கும் நடவடிக்கையில் புலிகள் இறங்கக்கூடும் என்ற பரவலான கதை அடிபடுகிறது. வரும் இரு மாதங்களுக்குள் பலப்பிரயோகத்தின் மூலம் ஏதோ ஒரு இலக்கை எட்டும் நடவடிக்கையில் தங்களை முடுக்கி விட்டிருப்பதாக புலிகள் பொதுமக்களுக்குத் தெரிவித்து வருவதாக அறியவருகிறது.

"சமர் இறுதிக் கட்டத்தை நெருங்கும் போது சகல தமிழ் பேசும் மக்களையும் (முஸ்லிம்கள் உட்பட) பராமரிக்க வேண்டிய கட்டாயம் விரைவில் ஏற்படக்கூடும். ஆகையால் வரும் ஒருசில மாதங்களில் உங்கள் பூரண ஒத்துழைப்பு எமக்குத் தேவை" என்று அவர்களால் அழைக்கப்பட்ட பல முக்கிய பிரமுகர்களிடம் புலிகளின் உள்ளூர்த் தலைமைகள் தெரிவித்தனவாம்.

படையினர் நகருக்குள் ஆயுத முனையில் அரச நிர்வாகத்தை நடைமுறைப்படுத்த உதவுவதாகக் கூறிக்கொண்டாலும், கடிதங்கள் மூலம் அந்த நிர்வாகத்தை முடங்க வைப்பதில் அல்லது தமக்குச் சாதகமாக அமைத்துக் கொள்வதில் புலிகள் கைதேர்ந்தவர்களாக உள்ளனர்.

புலிகளின் அங்கீகாரமின்றி நேரடியாக எதுவும் செய்ய முடியாதென்று அரசின் உயர் மட்டப் பிரதிநிதி ஒருவரே (பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்) அம்மையாரிடம் தெரிவித்தாராம்.

"புலிகளின் சிபார்சின் பேரிலேயே இங்கு எந்தவொரு கருமமும் நடைபெறுகிறதென்பது வெளிப்படை. அத்தியாவசியத் தேவைகள் முதற்கொண்டு அனைத்து அபிவிருத்தித் திட்டங்களுக்கும் புலிகளின் அனுமதி பெறவேண்டும்" என்று தன்னை இனம் காட்டிக்கொள்ள விரும்பாத உயரதிகாரியொருவர் சொன்னார்.

# அதிகாரிக்கு ஏற்பட்ட அதிருப்தி!

## "எம் பணி மரம் வெட்டுவதா?"

வவுனியாவிலிருந்து மாங்குளம் வரையிலான A9 நெடுஞ்சாலையின் இருபுறமும் 50 மீட்டர்வரை காடுகளை வெட்டி வெளியாக்கி விடுமாறு ஜயசிக்குறுய் படையினருக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டதாகத் தெரிகிறது. பல்லாண்டு காலமாக நிலையாக நிற்கும் மாபெரும் மரங்களும் பல்லாயிரக் கணக்கில் இப்பாதையின் இருமருங்கும் காணப்படுகின்றன.

புலிகள் பதுங்கியிருந்து படையினரைத் தாக்காமலிருக்க மட்டுமல்லாமல் அப்பாதையை ஒட்டியே ஹெலிக்கொப்டர்கள் பறந்து செல்வதற்கு வசதியாக இருப்பதற்கான ஏற்பாடு இது என்று கூறப்படுகிறது. பாதையின் மேலாகப் பறந்து செல்லும்போது, அப்பாதையின் அருகிலுள்ள காடுகளிலிருந்த வண்ணம் புலிகள் ஏவுகணைகளை ஏவாமலிருப்பதற்கும் இக்காடுகளை அழிப்பதே ஒரேவழி என்று இராணுவ மேலிடம் கருதுகிறதாம்.

காடுகளை வெட்டி வெளியாக்கும் பணியில் படையினரை ஈடுபடுத்துமாறு இராணுவ உயர்பீடம் விடுத்த கட்டளை, கேர்ணல் தரத்திலுள்ள இராணுவ அதிகாரி ஒருவரைக் கடுப்பாக்கியுள்ளதாம். "எமது வீரர்கள், மரம் வெட்டும் பணிக்காகப் பயிற்றப்பட்டவர்களல்லவே..!" என்று தனது எதிர்ப்பைத் தெரிவித்தாராம்.

# பிரேக் இல்லை!

வாகனப்போக்குவரத்து ஒழுங்கு விதிகளை முறையாகக் கடைப்பிடிக்காதோரால் தான் அடிக்கடி விபத்துக்கள் சம்பவித்து உயிரிழப்புக்களும், சொத்து இழப்புக்களும் ஏற்படுவதாக அதிகாரியொருவர் சொன்னார்.

செங்கலடியில் 66 வயதுடைய பாபத்தக்குட்டி என்பவர்மீது உழவு இயந்திர டயர் ஏறிச் சென்றதால் அவர் நசுங்குண்டு மரணமானார். அந்த உழவு இயந்திரத்தைப் பரிசோதித்த மோட்டார் வாகனப் போக்குவரத்துப் பரிசோதகர், அதற்கு சிறிதுகூட பிரேக் இல்லாதிருந்ததைக் கண்டுபிடித்தார். சாரதி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். கடந்தவாரம் மட்டக்களப்பில் பல விபத்துக்கள் சம்பவித்தன.


**ஸ்டுடியோ சாயா**

வீடியோ, போட்டோ, பிரேமிங், லேமினேஷன், டியூரோகாட்.

40 1/1, காலி வீதி, வெள்ளவத்தை. தொ.பே.:594492

**எச்சரிக்கை**

வீடியோ கசற்றின் நாடாக்கள் பங்கஸ் (Fungus) படிவுகள் மூலம் அழிந்துவிடும். காலம் தாழ்த்தாது நாடாக்களில் உள்ளதை V-CDயில் பதிவு செய்து 100 வருட உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளுங்கள். 2000ம் ஆண்டளவில் வீடியோ நாடாக்கள் பாவனையிலிருந்து விலகி V-CD பாவனைக்கு வந்துவிடும். காரணம் பல. அவற்றில் சில:

| விபரம் | வீடியோ-டெக் | வீடியோ C.D.தட்டு |
|---|---|---|
| சந்தைவிலை | அதிகம் | குறைவு |
| தரம் | 30% - 70% | 95% |
| பிரச்சனைகள் | அதிகம் | குறைவு |
| நாடாக்கள், தட்டு | வெட்டும்! கசங்கும் | --- |
| கணனியுடன் தொடர்பு | --- | கணனியில் (Computer) பார்க்கலாம் |

**STUDIO CHHAYA**

40 1/1, GALLE ROAD, (NEXT TO HONGKONG BANK)
WELLAWATTA, COLOMBO-06. T.P:- 594492

**இலவச ஆங்கில பாடநெறி**

**தபால் மூலம்**

ஆங்கிலம் சரளமாக பேச, எழுத, வாசிக்க வேண்டும் என்கிற விருப்பம், தவறாக பேசி விடுவோமோ என்கிற தயக்கம்
இது தானே உங்கள் பிரச்சினை?

சரளமாக ஆங்கிலம் எழுத, பேச, வாசிக்க பயிற்சி அளிக்கும் 90 நாட்கள் ஆங்கில பாடநெறி

**விண்ணப்ப முடிவுத் திகதி: 30.11.1998**

பதிவுக் கட்டணம் மட்டும் அறவிடப்படும்.

இவ்விசேட புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் 1000 மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவர்.

மேலதிக விபரங்களுக்கு 077-801245 என்ற தொலைபேசி இலக்கத்துடன் அல்லது 2.50 முத்திரை ஒட்டப்பட்ட சுயவிலாசம் எழுதப்பட்ட நீள கடிதவுறையை அனுப்பி பெற்றுக்கொள்ள முடியும்.

**I. L. C. International**
**P. O. Box 119,**
**Kandy.**
Tel. 077-801245, Fax : 0094-74-473366

The Student கல்வி இதழ் ஆறு மாதங்களுக்கு இலவசமாக வழங்கப்படும்.

**வத்தளையில்** புதிய கணனி வகுப்புகள் (A/L முடிந்த மாணவர்களுக்காகவும்) (Page Maker, Corel Draw, MS Excel, MS Access, MS Word, Word Perfect, Lotus 1-2-3, dBase III+, Diploma in Desktop Publishing, Diploma in Windows) திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் ஆரம்பமாகின்றன. தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. அத்துடன் Type Setting செய்து கொடுக்கப்படும்.

**D.S. COMPUTER STUDIES** 6A, HEKITTA ROAD, WATTALA. TEL: 075-349247



**மலையாள மாந்திரிகம்**



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இது தான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்த செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
**P.K. SAAMI J.D.G.A.N&JP**
**SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.**

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831

**மனோதத்துவ வைத்தியம்**
வவுனியாவிலும் சந்திக்கலாம்

இளைஞர்களே! சக்தி இழந்து மெலிந்து, நித்திரையின்மை, பயம் நடுக்கம், ஞாபக மறதி, தாழ்வு மனப்பான்மை ஏற்படக்காரணமான தவறுகளை நிறுத்தி எதிர்காலம் பிரகாசிக்க பிரபல மனோதத்துவ நிபுணர் DR.P.ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

**SEXUAL DISORDERS (தாம்பத்திய கோளாறுகள்)**

தாம்பத்திய கோளாறுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணமாகும். என்பதை 90 நிமிடத்தில், நான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்தே பணம் பெறப்படும்.

**வெளிநாட்டில் வசிப்போருக்குவிஷேட ஏற்பாடுகள்**

எந்தவித தாம்பத்திய பாதிப்புனாலும் தயக்கமின்றி எழுதவும். உமது கேள்விகளுக்கு விரிவான பதில் தந்தபின் முடியாதவன், இயலாதவன் என்ற தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை பதிவு நாடா மூலமும், உடல் பாதிப்பிற்கு நல்ல மூலிகை மருந்தும் பெற்று தாம்பத்திய குறைகளை முற்றாக நீங்கிய ஆண்மகனாகுங்கள். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) பதில் பெற முத்திரை செலவு அனுப்பவும்.

**மட்டக்களப்பு விலாசத்திற்கு மட்டும் கடிதத் தொடர்பு கொள்ளவும்**

நீரிழிவு நோய் முற்றாக சுகமாக்கலாம். மனநோய்கள், தாழ்வு மனப்பான்மை 'ஹிஸ்டீரியா' என்பனவற்றுக்கும் மனோதத்துவ சிகிச்சை உண்டு. ஆஸ்துமா, தலையிடி, வாதம், வெள்ளை போதல், கிரந்திநோய், குழந்தை பேறு இன்மை, முடி உதிர்தல் எல்லாவற்றுக்கும் மருந்துகள் உண்டு.

**கொழும்பில் நவம்பர் 22 முதல் 30 வரை**

DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
BEAUTY LODGE, 67A, WOLFENDHAL STREET, COLOMBO-13
T.P. 338165, 338166 (5 லாம்புச்சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது) (ஆட்டுப்பட்டித் தெரு)
கொழும்பு நாட்களில் மட்டும் செல்லெடல் No-072-609388

**வவுனியாவில் டிசம்பர் 12,13,14 திகதிகளில்**

(Vanni Inn) 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை வவுனியாவில் சந்திக்கலாம். T.P.024-22074

**கல்முனையில் டிசம்பர் 5,6 திகதிகளில்**

T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 067- 29329

RESIDENT T.P:- 065-24019

கடிதத் தொடர்பு:
**DR.P.ARUMUGAM S.A.M.P.,**
**NO.33. Tissa Weerasingam sq.,**
**Boundary Road, Batticaloa. SRI LANKA.**

**நீங்கா நினைவில் ஆறாம் மாதம்**



வல்வை இயற்றமிழ் போதகாசிரியர்
வல்வை வயித்திலிங்கப் புலவர் பேரன்

**அமரர் சங்கர நமசிவாயம் வேலுப்பிள்ளை**

C/8, பாக் வீதி, அன்டசன் தொடர்மாடி,
நாராஹென்பிட்டி, கொழும்பு.05.

**VAKMIN**

100% CHOLESTROL FREE

**தூய வாக்மின் நல்லெண்ணெய்**
**PURE VAKMIN GINGELY OIL**

உங்கள் உணவு-மருத்துவத் தேவைகளுக்கு பாரம்பரிய முறைத் தயாரிப்பு-500g அழகிய வண்ணப் (STAND UP POUCHES) பொதிகளில் கிடைக்கும்.
இல்லத்தரசிகளின் இணையற்ற தெரிவு.
உள்ளூர், வெளிநாட்டு விற்பனைமுகவர்கள் தொடர்பு கொள்க:

**VAKMIN INTERNATIONAL**
253/3, DAM STREET, COLOMBO 12.
SRI LANKA.
TEL: 421987. FAX: 075 332414

TRUE TRADITIONAL TASTE

*Vakmin the Symbol of Taste & Quality.*

GUARANTEED PURE

**சித்தர் மாந்திரீகம்**

அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 21ந் திகதி வரை தொடர்பு

**SHAKTHY SARAVANA,**
30/16, MALLIKA LANE, WELLAWATTA, COLOMBO-06.
TELE PHONE: 500067. (நன்மை பயப்பவை மட்டும் செய்து தரப்படும்)

வியாழன் விடுமுறை




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# மாவீரர்தின இலக்கு எது? பாய்ச்சல் எந்த முனையில்?

## இருதரப்பும் அனுஷ்டிக்கும் மாவீரர்தினம் பிரபாவுக்கு 44 வயது 25 வருட அனுபவம்!

லயன் எயார் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதை அடுத்து பயணிகள் விமான சேவை நிறுத்தப்பட்டது.

இதற்கு காரணம் பயணிகள் உயிர் மீதான அக்கறையல்ல என்று சென்றவாரம் இப்பகுதியில் கூறியிருந்தோம்.

ஜனாதிபதிக்கும், மூன்று தமிழ் கட்சிகளுக்கும் இடையேயான சந்திப்பில் ஜனாதிபதி கூறிய கருத்து அதனை உறுதி செய்திருக்கிறது.

பயணிகள் விமான சேவையை நடத்தினால், விமானத்தை புலிகள் கடத்த சந்தர்ப்பம் இருக்கிறது. அதனால் விமான சேவைக்கு அனுமதி கொடுக்கவே போவதில்லை! என்று திட்டவட்டமாக கூறினாராம்.

விமானத்தை கடத்தி பயணிகளை இறக்கிவிட்டு, அதே விமானத்தில் பறந்து வந்து புலிகள் தாக்கலாம் என்று அரசு அஞ்சுகிறது. ஆகவே தடையை நீடிக்கிறது.

யாழ் குடாநாடு தமிழ் பகுதி, பயணம் செய்பவர்கள் முழுக்க முழுக்க தமிழர்கள் என்பதால்தான் அரசு சந்தேகப்பார்வை பார்க்கிறது என்று கூற இடமிருக்கிறது.

ஏனெனில்; புலிகள் பயணிகள் உருவில் வந்து விமானத்தை கடத்துவார்கள் என்று பயந்தால், நாட்டில் சகல பயணிகள் விமான சேவைகளையும் நிறுத்தியிருக்க வேண்டுமே! சர்வதேச விமான நிலையத்தை இழுத்து முடியிருக்க வேண்டுமே!

கடும் சோதனைக்கு பின்னர்தான் இரத்மலானையிலும், பலாலியிலும் பயணிகள் விமானத்திற்குள் அனுமதிக்கப்படுகிறார்கள். அப்படியிருக்க விமானத்தை புலிகள் எப்படி கடத்த முடியும். கடத்துவதற்கு ஆயுதம் எப்படி கொண்டு செல்ல முடியும்? என்று தமிழ்க் கட்சி தலைவர் ஒருவர் ஜனாதிபதியிடம் கேட்டாராம்.

'புலிகள் வெறுங்கையை பாவித்துக் கூட கடத்தக் கூடியவர்கள்' என்று பதில் வந்ததாம்.

அந்தப் பதிலின்படி பார்த்தால்கூட நாட்டின் சகல பயணிகள் விமான சேவைகளையும் நிறுத்தியே ஆகவேண்டும்.

ஆனால், தமிழ்ப் பகுதிகள், முழுக்க முழுக்க தமிழ்ப் பயணிகள் என்ற கண்ணோட்டத்தில்தான் யாழ் செல்லும் விமானங்கள் கடத்தப்படலாம் என்ற சந்தேகம் எழுந்திருக்கிறது.

எனவே, ஒரு கல்லில் இரு மாங்காய் அடித்திருக்கிறார்கள்.

விமான சேவையை நிறுத்தினால் யாழ் மக்கள் புலிகளில் அதிருப்தி அடைய வைக்கலாம் என்பது ஒரு காரணம்.

விமானத்தை புலிகள் கடத்தி தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சமும் விமான சேவை நிறுத்தத்தால் இல்லாமல் போய்விடும். இது இரண்டாவது காரணம்.

படையினரும் பயணம் செய்வதால் விமானசேவை நடத்தக்கூடாது என்று புலிகள் கூறியபோது சில தமிழ்க் குழுக்கள் கண்டன அறிக்கை விட்டன.

பயணிகள் உருவில் புலிகள் வரலாம் என்று கருதியே விமான சேவையை நிறுத்தி வைத்துள்ளதாக ஜனாதிபதியும் கூறியுள்ளார். இதனை மட்டும் அத் தமிழ்க் குழுக்கள் கண்டிக்கவும் இல்லை. மூச்சுக்காட்டவும் இல்லை.

ஜனநாயகம், மனித உரிமை என்று வாய் நோகாமல் கூறியபடி தமிழ்க் கட்சிகள் விடுக்கும் அறிக்கைகளும், எடுக்கும் நிலைப்பாடுகளும் எங்கே போகின்றன? என்ற கேள்வி தமிழ் மக்கள் மத்தியில் எழுந்து, விடை கிடைத்ததும், இக் கட்சிகள் மீதான கடும் வெறுப்பாக மாறிவருகின்றன.

–★–

விடுதலைப் புலிகளது மாவீரர் தினம் நெருங்கி வந்துவிட்டது. கூடவே பிரபாகரனின் பிறந்த தினமும் (நவம்பர் 26) வருகிறது.

மாவீரர் தினத்தை புலிகள் மட்டுமன்றி படைத்தரப்பும் அனுஷ்டிக்க வேண்டிய கட்டாயம்.

தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புலிகளும், அரச கட்டுப்பாட்டு பகுதிகளில் படைத்தரப்பும் மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பர் என்று கூறுவது தவறாக இருக்காது.

இம்முறை புலிகளது தாக்குதல் எந்த முனையில் நடக்கும் என்பதை ஊகிக்க முடியாமல் சகல முனைகளிலும் படைத்தரப்பு உஷாராக இருக்க வேண்டியிருக்கும்.

வன்னியில் பாரிய தாக்குதல் ஒன்றுக்கு புலிகள் ஒன்று திரள்வதாக புலனாய்வுத்துறை படையினரை எச்சரித்துள்ளது என்று படைத்தரப்பு கூறியுள்ளது.

தனக்கு கிடைத்த தகவலை படை உயர் மட்டத்திற்கு புலனாய்வுத் துறை கூறுவது மிக இரகசியமான விஷயம்.

அதனை ஏன் பத்திரிகைகளுக்கு தெரிவிக்க வேண்டும்? தகவலை இரகசியமாக வைத்திருந்து, தாக்கவரும் புலிகளை முறியடிக்க தயாராக வேண்டியதுதானே?

இராணுவ தணிக்கை மத்தியில் இப்படியொரு செய்தி வெளியிடப்பட்டமைக்கு என்ன காரணம்?

புலிகள் வன்னியில் தாக்குவார்கள் என்பது தமக்கு தெரிந்துவிட்டது என்று காட்டிக் கொண்டால் புலிகள் அங்கு தாக்கமாட்டார்கள் என்று கருதித்தான் அச் செய்தி வெளியிடப்பட்டிருக்கலாம்.

புலிகளது பாரிய தாக்குதலை களமுனையில் எதிர்கொள்ளாமல், தந்திரோபாயமாக தடுத்துவிடத்தான் படைத்தரப்பு முயற்சிக்கிறது.

'ஜயசிக்குறுய்' படை நடவடிக்கையை ஆரம்பித்தபோது பெருமளவு புலிகளை சண்டைக்கிழுத்து அழிப்பதையும் படையினர் நோக்கமாகக் கொண்டிருந்தனர்.

ஆனால் தற்போது வன்னியில் புலிகள் ஒன்று குவிந்து பெரும் தாக்குதலுக்கு தயாராகி விடக்கூடாதே என்ற கவலை படைத்தரப்புக்கு இருப்பதாக தெரிகிறது.

சமீபத்தில் படைத்தரப்பு அதிகாரிகள் பலர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

'ஜயசிக்குறுய்' படை நடவடிக்கை ஆரம்பமாகி பதினெட்டு மாதங்களாகின்றன. இந்த பதினெட்டு மாதங்களில் புலிகள் தரப்பில் தளபதிகள் எவரும் மாற்றப்படவில்லை.

படைத்தரப்பில் பலமுறை அதிகாரிகள் இடமாற்றப்பட்டுள்ளனர். பொறுப்புக்கள் மாற்றப்பட்டன.

அவ்வாறு இருந்தும் 'ஜயசிக்குறுய்' படையினரின் நகர்வுகளில் குறிப்பிடத்தக்க பாய்ச்சல் எதுவும் ஏற்படவில்லை.

அதிகாரிகளை மாற்றுவதால் மட்டும் களமுனையில் மாற்றங்கள் ஏற்படமாட்டாது.

கிளிநொச்சியில் ஏற்பட்ட பாரியபின்னடைவின் பின்னர் அதிகாரிகளை மாற்றுவது படைத்தரப்புக்கு உற்சாகம் தரும் என்று நினைத்து மாற்றங்கள் நடந்திருக்கின்றன.

மாங்குளத்தை பிடித்து விட்டதாகவும், புலிகளது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியை கைப்பற்றியதால் இனிமேல் புலிகளுக்கு தாக்குப்பிடிக்க முடியாது என்றும் அரச பிரசார சாதனங்கள் கூறின.

மாங்குளம் பகுதியை படையினர் கைப்பற்றி தற்போது ஒன்றரை மாதங்களாகியும், மேற் கொண்டு முன்னேறியதாக படைத்தரப்பு செய்திகள்கூட தெரிவிக்கவில்லை.

புலிகள் கிளிநொச்சி நகரை கைப்பற்றிய பின்னர் மாங்குளத்திற்கு இருந்த இராணுவ முக்கியத்தும் இல்லாமல் போய்விட்டது.

கிளிநொச்சியையும் தக்கவைத்தபடி மாங்குளத்தில் நீண்ட முன்னரங்கில் தமது அணிகளை நிறுத்திவைத்திருப்பதனால் பெரும் ஆட்பலத்தை புலிகள் அதிலே முடக்கியாக வேண்டியிருக்கும்.

அதனால் மாங்குளத்தின் நீண்ட முன்னரங்கப் பகுதிகளைவிட்டு தமது அணிகளை உள் இழுத்தனர் புலிகள்.

எப்படி, எப்போது பின்நகர்வது, எங்கு அடுத்த தடையை நிறுவி தடுப்பு யுத்தம் செய்வது என்பதையும் புலிகளே தீர்மானிக்கின்றனர்.

ஒன்றரை மாதகாலமாக மாங்குளப் பகுதியில் இருந்து படைத்தரப்பு நகராமல் நிற்பதுடன், பரந்தனில் இருந்து கிளிநொச்சி நகர்வுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

ஆனையிறவு இராணுவ தளத்தின் பாதுகாப்பு கருதியுமே கிளிநொச்சி நகர் படையினரால் பெரும் விலை கொடுத்து முன்பு பிடிக்கப்பட்டது.

புலிகளிடம் ஆட்டிலெறிகள் இருந்தபோதும் அவற்றின் காத்திரமான சுடுதூரம் 20 கிலோமீட்டர். எனவே முல்லைத்தீவில் இருந்து ஆனையிறவு தளத்திற்கு ஆட்டிலெறி ஏவ முடியாது. 122 எம்.எம். என்றால் என்ன, 170 எம்.எம். என்றால் என்ன ஷெல்லின் கனம்தான் கூடிக்கொண்டு போகுமே தவிர சுடுதூரங்களில் பெரிய வித்தியாசம் இருக்காது.

கிளிநொச்சி மாவட்டத்தின் ஏதாவது ஒரு பகுதிக்கு ஆட்டிலெறியை நகர்த்தி சென்றுதான் ஆனையிறவை நோக்கி ஏவ வேண்டும்.

எனவே புலிகளது ஆட்டிலெறிகளின் இலக்கில் இருந்தும் ஆனையிறவுத் தளம் தப்பிக்க வேண்டுமானால் கிளிநொச்சி மாவட்டம் முழுவதையும் படையினர் பிடிக்க வேண்டும். அது நடக்கக்கூடிய காரியமல்ல. அதனால்தான் நகரை மட்டும் பிடித்து வைத்திருந்தனர்.

ஓயாத அலைகள் 02 இன்போது புலிகளது ஆட்டிலெறிகள் ஏவிய ஷெல்கள் ஆனையிறவு தளத்தின் வயிற்றுப் பக்கம் விழுந்து வெடித்தன.

தற்போது கிளிநொச்சி நகரும் புலிகளிடம் இருப்பதால், முன்பைவிட ஆட்டிலெறியை முன்னே நகர்த்தி கொண்டு சென்று ஆனையிறவு தளத்தை குறிவைக்கலாம்.

பூநகரியும் புலிகளின் வசமே இருக்கிறது.



ஓயாத அலைகள் 02ற்கு புறப்பட முன்னர் புலிகளின் அணி ஒன்று. தாக்குதல் விளக்கம் கொடுக்கிறார் புலிகளின் களமுனைத் தளபதி கருணா.

அங்கு ஆட்டிலெறியை கொண்டு சென்றால் யாழ் குடாநாட்டில் உள்ள சில படை நிலைகளை, குறிப்பாக தென்மராட்சியில் உள்ள படை நிலைகளை ஷெல்கள் பறந்து எட்டும்.

எனினும் ஆனையிறவு படைத்தள பாதுகாப்புத்தான் கிளிநொச்சி தோல்வியால் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது.

எனவே, மறுபடியும் கிளிநொச்சி நோக்கி படைகளை நகர்த்த வேண்டுமானால், மறுமுனையான மாங்குளத்தில் உள்ள படையினரை ஆனையிறவுக்கு கொண்டு சென்று குவிக்க வேண்டும்.

அதற்கு இரண்டு தடைகள் இருக்கின்றன. ஒன்று: போக்குவரத்து. இரண்டு: மறுமுனையான மாங்குளம்வரை நிலை கொண்டுள்ள படையினரின் தற்காப்பு.

பலம் குறைந்தால் புலிகள் பாய்ச்சல் நடத்தி விடுவர்.

விடுமுறையில் நிற்கும் படையினரையே கொண்டுவந்து சேர்ப்பதில் கடல், வான் பரப்புக்களில் புலிகளது குறுக்கீடுகள் உள்ளன. இந்நிலையில் ஆனையிறவுக்கு படையினரை உடன் கொண்டுசென்று குவிப்பது லேசுப்பட்டதல்ல.

யாழ் குடாநாட்டில் உள்ள படையினரை என்றால், தரைமார்க்கமாக ஆனையிறவுக்கு அனுப்பலாம். ஆனால் யாழ் குடாநாட்டுக்குளும் புலிகளது பாரிய தாக்குதலை எதிர்பார்ப்பதால், படை பலத்தை குறைப்பது இயலாது.

இந்நிலையில் மாவீரர் தினத்தை முன்னிட்டு முக்கியமான மூன்று முனைகளில் படையினர் விழிப்பாக இருப்பர்.

1. ஆனையிறவு தளம். 2. மாங்குளம் முனை 3. யாழ் குடாநாடு.

ஆனால் புலிகள் எதிர்பார்க்கும் முனையில் எதிர்பார்க்கும் நேரத்திலும் தாக்கியுள்ளனர். எதிர்பாராத முனையில் எதிர்பாராத தருணத்திலும் தாக்கியுள்ளனர். எதிர்பார்க்க வைத்து ஏமாற்றி உஷார் நிலைகளை சோர்வாக மாற்றி விட்டும் பாய்ச்சல் நடத்தி உள்ளனர்.

புலிகளுக்கு இம்முறை ஒருவாரம்தான் மாவீரர் தினம். படையினரோ இம்மாதம் முழு வதும் மாவீரர் தினத் தாக்குதலை எதிர்பார்த்து விழித்திருக்கப் போகிறார்கள்.

எப்படியோ ஒன்று மட்டும் உறுதி, எங்காவது ஒரு முனையில், அது எதிர்பார்த்த முனையாகவும் இருக்கலாம், எதிர்பாராத முனையாகவும் இருக்கலாம். புலிகள் மாவீரர் தின தாக்குதல் நடத்தியே தீருவர்.

புலிகள் தம்மைத் தேடி வர முன்பாக, தாமே புலிகளை தேடிச் சென்று சண்டையை ஆரம்பிக்க படைத்தரப்பு முயற்சிக்கலாம். அவ் வாறு செய்தால் புலிகள் பெரும் தாக்குதலுக்கு திட்டமிடுவதும் ஒன்று குவிவதும் தடுக்கப்படும். தாக்குதல் யுத்தத்தில் ஈடுபடாமல் தற்காப்பு யுத்தத்திற்குள் தள்ளிவைத்திருக்கலாம் என்பது பழைய உத்தி.

அந்த உத்தியை பாரியளவில் செயற்படுத்த களநிலவரம் ஒத்துழைக்காது. மழைக்காலம் ஆரம்பமாகிவிட்டது.

வன்னியில் வானம் பொழிந்தால் பூமி விளைவது ஒருபுறமிருக்க, சதுப்பு நிலப் பகுதிகளில் வானம் பொழிந்தால் வாகனங்கள் புதையும். கனரக வாகனங்கள் நகர முடியாது.

எனவே, மாரி மழை முடியும்வரை படைத் தரப்பினர் எத்தகைய குறிப்பிடத்தக்க பாய்ச்சலையும் அதற்குள் சாதிப்பது இயலாது. வேண்டுமானால் அடையாளத் தாக்குதல்கள், முன்னேறும் முயற்சிகள் போன்ற பாவனைகள் நடக்கக் கூடும்.

புலிகள் தமது அடுத்த இலக்கை தீர்மானிப்பதை 'ஜயசிக்குறுய்' படையினரால் தடுத்து நிறுத்த முடியாது.

இதற்கிடையே யாழ் குடாநாட்டு மக்கள் இம்முறை அங்குதான் பாரிய தாக்குதல் நடத்தக்கூடும் என்று நினைக்கின்றனர்.

அவ்வாறு சமர் நடந்தால் தங்கள் உயிர், உடமைகளை பாதுகாப்பது பற்றி இப்போதே யோசிக்கத் தொடங்கிவிட்டனர்.

குறிப்பாக தென்மராட்சி, யாழ் தீவுப் பகுதிகள் போன்றவற்றில் புலிகளது தாக்குதல்கள் இடம்பெறலாம் என்று அங்குள்ள மக்கள் உஷாராக இருக்கின்றனர்.

ஆனால் தற்போதைக்கு மிகப் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்துவதைவிட, வரையறுக்கப்பட்ட அளவிலான தாக்குதல்களையே குடாநாட்டில் புலிகள் நடத்துவர். எனவே கிளிநொச்சி சமர் போன்ற ஒன்று உடனடியாக யாழில் நடப்பதற்கான சாத்தியம், அதாவது மாவீரர் தினத்தை முன்னிட்டு நடப்பதற்கான சந்தர்ப்பம் அரிதாகவே உள்ளது.

எதிர்வரும் நவம்பர் 26ம் திகதியுடன் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு 44 வயது. துரையப்பாமீதான தாக்குதலுடன் கணக்குப் பார்த்தால் 25 வருட கள அனுபவம் இருக்கிறது.

இத்தகைய அனுபவம் உள்ள எவரும் அரச தரப்பில் இல்லை. படை அதிகாரிகளில் பலர் இறந்தும், ஓய்வு பெற்றும் அந்த இடங்களுக்கு புதியவர்கள் பலர் வந்துவிட்டனர். பாதுகாப்பு அமைச்சர்களும் பலர் வந்துபோய்விட்டனர்.

தொடர்ச்சியான அனுபவம் என்பதும் போர் அரங்கில் முக்கிய அம்சங்களில் ஒன்றுதான். ஓயாத அலைகள் 02ற்கு பிரபாகரன் வகுத்த திட்டமும் அனுபவ முதிர்ச்சியின் வெளிப்பாடுதான்.

தனது எதிரிகள் பற்றிய பிரபாகரனது அரசியல் கணிப்புக்களும், இராணுவ கணிப்புக்களும் பெரும்பாலும் சரியாக அமைந்துள்ளன. அதன் காரணம் தொடர்ச்சியான அனுபவம்.

அதேசமயம் அரசும், படைகளும் தமது எதிரிகள் பற்றிய கணிப்பில் பல தவறுகளை செய்து சறுக்கியுள்ளன. தமது எதிரியை பற்றி மதிப்பிடக்கூடிய அனுபவப் பற்றாக் குறையும் அதற்கு ஒரு காரணம்.

நாரதர்

# அதிரடி அய்யாத்துரை



***அதிகாரமுள்ள சக்தியானவரின்*** பேட்டி சர்ச்சையில் கதிரர் வாயைக் கொடுத்து மாட்டிக் கொண்டார். "அப்படிச் சொல்லவே யில்லை" என்று அவர் கூறியவரல்லோ? சக்தியானவரின் பேட்டியையே தொலைக் காட்சி மூலம் வெளியிட வைத்துப்போட்டினம். குமாரர்தான் பேட்டியை முதலில் அம்பலமாக்கியவர். அவருக்கே தகவல் கொடுத்தது அதிகாரத்தரப்புக்குள் இருந்து சமீபத்தில் முரண்பட்ட ஒரு தரப்புத்தானாம். கசட்டை கொடுத்ததும் அவைதானாம். உள் முரண்பாடுகளால் சில நன்மைகள் ஏற்படுகுது பார்த்தியளோ?

***கூட்டான கட்சியினர்*** அதிகாரத்தரப்பை எதிர்ப்பதாகக் கூறியிருப்பது, 'நோகாமல் அடிக்கிறோம், வேறு வழியில்லை' என்று மேலிடத்தில் சொல்லிப்போட்டு செய்யிற விளையாட்டோ? என்று பலருக்குச் சந்தேகம். ஆனால், என்னவாக இருந்தாலும் எடுத்த முடிவு நல்ல முடிவு என்பதைப் பாராட்டத்தான் வேணும். தென்னாபிரிக்கப் பேட்டியை துணிந்து சாடியதையும் எந்தத் தயக்கமும் இல்லாமல் பாராட்டலாம்.

***கிளிநொச்சி அடிபாட்டில்*** பெண் ரெண்டு எழுத்தாரின் பொறுப்பாளர் ஒருவர் பற்றிக் கதை கதையாகப் பேசப்படுகிறது. ஒரு பகுதியைப் பிடிக்க தன் குறூப்போடு முன்னேறினாராம். எதிர்ப்பு பலமாக இருந்ததால் வேறு பகுதியால் முன்னேறுமாறு தளபதி கூற, இந்தப் பகுதியால் முன்னேற வேண்டும் என்று பல பிள்ளைகள் பலியாகிவிட்டனர். "நானும் இந்தப் பக்கத்தால்தான் போவேன்" என்று பிடிவாதம் பிடித்து முன்னே போய்ப் பலியானாராம். மொத்தம் 197 பெண் ரெண்டெழுத்தார் பலியாகியுள்ளனர். ஆண்கள் 200 பேர்.

***சமீபத்தில் வடக்கே*** சிருடைத் தரப்பில் சடுதியான இடமாற்றங்கள் நடந்திருக்குது. இந்த மாற்றங்கள் அதிகார சக்தியானவரின் முடிவுகள்தானாம். பிரதி அதிகாரமுள்ளவருக்கு இந்த மாற்றங்களில் அவ்வளவாக உடன்பாடில்லையாம். இருவருக்கும் இடையேயான பனிப்போரில் இதுவும் ஒரு கட்டம் என்று சிலர் அபிப்பிராயப்படுகினம்.

***வவுனியாவில்*** உளவு சம்பந்தமான சிருடைக்காரர் ஒருவர் ரெண்டு எழுத்தாரால் சுடப்பட்டு, சில நாட்களின் பின்னர் மரணமானார். சம்பவம் நடந்தபோது அவரைத் தூக்கி மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல ஓடி வந்த ஆட்கள், மற்றும் எட்டிப் பார்த்தவை, நின்று பார்த்தவை என்று பலதரப்பட்டதாக 25 பேர்வரை சந்தேக நபர்களாக பிடிக்கப்பட்டிருக்கினமாம். உதவிக்குப் போய் உபத்திரவத்தை அனுபவிக்க வேண்டிக் கிடக்கு என்று பாதிக்கப்பட்டவையின் உறவினர்கள் புலம்புகினமாம்.

***தமிழ் மொழி*** புறக்கணிக்கப்படுவதற்கு தட்டெழுத்தாளர் இல்லாததுதான் காரணம் என்று கூறுவது கலப்படமில்லாத டுப்பல்லோ? மனமுண்டானால் இடமுண்டு. மனம் இடம்தர மறுப்பதுதான் எல்லாவற்றுக்கும் அடிப்படைக் காரணம். அது புரியாமல் தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தார் என்று கதை கூறுவதில் அர்த்தமில்லை-சத்துமில்லை.

***மாண்புமிகு டமில் கட்சிகள்*** அதிகார சக்தியானவரிடம் விண்ணப்பம் போட்டுக்கூட தங்கள் ஏற்பாட்டில் குறைந்த கட்டணத்தில் கப்பல்விட முடியவே முடியாது என்று போட்டார். விழுந்தும் மீசையில் மண்படாத குறையாக 'தனியார் கப்பல் சேவைக்கு அனுமதி கிடைச்சுப் போட்டுது' எண்டு டமில் கட்சிக்காரர்கள் செய்தி கொடுத்தவையாம்.

***தலைநகரில்*** அதிகார சக்தியானவரைச் சந்திக்க கூட்டான கட்சி ஏனைய கட்சிகளுடன் போகவில்லை. யாழ் நகரில் மட்டும் ஏனைய கட்சிகள் சிலதுடன் சேர்ந்து ரெண்டு எழுத்தாரை கண்டிக்குமாறு உலகத் தலைவர்களுக்குத் தயாரான மகஜரில் கூட்டான கட்சியினர் கையொப்பம் போட்டிருக்கினம். தலைநகரில் ஒரு கொள்கை. யாழ் நகரில் வேறு கொள்கையோ? டபுள் ஆக்ஷனை எப்போதுதான் நிறுத்தப்போகினம்?

***தேனகத்தில் கழகத்திற்குள்*** பிரச்சனை. மாமா அணி தனியணியாக ஆயுதத்துடன் போய்விட்டதாம். அதனைக் கவனிக்க மறுதரப்பு ஆட்களை அனுப்பியிருக்கிறதாம். 'நாம்தான் கழகம்' என்று மாமா அணியினர் அடித்துக்கூறுகின்றனராம்.

***பட்ஜெட் சமர்ப்பித்த*** சூட்டோடு கிரிக்கெட் போட்டிகள் நடப்பது வழக்கம். கிரிக்கெட் சீசனாகப் பார்த்துத்தான் பட்ஜெட்டை சமர்ப்பிக்கினமோ என்று எனக்கொரு சந்தேகம். அது கிடக்க இலங்கை அணி சார்ஜாவில் அடுத்தடுத்து தோற்றுப்போனதில் அணியைவிட-ரசிகர்களைவிட அதிகாரத்தரப்பாருக்குத்தான் கவலை அதிகமாம். விசிலடியில் விலைவாசி உயர்வு தெரியாமல் போகுமல்லோ?

***இவ்வாரப் பொன்மொழி:***

"வெற்றி என்பது
பெற்றுக் கொள்வதற்கு;
தோல்வி என்பது
கற்றுக் கொள்வதற்கு!"



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர்
அற்புதன் எழுதுவது




# நான்கு நாள் சமர்
# முப்படைகளும் களத்தில்!

சிலாவத்துறை இராணுவ முகாமை கைப்பற்றும் புலிகளது தாக்குதல் இரண்டாம் நாளும் தொடர்ந்தது.

முதல் நாள் தாக்குதலில் உதவி அரச அதிபர் விடுதியில் இருந்த மினி முகாமை புலிகள் கைப்பற்றியிருந்தனரல்லவா.

இரண்டாம் நாள் விடிந்ததும் பாடசாலையில் இருந்த மினி முகாமை கைப்பற்றும் தாக்குதல்களில் இறங்கினார்கள்.

சிலாவத்துறை பிரதான இராணுவ முகாமுக்குள் புலிகளின் முற்றுகையில் இருந்த இராணுவத்தினருக்கு உதவ விமானப் படையினர் தொடர் குண்டு பொழிதலில் ஈடுபட்டிருந்தனர்.

குண்டுகள் முடிந்ததும் அவற்றை நிரப்பிக்கொண்டு வருவதற்காக அநுராதபுர விமானத்தளத்திற்கு விமானங்கள் போவதும் வருவதுமாக இருந்தன.

கடலில் இருந்தும் சிலாவத்துறை முகாமுக்கு உதவி வழங்க கடற்படைக் கப்பல்கள் விரைந்து வந்தன.

கடல் மூலம் துருப்புக்களை இறக்கி சிலாவத்துறை முகாமுக்கு மேலதிக ஆளணியையும், ஆயுதங்களையும் அனுப்ப திட்டமிட்டனர்.

## தரையிறக்கம்

இரண்டாம் நாள் பிற்பகல் ஒருமணியளவில் இரண்டு பாரிய கப்பல்கள் கடற்பரப்பில் தோன்றின:

கடலில் இருந்து உதவிகள் வரும் என்று முன்கூட்டியே ஊகித்து புலிகளின் அணிகள் கடற்கரையோரமாக நிறுத்தப்பட்டிருந்தன.

கடற் படையினரின் தரை இறக்க முயற்சியை முறியடிக்க அந்த அணிகள் தயாராகின.

போதிய தடுப்பு அரண்கள் இல்லாத கடற்கரைப் பகுதியில் நின்று போரிடுவது புலிகளின் அணிகளுக்கு கடினமாக இருந்தது.

கடற்கரை ஓரமாக உரு மறைப்பு செய்து கலிபர் துப்பாக்கிகளை நிறுத்திவைத்திருந்தனர். கடலையே பார்த்துக்கொண்டிருந்த கலிபர் துப்பாக்கிகள், கடற் படை படகுகள் கரையை நெருங்க முற்பட்டதும், ரவைகளை பொழியத் தொடங்கின.

50 கலிபர் ரக துப்பாக்கிகளும், 30 கலிபர் ரக துப்பாக்கிகளும் சரமாரியாக ரவைகளைப் பொழிந்ததால் தரை இறக்க முயற்சி பலனளிக்கவில்லை.

மீண்டும் மாலை 5.30 மணியளவில் தரை இறக்க முயற்சியில் கடற்படையினர் ஈடுபட்டனர்.

கடற்கரைப் பக்கமாக விமானக் குண்டு வீச்சு நடத்தி புலியணிகளை களத்தைவிட்டு அகற்றும் நேரத்தில், கடற்படையினர் தரையிறங்கிவிடலாம் என்று திட்டமிடப்பட்டது.

ஆனால், மண்ணோடு மண்ணாக ஒட்டிக்கிடந்தும், உரு மறைப்பு உத்திகளைப் பயன்படுத்தியும் புலிகள் தரையிறக்க முயற்சியை தடுத்து நிறுத்தினார்கள்.

அதனால் இரண்டாவது முயற்சியும் கைவிடப்பட்டது.

இரண்டாவது நாள் இரவும் நெருங்கிக் கொண்டிருந்தது. சண்டை முடிந்தபாடாக இல்லை.

வெளிச்சக் குண்டுகளின் உதவியுடன் புலியணிகளை தேடிக்கொண்டிருந்தன போர் விமானங்கள்.

பாடசாலை முகாமை புலிகள் கைப்பற்றாமல் தடுக்கும் விதமாக குண்டுகள் மூலம் தடையரண் ஒன்றை அமைக்கும் உத்தியை கடற்படையினர் செயற்படுத்த தொடங்கினார்கள்.

அது என்ன குண்டுகள் மூலம் தடையரண் அமைக்கும் உத்தி?

பாடசாலை மினி முகாமுக்குள் உள்ள படையினருக்கு அறிவித்தல் கொடுத்துவிட்டு, அம் முகாமை சுற்றிய பகுதிகளை நோக்கி கடற்படை படகுகளில் இருந்து பீரங்கிக் குண்டுகள் ஏவப்பட்டன.

விமானப் படையினரும் குண்டுகளை அப்படியே விதைத்துக் கொண்டிருந்தனர்.

புலியணிகள் மினி முகாமை நோக்கி முன்னேற முடியாமல் குறுக்கே தடையாக குண்டுகள் இறங்கிக் கொண்டிருந்தன.

முப்படைகளது போர் வியூகங்கள் மத்தியில் நின்று புலியணிகளை சண்டையிட்டு கொண்டிருந்தனர்.

புலியணிகளை தமிழ்ச் செல்வன் (தினேஷ்) வழி நடத்திக் கொண்டிருந்தார்.

குண்டுகள் பொழிந்து கொண்டிருந்த போதும், அதி வேகமாக நகர்ந்து பாடசாலை மினி முகாமுக்குள் புகுந்தனர் புலிகள். அப்போது நள்ளிரவாகியிருந்தது.

இம் முகாமை நோக்கி புலிகள் முன்னேறியபோது படையினர் கடும்பதிற் தாக்குதல் நடத்தினார்கள்.

காவலரண்களில் இருந்து கைக்குண்டுகளும், துப்பாக்கிகள் கக்கிய ரவைகளும் புலிகளை நோக்கி ஏராளமாக பறந்து வந்தன.

நள்ளிரவுக்கு முன்னால் மினி முகாமை எப்படியாவது கைப்பற்றியாக வேண்டும் என்று திட்டவட்டமான கட்டளை புலிகளுக்கு பிறப்பிக்கப்பட்டது.

கடும் முர்க்கமாக சண்டையிட்டே பாடசாலை முகாமை புலிகள் கைப்பற்றினார்கள்.

அங்கு சண்டையில் பலியான படையினர் தவிர, ஏனைய படையினர் பிரதான முகாம் நோக்கி பின்வாங்கி அங்கிருந்து பதிற் தாக்குதலில் ஈடுபட்டனர்.

## மூன்றாம் நாள்

மூன்றாம் நாள் காலையும் சண்டை முழக்கங்களுடன் விடிந்தது.

நான்கு முனைகளில் புலிகள் சண்டையிட வேண்டியிருந்தது.

1. சிலாவத்துறை முகாம்மீதான போர் முனை.
2. கொண்டைச்சி கொக்குப்புடையான் இராணுவத்தை வழிமறிக்கும் போர்முனை.
3. சிலாவத்துறை கடற் போர் முனை.
4. வங்காலை தள்ளாடி போர் முனை.

இந்த நான்கு முனைகளுமே சண்டையின் வெற்றி தோல்விக்கு முக்கியமானவை. இதில் ஒரு முனையில் தோல்வி கண்டால்கூட புலிகளது பிரதான நோக்கம் கைக்கெட்டாது.

இதேவேளை படைத்தரப்பு உயரதிகாரிகள் கொழும்பில் கூடி ஆராய்ந்தனர். சிலாவத்துறை பிரதான முகாமை எப்பாடுபட்டாயினும் பாதுகாக்க வேண்டும் என்று தீர்மானித்தனர்.

ஏற்கனவே மாங்குளம் முகாமை பறிகொடுத்தாகிவிட்டது. சிலாவத்துறையையும் இழந்தால் எதிர்க்கட்சி கைகொட்டி நகைக்கும் என்ற கவலை அரசாங்கத்திற்கு.

படை உயரதிகாரிகள் கூடி திட்டம் ஒன்றை வகுத்தனர்.

சிலாவத்துறை முகாம் முற்றுகையை உடைக்க வேண்டுமானால், அங்குள்ள படையினரின் பலம் போதாது.

வெளியே இருந்து முன்னேறி புலிகளின் முற்றுகையை உடைத்து முகாமை காப்பாற்ற வேண்டும்.

கடற்பகுதியூடாக தரையிறக்கமும் சாத்தியமில்லை. ஆகவே கொண்டைச்சி இராணுவ முகாமில் இருந்து பாரிய படை நகர்வு ஒன்றை நடத்தியாக வேண்டும் என்று முடிவு செய்தனர்.

தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து இரண்டு ஹெலிகொப்டர்கள் மூலம் 20 தட வைக்கு மேல் படையினர் கொண்டு செல்லப்பட்டு கொண்டைச்சி முகாமில் குவிக்கப்பட்டனர்.

கடலிலும் பாரிய கடற்படை போர்க் கப்பல் ஒன்று வந்து நின்றது. அத்தோடு சேர்த்து மொத்தம் மூன்று போர்க்கப்பல்களும், பத்துப்பீரங்கிப் படகுகளும், விசைப்படகுகள் பலவும் கடலில் நிறுத்தப்பட்டிருந்தன. அவற்றில் இருந்து பீரங்கிக் குண்டுகள் தரையை நோக்கி ஏவப்பட்டுக் கொண்டிருந்தன.

கொண்டைச்சி முகாமில் இருந்து முன்னேறும் படையினருக்கு தரைப்பாதையை சுத்தம் பண்ணிக்கொடுக்கும் விதமாக, அப்பகுதிகளில் நிலை கொண்டிருந்த புலியணிகளை குறிவைத்து பீரங்கிக் குண்டுகள் பொழியப்பட்டன. விமானப் படையினரும் படை நகர்வுக்கு பாதையை செப்பனிடும் தாக்குதல்களில் ஈடுபட்டிருந்தனர்.

கொண்டைச்சி முகாமில் இருந்து தம்பலத்தை ஒன்றுகுவித்தபடி படையினர் முன்னேற ஆரம்பித்தனர்.

இப்போது புலியணிகளுக்கு பிரதான முனையாக கொண்டைச்சி படையை தடுக்கும் முனை மாறியது.

முன்னேறிவரும் படையை தடுத்து திருப்பி அனுப்பாவிட்டால் முகாம் தாக்குதல் பூரணமாகாது.

ஆகையால், கொண்டைச்சி கொக்குபுடையான் முனையில் சண்டை தீவிரமானது.

எங்கும் ஒரே புகைமண்டலம். குண்டுச் சத்தங்கள் அப் பகுதியை உலுக்கிக்கொண்டிருந்தது.

தமக்கு சாதகமில்லாத தரையமைப்பில் புலிகள் சண்டை போடவேண்டியிருந்தது. காயமடைந்த உறுப்பினர்களை விரைவாக மீட்டெடுத்து அனுப்பிக்கொண்டே சண்டையிட்டபடி இருந்தனர்.

கொக்குபடையான் படையினரை தடுத்து நிறுத்தும் புலியணிகளை திசைதிருப்ப வங்காலை, தள்ளாடி போர் முனையை திறந்தனர் படையினர்.

அங்கிருந்து சிலாவத்துறை நோக்கி படைகள் முன்னேற ஆரம்பித்தன.

அங்கு புலிகளுக்கு சாதகமான நிலை இருந்தமையால் படையினரால் முன்னேற முடியவில்லை தடுத்து நிறுத்தப்பட்டனர்.

## நான்காம் நாள்

மூன்றாம் நாள் சண்டையில் 17 புலிகள் பலியாகினர். நான்காம் நாள் காலையும் போர் எழுப்பிய புகைமண்டலத்தோடு விடிந்தது.

மூன்று நாட்கள் தூக்கமே இல்லாமல் புலியணிகள் சண்டையிட்டுக் கொண்டிருந்தன.

நான்காம் நாள் கொண்டைச்சி முகாம் படையினர் தமது முன்னேற்ற முயற்சியை வெகு தீவிரமாக்கினர். வான் படையின் போதிய பக்கபலத்துடன் முன்னேறினர்.

அவ்வாறு முன்னேறியும் புலிகள் தடுத்து சண்டையிட்டதால் தமது உத்தியை திடீரென்று மாற்றியது படைத்தரப்பு.

நேராக முன்னேறாமல் கடற்கரை நோக்கி திரும்பிய படை யினர், கடற்கரையை அண்டிய பாதையால் சிலாவத்துறை முகாம் நோக்கி முன்னேறத் தொடங்கினர்.


கடற்கரைப்பகுதி வெட்ட வெளி என்பதால் புலியணிகளுக்கு பதுங்குநிலை எடுத்து தாக்குப் பிடிப்பது கஷ்டம். தவிர கடற்படை கப்பல்களும், வான் படையும் பக்கபலமாக செயற்பட்டன.

இந்த உத்தி பயனளிக்க ஆரம்பித்தது. புலியணிகள் முன்பு போல கடும் தடுப்புச் செய்யக் கூடிய கள நிலவரம் இருக்கவில்லை.

விமானக் குண்டுகள் சில புலியணிகள் மத்தியில் விழுந்து வெடித்தன. பீப்பாய் குண்டுகளும் அவ்வாறு விழுந்து வெடித்தன.

மேலும் அப் பகுதியில் நின்று சண்டையிடுவது தமது அணிகளுக்கு கடும் சேதத்தை உண்டாக்கும் என்பதால், களத்தை விட்டு அகலுமாறு புலியணிகளுக்கு உத்தரவிடப்பட்டது.

நான்காம் நாள் சண்டையில் நண்பகல் வரை 21 புலிகள் பலியாகினர். அந்த




உடல்களை கடந்து படையினர் சிலாவத்துறை முகாமுக்குள் சென்றனர்.

சிலாவத்துறை முகாமுக்கு மேலதிக ஆட்பலமும், ஆயுத தளபாடங்களும் சேர்ந்துவிட்டன.

ஆகவே, பிரதான முகாமை கைப்பற்ற போரிட்டால் பாரிய உயிரிழப்புக்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

முகாம் முற்றுகையை கைவிட்டு தாக்குதலுக்காக கொண்டுவரப்பட்ட ஆயுத தளபாடங்களுடன் புலியணிகள் திரும்பிச் சென்றன.

கடற்புலிகள் அணி அப்போது பலமான நிலையில் இருக்கவில்லை. விமான எதிர்ப்புப் படையணியும் பலமாக இருக்கவில்லை. சண்டையில் புலிகள் தரப்பு இலக்கை எட்டமுடியாததுக்கு அவையும் பிரதான காரணிகள்.

முப்படை பலத்தையும் போதியளவு பிரயோகித்து படைத்தரப்பு புலிகளது முற்றுகையை முறியடிப்பதில் வெற்றி பெற்றது.

அதே சமயம் புலிகளுக்கு நீண்ட முற்றுகைச் சமர் அனுபவமும், ஒரே தருணத்தில் முப்படைகளையும் எதிர்த்து சண்டையிடும் கள அனுபவமும் கிடைத்தது.

## கடும் சண்டை

நான்கு நாள் சமரை முன்நின்று நடாத்திய புலிகளது அன்றைய யாழ் மாவட்டத் தளபதி தமிழ்ச் செல்வன் (இப்போது இவர்தான் புலிகளது அரசியல் பிரிவின் பொறுப்பாளராக இருக்கிறார்) சமர் பற்றி பின்வருமாறு கூறியிருந்தார்.

"இது போன்றதொரு நீண்டதும் கடுமையானதுமான சண்டையை இதுவரை நான் சந்திக்கவில்லை.

யாழ் கோட்டை முகாமை எமது முற்றுகைக்குள் வைத்திருந்த 107 நாட்களிலும் அதன் சுற்றாடலில் வீசப்பட்ட குண்டுகளின் தொகைக்கு இணையாக இந்த நான்கு நாட்போரிலும் சிலாவத்துறையில் குண்டுகள் வீசப்பட்டன!"

சிலாவத்துறை சமருக்கு திட்டமிட்டு தலைமை தாங்கிய புலிகளது தளபதிகளில் ஒருவர் மன்னார் மாவட்ட புலிகளின் தளபதியாக இருந்த சுபன்.

சமர் முடிந்த பின்னர் சுபன் கூறும் போது:

"தாக்குதலுக்கு செல்லும்போது நாம் சவப்பெட்டிகளுடன் தான் செல்கிறோம்!" என்று கூறியிருந்தார்.

சிலாவத்துறை முகாமின் முக்கியத்துவம் பற்றி புலிகள் இன்னொரு கருத்தையும் புலிகள் கூறியிருந்தனர்.

"குடியேற்றவாத நோக்கில் சிலாவத் துறை ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதி. மன்னார் மாவட்டத்தின் தென் பகுதியை விழுங்கும் திட்டத்தை செயற்படுத்த அமைக்கப்பட்ட முகாமே இது. ஆறு கிலோமீட்டர் இடைத்தூரம் கொண்ட சிலாவத்துறை கொண்டைச்சிப் பகுதியை இணைத்து இராணுவ வலயமாக்கிவிட்டு அதன் கீழ்ப்புறம் உள்ள தமிழ்ப் பிரதேசங்களில் குடியேற்றம் நடத்துவதே திட்டம்!" என்று கூறியிருந்தனர் புலிகள்.



சிலாவத்துறை சமரில் 79 புலிகள் பலியாகினர்.

*(தொடர்ந்து வரும்)*



படிப்பகம்

www.padippakam.com

# அலசுவது- இராஜதந்திரி

# குடாநாட்டுக்குள் புதிய போர் வீரர்கள்!

யாழ் குடாநாட்டில் பாதுகாப்பு நிலவரம் பற்றி ஆராய ஜனாதிபதி சந்திரிக்கா தமிழ்க் கட்சிகளுடன் மாநாடு ஒன்றை நடத்தியுள்ளார்.

இம் மாநாட்டுக்கு முன்பாக யாழ் குடாநாட்டு நிலவரம் பற்றி பாதுகாப்புத் தரப்புடன் இரகசிய ஆலோசனைகளை இரண்டு நாட்களாக ஜனாதிபதி நடத்தியிருந்தார்.

அதன் பின்னரே தமிழ்க் கட்சிகளை சந்தித்தும் பேசியிருக்கிறார்.

யாழ் குடாநாட்டில் உள்ளூராட்சி தேர்தல்கள் நடத்த முடிவு செய்தபோது தமிழ்க் கட்சிகளுடன் கலந்துபேசவோ, அவற்றின் கருத்துக்களை கேட்டறியவோ ஜனாதிபதி முன்வந்திருக்கவில்லை.

இராணுவ நிர்வாகத்திற்கு சிவில் நிர்வாக தோற்றம் ஏற்படுத்துவதும், அதன் மூலமாக அபிவிருத்தித் திட்டங்கள் என்ற பெயரில் பெருமளவு நிதியுதவியை வெளியுலகில் இருந்து பெறுவதுமே ஆட்சியாளரின் முக்கிய நோக்கமாக இருந்தது.

இராணுவத் தலைமையின் விருப்பு வெறுப்புக்கேற்பவே வடக்கு-கிழக்கு பற்றிய முடிவுகளை அரசு மேற்கொண்டு வருகிறது என்பது ஒன்றும் இரகசியமானதல்ல.

தமிழ்க் கட்சிகள் வேட்பாளர்களை நிறுத்தாவிட்டால் தாமே வேட்டாளர்களை நிறுத்த வேண்டியிருக்கும் என்று தமிழ்க் கட்சிகளை மிரட்டியே ஆட்சியாளர்கள் உள்ளூராட்சி தேர்தலை நடத்தியிருந்தனர்.

உள்ளூராட்சி தேர்தல் முடிந்த பின்னர் ஆட்சியாளர்களோ, படைத்தரப்போ தமிழ்க் கட்சிகளை அழைத்து உள்ளூராட்சி சபை உறுப்பினர்களது பாதுகாப்பு பற்றி கேட்டறிய முன்வரவில்லை.

யாழில் தேர்தலில் வெற்றி பெற்ற ஒவ்வொருவருக்கும், புலிகளால் ஆபத்து ஏற்படும் என்பது சர்வசாதாரணமாக தெரிந்த விடயமேயாகும்.

யாழ் உள்ளூராட்சித் தேர்தலை புலிகளுக்கு எதிரான தேர்தல் என்று ஆட்சியாளர்களே சித்தரித்தும் வருகின்றனர். எனவே புலிகளுக்கு எதிரான தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்கள் புலிகளால் நண்பர்களாக கருதப்படுவார்கள் என்று ஆட்சியாளர்கள் நினைத்திருக்க வாய்ப்பில்லை.

யாழ் குடாநாட்டில் புலிகளின் இலக்குகளாக படையினர் மட்டும் இருக்காமல் வேறு பல இலக்குகளையும் உருவாக்கினால் புலிகளது கவனம் பல முனைகளில் திசைதிரும்பும் என்கின்ற இராணுவரீதியான சிந்தனையும் யாழ் உள்ளூராட்சித் தேர்தலில் உள்ளடங்கியிருந்தது என்பது பலரது சந்தேகமாகும்.

உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெற்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதில் அக்கறை காட்டப்படாமல் இருந்தமையானது அச் சந்தேகத்தை உறுதிப்படுத்துவதுபோல அமைந்திருந்தது.

தம்மிடம் பாதுகாப்பு கோரவில்லை என்று படைத்தரப்பினர் கூறும் காரணம் ஏற்கத்தக்கதல்ல.

உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் புலிகளால் வேட்டையாடப்பட்டால், புலிகளை ஜனநாயக விரோதிகள் என்று வெளியுலகின் முன்பாக அம்பலப்படுத்தலாம் என்றும் ஆட்சியாளர்கள் நினைத்திருக்கக்கூடும்.

மொத்தத்தில் ஆட்சியாளரின் அரசியல் இராணுவ நலன்களை ஈடேற்றும் உத்திகளில் ஒன்றுதான் யாழ் உள்ளூராட்சித் தேர்தலாகும்.

தேர்தலை நடத்தி முடித்ததும் உள்ளூராட்சிச் சபைகளது உறுப்பினர்களது உயிர்கள் பற்றிய அக்கறையைவிட, அபிவிருத்திக்கான வேலைத் திட்டங்களை தீட்டி, அவற்றை வெளிநாட்டு உதவி நிறுவனங்களிடம் சமர்ப்பித்து நிதியுதவி பெறுவதிலேயே ஆட்சியாளர்கள் அக்கறை காட்டியதையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

வடக்கு-கிழக்கில் அமைதி திரும்புமானால் தேவையான உதவிகள் செய்யத் தயாராக உள்ளதாக பல நாடுகளும், நிதி உதவி வழங்கும் நிறுவனங்களும் கூறிவருகின்றன.

வடக்கு-கிழக்கில் யாழ் குடாநாடு பிரதான பகுதியாக வெளியுலகால் கருதப்படுவதால் அங்கு அபிவிருத்திகளுக்கு கூடுதல் நிதி ஒதுக்க தயாராக உள்ளன.

அவ்வாறு நிதி பெறுவதற்கு அப் பகுதியில் சுமுகமான நிலை இருப்பது முதல் நிபந்தனையாகும். அடுத்ததாக வேலைத் திட்டங்கள் அவசியம். வேலைகள் நடக்குமோ இல்லையோ, இவ்வேலைகள் நடக்கப்போகின்றன என்று திட்டம் தயாரித்து, அதற்கு தேவையான நிதியை குறிப்பிட்டு கோரவேண்டும்.

கடந்த காலத்தில் வடக்கு-கிழக்கில் அபிவிருத்திகளுக்கு என்று திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வெளிநாடுகளில் பெறப்பட்ட நிதிகள் அப்பகுதிகளுக்கு செல்லவில்லை.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு சிதிலமாகிக் கிடக்கும் வடக்கு-கிழக்கை காண்பித்து பெறப்பட்ட நிதி உதவிகள், மேலும் அப்பகுதிகளை மீள முடியாத அழிவுக்குள் தள்ளும் யுத்தத்தை முன்னெடுக்கவே பயன்படுத்தப்பட்டிருந்தன.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் இருந்து இத்தகைய தந்திரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இத்தந்திரத்தை வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநராக இருந்த காமினி பொன்சேகா தன் வாயாலேயே பகிரங்கப்படுத்தியுமுள்ளார்.



"வடக்கு-கிழக்குக்கு என்று ஆரவார அறிவிப்புக்களுடன் ஒதுக்கப்படும் நிதி அங்கு வந்து சேருவதில்லை" என்று பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் அழுத்தம் திருத்தமாக கூறியிருந்தார்.

எனவே, வடக்கு-கிழக்கு அபிவிருத்தி பற்றிய பேச்சுக்களும், திட்டப்படும் வேலைத் திட்டங்களும் அப்பகுதி மக்களுக்குரியவை என்று நம்புவதற்கான முன்னுதாரணங்கள் எதுவும் காணப்படவில்லை.

இவற்றின் பின்னணியில்தான் யாழ் குடாநாட்டை கைப்பற்றியவுடன் அடுத்தடுத்து அமைச்சர்கள் பலர் அங்கு சென்று வந்ததையும் வேலைத்திட்டங்கள் தயாரித்ததையும் நோக்க வேண்டியிருந்தது.

ஆனால், யாழ் குடாநாட்டின் பெயரால் தயாராகும் வேலைத்திட்டங்களுக்கு உதவிகள் கிடைக்க வேண்டுமானால், அப்பகுதியை கைப்பற்றி கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாக காண்பித்தால் மட்டும் போதாது, சிவில் நிர்வாகம் இருப்பதாக காண்பித்தாக வேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டது.

இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்கு நிதி உதவி செய்தால், அந்த நிதி இராணுவ நலன்களுக்கே பபன்படும் என்பதால் சிவில் நிர்வாகம் இருந்தால்தான் உதவிகள் கிட்டும். ஆகவேதான் அவசர அவசரமாக உள்ளூராட்சித் தேர்தல் ஒன்றை ஆட்சியாளர்கள் நடத்தி முடித்திருந்தனர்.

தேர்தலை சீர்குலைக்க புலிகள் முற்படுவார்கள் என்றுதான் ஆட்சியாளரும், படைத்தரப்பும் நினைத்திருந்தனர்.

அடையாளத் தாக்குதல் ஒன்றை மட்டும் நடத்திய புலிகள், பாரியதாக்குதல் எதிலும் ஈடுபடாமல் இருந்தனர்.

உள்ளூராட்சித் தேர்தலை குழப்புவதைவிட, அத் தேர்தலை அரசு எத்தகைய நோக்கங்களுக்காக நடத்தியதோ, அந்த நோக்கங்கள் நிறைவேறாமல் செய்வதற்கே புலிகள் திட்டமிட்டனர்.

யாழ் குடாநாட்டில் சிவில் நிர்வாகம் இயங்காமல் புலிகள் தடுக்க வேண்டிய அவசியம் இருக்கவில்லை. ஏனெனில் உண்மையான சிவில் நிர்வாகம் இயங்குவதற்கு படைத்தரப்பு இடமளிக்கப் போவதில்லை.

ஆனால், இராணுவ நிர்வாகம் சிவில் நிர்வாகம் என்ற மேற்பூச்சுக்களுடன் நடைபெறுவதையும், அதனை வெளியுலகம் நம்புவதையும் தடுப்பதே புலிகளது இலக்காக விளங்குகிறது.

அதன் முதற்கட்டமாகவே யாழ் மாநகர முதல்வர்கள் இருவர் குறிவைக்கப்பட்டனர். ஏனைய உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் குறிவைக்கப்பட்டுள்ளனர்.

அரச நீதிமன்றங்கள் யாழில் இயங்குவதையும் புலிகள் தடை செய்துள்ளனர்.

# ஆட்சியாளரின் இன்னொரு திட்டம்!

பொதுமக்களுக்கான சேவையாக நடத்தப்பட்ட தனியார் விமான சேவைகளில் படையினரும் போக்குவரத்து நடத்தியதால் அதனையும் நிறுத்த வைத்துள்ளனர்.

எனவே, யாழ் குடாநாட்டில் உள்ளூராட்சி தேர்தல் நடத்தியதுமூலம் அரசு காண்பிக்க எண்ணிய தோற்றப்பாடுகளை புலிகளின் நடவடிக்கைகள் தகர்த்தெறிந்துள்ளன.

யாழில் அரசு தான் நினைத்ததை செய்ய முடியாதுள்ளது என்பதும், படைத்தரப்பு நிலைகொண்டிருந்தாலும், புலிகளின் கட்டளைகளே அங்கு செல்லுபடியாகின்றன என்பதும் உலகறிந்த விடயங்களாகியுள்ளன.

பாரிய ஆயுதங்களுடன் நிலைகொண்டுள்ள படைத்தரப்பால் ஒரு காகிதம் மூலம் புலிகள் விடுக்கும் அறிவித்தலை மீறி நிர்வாகத்தை இயங்க வைக்க முடியாதிருக்கிறது.

யாழ் மாநகர முதல்வர்களாக யாரும் பதவியேற்க இதுவரை முன்வரவில்லை. படைத்தரப்பால் புலிகளது தாக்குதலை தடுக்கவியலாது என்ற நம்பிக்கையும் அதற்கு ஒரு காரணமாகும்.

யாழ் மாநகர முதல்வர்கள் பலியானதோ, அல்லது உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் குறிவைக்கப்படுவதோ மக்களிடயே மட்டுமல்லாமல், வெளியேயும் அனுதாபத்தை தோற்றுவிக்கவில்லை.

ஏனெனில், இவர்கள் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டதன் மூலம், அரசின் இராணுவ உத்தியை முன்னெடுக்கும் பகடைக்காய்களாகிவிட்டனர் என்பது யாவரும் அறிந்த ஒன்றேயாகும்.

எனவே, பகடைக்காய்களை பலிகொடுப்பதற்கு ஆட்சியாளர்களோ, பலி எடுக்க புலிகளோ தயங்கமாட்டார்கள் என்பதும் நன்கு புலனாகியே இருந்தது.

அரசின் இராணுவ நோக்கங்களை எட்டுவதற்கான தேர்தலில் போட்டியிட்டதன் மூலம் யாழ் மாவட்ட உள்ளூராட்சி சபை உறுப்பினர்களும் போரில் ஈடுபடும் தரப்புக்கள் என்ற வரையறைக்குள் அடங்குகின்றனர்.

எனவே போரில் ஈடுபடும் தரப்புக்களில் யார் முந்துகிறார்களோ அவர்கள் வெல்வதும், பிந்துகிறவர்கள் வீழ்வதும் தவிர்க்க முடியாததே.

ஆனால், தம்மை போருக்கு அப்பாற்பட்ட ஜனநாயகவாதிகளாக கூறியபடி தமது தரப்பு மரணங்களை ஜனநாயகத்திற்கான அச்சுறுத்தல்களாக இக் கட்சிகள் சித்தரித்து வருவது வேடிக்கையானதாகும்.

இத்தகைய சித்தரிப்புக்கள் பயனற்று போவதுடன், யாழ் குடாநாட்டில் மாநகர முதல்வர்கள் இருவர் அடுத்தடுத்து பலியானமைகூட, அவர்களுக்கு பாதுகாப்பு வழங்க முடியாத அரசின் இயலாமையாகவே நோக்கப்படுகிறது.

உள்ளூராட்சி சபை கூட்டங்களை அவற்றுக்குரிய கட்டடங்களில் நடத்தக்கூட படைத்தரப்பால் உத்தரவாதம் வழங்க முடியவில்லை. உத்தரவாதம் கொடுத்தால்கூட அதனை உறுப்பினர்கள் எவரும் நம்பும் நிலையும் இல்லை என்பதும் தெளிவாகியுள்ளது. அதனால் கட்சிகளது காரியாலயங்களிலேயே சபைக் கூட்டங்கள் அரங்கேறும் புதுமையை கூட்டணியினர் ஆரம்பித்து வைக்க வேண்டியிருந்தது.

உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் கொல்லப்படுதல் புலிகளது ஜனநாயக விரோத செயற்பாடாக கருதப்படும் என்று அரசு நினைத்தது. இன்றோ, புலிகளைமீறி யாழ் குடாநாட்டில் அரசு எதனையும் செய்யவியலாது என்பதற்கான வெளிப்பாடாக அவை மாறியுள்ளன.

இதற்கிடையே யாழில் காணாமல் போனோர் விவகாரம், செம்மணி புதைகுழி விவகாரங்களில் ஆட்சியாளரின் வார்த்தைகள், வாக்குறுதிகள் என்பவை இழுத்தடிக்கும் உபாயங்களே என்பதும் உலகின் முன்பாக அம்பலமாகிவிட்டன.

ஆகவே, யாழ் குடாநாட்டை துருப்புச் சீட்டாக பயன்படுத்தி நிதி பெறும் திட்டங்கள் தோல்வியடைந்துள்ளது மட்டுமல்லாமல், மனித உரிமைகள் விடயத்தில் இன்றைய ஆட்சியாளர்களும் அலட்சியப் போக்கினரே என்பதும் நிரூபணமாகிவருகிறது.

இவ்வாறான நிலையில்தான் யாழில் உள்ள தமிழ்க் கட்சிகளை அவசரமாக அழைத்து மாநாடு நடத்தியுள்ளார் ஜனாதிபதி.

யாழில் சிவில் நிர்வாகம் இயங்குவதாக உலகுக்கு காண்பிக்கக் கூடிய விதமாக ஒரு பேருக்காக என்றாலும் உள்ளூராட்சிச் சபைகள் இயங்கவேண்டும் என்பது ஆட்சியாளரின் நோக்கமாக உள்ளது.

எனவேதான், உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் யாழில் நடந்து முடிந்து சுமார் பத்துமாதங்களின் பின்னர், அவர்களது பாதுகாப்பு தொடர்பாக ஆட்சியாளர்கள் அக்கறைப்பட்டிருக்கின்றனர்.

அவர்கள் பலியாவது பயன்தரத்தக்கதாக அமையாத நிலையில், அவர்களை வைத்து சபைகளை நடத்தி சிவில் நிர்வாக மாயை காட்டும் வழி வகைபற்றி சிந்திக்கப்பட்டுள்ளது.

அதன் காரணமாகவே உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு ஆயுதம் வழங்க முன்வந்துள்ளனர்.

மொத்தத்தில் யாழில் அரசாங்கத்தின் நலனை பாதுகாக்கும் போர் வீரர்களாக ஆயுதம் ஏந்தப் போகின்றனர் உள்ளூராட்சிசபை உறுப்பினர்கள். இதன் மூலம் படைத்தரப்பின் ஆட்பற்றாக்குறைக்கும் மறைமுகமான பரிகாரம் காணப்படப்போகிறது.

அரசு வழங்கும் ஆயுதங்களை பெற்றுள்ளது மூலம், நாம் யுத்தத்துக்கு தயார் என்று உள்ளூராட்சிசபை உறுப்பினாக்ள் நேரடியாகவே புலிகளுடன் சவால் விட்டுள்ளனர் என்றே அர்த்தமாகும்.

எனவே, இனிமேல் புலிகள் தம்மைத் தாக்கினால் இவர்கள் பதிற் தாக்குதல் நடத்தி முறியடிக்க வேண்டுமேயல்லாமல், தம்மைப் புலிகள் தாக்கிவிட்டதாக அறிக்கைகள் விடுவதில் அர்த்தமிருக்கப் போவதில்லை.

யாழ் குடாநாட்டில் புலிகளின் நடமாட்டங்களும், செயற்பாடுகளும் மேலோங்கியதாலேயே அங்குள்ள தமிழ்க் கட்சிகளின் தயவு அரசுக்கு தேவைப்படுகிறது.

யாழ் குடாநாடு கைப்பற்றப்பட்ட பின்னர், 'யாழ்ப்பாணத்துக்கு தமிழ்க் கட்சிகள் வருவதை புத்திஜீவிகளும், அங்குள்ள மக்களும் விரும்பவில்லை.' என்று அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ், ஜெனரல் ரத்வத்தை, எஸ்.பி.திசநாயக்கா ஆகியோர் பகிரங்கமாக கூறியிருந்தனர்.

தமிழ் புத்திஜீவிகளை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைத்து தீர்வுப் பொதியைப் பற்றி விளக்கப்போவதாக பேராசிரியர் பீரிஸ் அறிவித்திருந்தார்.

யாழ் நகரில் கரும்புலித் தாக்குதல் நடைபெற்ற பின்னர் அரசுக்கு முண்டுகொடுக்க முனைந்த புத்திஜீவிகள் தலைமறைவாகினர்.

அதன் பின்னரே தமிழ்க் கட்சிகளுக்கு யாழ் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

அவ்வாறு இருந்தும் யாழ் குடாநாட்டில் தமிழ்க் கட்சிகளை உரிய மரியாதையுடன் நடத்துவதாகத் தெரியவில்லை. சமீபத்தில்கூட புளொட் உறுப்பினர்கள் நையப்புடைக்கப்பட்டனர். ஈ.பி.டி.பி உள்ளூராட்சிச் சபை உறுப்பினர் ஒருவரை, அவரைப் பாதுகாக்க வேண்டியவர்களே தாக்கிவிட்டு சுட்டுக்கொன்றனர்.

தமது உறுப்பினர் படையினராலேயே சுட்டு கொல்லப்பட்டதாக ஈ.பி.டி.பி. எம்.பி. மு. சந்திரகுமார் கூறியிருந்தார்.

யாழ் குடாநாட்டில் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு புலிகளால் அச்சுறுத்தல் என்று கூறும் தமிழ்க் கட்சிகள், படையினரால் பலியான உள்ளூராட்சிச் சபை உறுப்பினரைப் பற்றி வாயே திறக்காமல் மௌனம் சாதித்திருந்தன. அந்த மௌனம் இக்கட்சிகளது ஜனநாயக கோஷங்களை கேள்விக்குள்ளாக்கியது.

எனவே, தமிழ்க் கட்சிகள் உதையும் வாங்கிக்கொண்டு, சற்றும் மனம் தளராமல் ஆட்சியாளருக்கு உபகாரம் செய்யும் கட்சிகளாகவே மாறியுள்ளன. இந்நிலைப்பாடானது ஒட்டுமொத்தமாக தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் அழுத்தும் நடவடிக்கைகளுக்கு துணை போவதாகவே விளங்கிவருகிறது.

## சந்திக்கு வராத சங்கதிகள் — நக்கீரன்

'புலிகளுக்கு ஆயுதம் வழங்க ஜனாதிபதி முடிவு செய்திருக்கிறார்' என்றால் நம்புவது கஷ்டம். ஆனால் அதுதான் நடக்கப்போகிறது.

யாழ் குடாநாட்டில் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு ஆயுதம் வழங்கப்பட உள்ளது அல்லவா. அந்த ஆயுதங்கள் புலிகளிடம் போய்ச் சேராது என்பதற்கு என்ன உத்தரவாதம்?!

இந்தியப் படையும் முன்னர் புலிகளுக்கு நேரடியாக ஆயுதம் கொடுக்காமல், தேசிய இராணுவம் மூலமாக கொடுத்தது என்று கூறப்படுவதுண்டு.

யாழ் குடாநாட்டில் புலிகளுக்கு தமது டம்பிங்குகளை எடுக்க கஷ்டம், அல்லது சில இடங்களுக்கு ஆயுதம் காவிச்செல்ல கஷ்டம் என்றால் சுலபமாக பெறக்கூடிய புதிய வாய்ப்புக்கள் உருவாக்கிக் கொடுக்கப்படப்போகின்றன.

ஒரே ஒரு சந்தேகம்; வழங்கப்படப்போகும் துப்பாக்கிகள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு தோழனா? எமனா?

மிக முக்கியமான இன்னெரு கேள்வி:

கிழக்கு மாகாணத்திலும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் பலர் புலிகளால் கொல்லப்படுகின்றனர்.

அவர்களுக்கு ஆயுதம் கொடுப்பது பற்றி ஏன் இதுவரை ஜனாதிபதி மாநாடு நடத்தவில்லை?

அவர் நடத்தாதது இருக்கட்டும் மாநாட்டில் கலந்துகொண்ட தமிழ்க்கட்சிகள் ஏன் அதுபற்றி கேட்கவில்லை?

உள்ளூராட்சி சபை உறுப்பினர்களது உயிர் காப்புத்தான் முக்கியம் என்று அரசு கருதுவது உண்மையானால், கிழக்கு மாகாண உள்ளூராட்சிசபை உறுப்பினர்கள் பற்றியும் அக்கறைப்பட்டிருக்க வேண்டும்.

யாழ்குடாநாட்டைவிட மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் சமீபகாலத்தில் பலியான உள்ளூராட்சிசபை உறுப்பினர்கள் தொகை அதிகம்.

புலிகளின் ஜனநாயக மீறலை சற்றும் பொறுக்காமல்தான் தமிழ்க் கட்சிகள் புலிகளை கண்டிப்பது என்பது உண்மையானால், கிழக்கில் பலியாகும் உறுப்பினர்கள் பற்றியும் பொங்கி எழுந்திருக்க வேண்டுமன்றோ.

அப்படியானால் நாம் என்ன முடிவுக்கு வர வேண்டியுள்ளது என்று உங்களுக்கே தெரியும்.

***

'இந்த நாட்டுக்கு சொந்தமில்லாத சிறுபான்மையினர்' என்று தமிழர்களை ஜனாதிபதி கூறியதாக

### புலிகளுக்கு ஆயுதம் வழங்க முடிவு!

குமார் பொன்னம்பலம் கண்டனம் தெரிவித்திருந்தார்.

ஆதாரமற்ற கண்டனமல்ல. ஜனாதிபதி அவ்வாறு கூறியதை அரச தொலைக்காட்சியான ரூபவாஹினிதான் தனது செய்தி அறிக்கையில் ஒளிபரப்பியிருந்தது.

குமாரின் கண்டனம் தமிழில் மட்டுமல்ல, ஆங்கிலப் பத்திரிகைகளிலும் கொட்டை எழுத்தில் வெளிவந்திருந்தன.

அவ்வாறு இருந்தும் இன்றுவரை ஜனாதிபதியோ, ஜனாதிபதி செயலகமோ மறுப்பு எதனையும் கூறவில்லை.

தென்னாபிரிக்கத் தொலைக் காட்சி ஒன்றுக்கு அளிக்கப்பட்ட பேட்டியிலேயே அதனை கூறியதாக ரூபவாஹினி தெரிவித்திருந்தது.

நீண்ட காலத்தின்பின்னர் கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்றில் தகவல் திணைக்கள பொறுப்பதிகாரியால் மறுப்பு அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

'வட்டுக்கோட்டைக்கு போகும் பாதை எது வென்றால், துட்டுக்கு ரெண்டு கொட்டைப் பாக்கு' என்ற கதையாக உள்ளது அந்த மறுப்பறிக்கை.

தென்னாபிரிக்க தொலைக்காட்சி பேட்டியில் ஜனாதிபதி கூறியது என்ன? ரூபவாஹினி செய்தி சரியா? தவறா? என்பதைத்தான் தமிழ் பேசும் மக்கள் அறிய விரும்புகிறார்கள்.

ஆனால், தென்னாபிரிக்க பத்திரிகை ஒன்றில் வெளியான வாசகர் கடிதம் ஒன்றுக்கு பதில் அளிப்பதுபோல, குழப்பமான, மழுப்பலான மறுப்பே வெளியாகியுள்ளது. ரூபவாஹினி செய்தி பற்றி மறுப்பில் குறிப்பிடப்படவுமில்லை.

'ஜனாதிபதி அவ்வாறு கூறக்கூடியவர் அல்ல' என்றும் தகவல் திணைக்கள பொறுப்பதிகாரி கூறியுள்ளார். நமக்குத் தேவை ஜனாதிபதி பற்றிய அவரது அபிப்பிராயமல்ல. தொலைக்காட்சிப் பேட்டியில் ஜனாதிபதி அவ்வாறு கூறியதாக ரூபவாஹினி சொன்னது மெய்யா? பொய்யா? என்பதற்கு தெளிவான பதில்தான் தேவை.

தவிர, 'தமிழர்களுக்கு இலங்கை சரித்திரத்தில் நீண்டகால தொடர்பு இருப்பதை ஏற்கும் தலைவர்களில் ஜனாதிபதியும் ஒருவர்' என்றும் மறுப்பில் கூறியுள்ளார் பொறுப்பதிகாரி.

அது என்ன நீண்டகாலத் தொடர்பு? இந்தநாடு சொந்தமில்லைத்தான், ஆனால் தொடர்பு இருக்கிறது என்பதுமாதிரி அர்த்தமாகிறதோ? என்ற சந்தேகத்தை தருகிறது.

ஏன் இந்த பட்டும் படாத சொற்பிரயோகம்? இந்த நாடு சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்கு சொந்த நாடு என்று திட்டவட்டமாக கூறியிருந்தால் அவரைப் பாராட்டியிருக்கலாம்.



படிப்பகம்

## உண்மைத் தொடர்

## அதிர் இடி 35

**கடந்தவாரம்**

**ஆசிய நாட்டவர்களது சொத்துக்களை சூறையாடி பெரும் செல்வந்தர்களாக மாறுகின்றனர் படை அதிகாரிகள். ஆசிய நாட்டவரான மத்வானி குடும்பத்தின் சொத்துக்களை இடி அமீன் எடுத்துக் கொள்கிறான்.**

**இனி....**

# இடி அமீன்



மத்வானி குடும்பத்தின் திரண்ட சொத்துக்கள் பல நூறு கோடி ரூபாய்கள் பெறுமதியானவை.

மத்வானி குடும்பம் தம் நாடான இந்தியாவுக்கு சென்றுவிட்டது.

மத்வானிக்கு சொந்தமான மூன்று மாளிகைகளில், பிரமாண்டமான மாளிகையைத்தான் தனது உல்லாச விடுதியாக்கினான் அமீன்.

அம் மாளிகையின் சுவரில் தொங்கிய ஓவியம் அமீனை கிறங்கடித்தது.

மத்வானியின் மகளின் தோற்றமே ஓவியமாக வரையப்பட்டு அங்கு மாட்டப்பட்டிருந்தது.

அவள் பிரமாதமான அழகி. ஓவியத்திலேயே அவள் அழகு காண்போரை அசத்தும் வண்ணம் இருந்தது.

**"யார் இவள்?"** என்றான் ஓவியம் கண்டே சூடாகிவிட்ட அமீன்.

"மத்வானியின் மகள்!" என்றான் கூட நின்ற அதிகாரி.

**"மாம்பழம் மாதிரி இருக்கிறாள்! ஏன் தவறவிட்டாய்?"** என்றான் அமீன் அந்த ஓவியத்தை கண்களால் விழுங்கியபடி.

அதற்கு என்ன பதில் சொன்னாலும் அமீனின் கோபத்தை சந்திக்க வேண்டும் என்று தெரிந்து மௌனம் சாதித்தான் அதிகாரி.

**"மத்வானி குடும்பம் இப்போது எங்கே?"** என்றான் அமீன்.

"அவர்கள் நாட்டுக்கு. இந்தியாவுக்கு" என்றான் அதிகாரி.

**"நான் மத்வானியை நேரில் காண விரும்புகிறேன். அவர்களது சொத்துக்கள் விடயமாக நேரில் பேச விரும்புகிறேன். என்று தகவல் அனுப்பு. முடியுமா?"** என்றான்.

"முயற்சிக்கிறேன்!" என்று கூறிய அதிகாரியின் கன்னத்தில் இடி இறங்கியது. அமீன் கரம் ஓங்கி இறங்கியது.

**"உன் பதில் தவறு! இப்படியான பதில் இனிமேல் என் முன்பாக வரக்கூடாது, தெரிந்ததா? முடியுமா? என்று நான் கேட்டு முடிப்பதற்கு இடையில் நீ என்ன கூறியிருக்க வேண்டும்?"**

"ஆம் என்று!" என்றான் கன்னம் வீங்கிய அதிகாரி.

**"குட்! குட் என்றால் என்னவென்று தெரியுமா?"** என்றான் அமீன்.

"தெரியாது" என்று அதிகாரி கூறியதால் மகிழ்ந்த அமீன்: **"குட் என்றால் நன்று என்று அர்த்தம்!"** என்று சிரித்தான்.

பிறருக்கு தெரியாதது தனக்குத் தெரிந்திருக்கிறது என்று காண்பிப்பதில் எப்போதுமே குஷியாகிவிடுவான் அமீன்.

அமீன் கட்டளைப்படி மத்வானி குடும்பத்திற்கு தகவல் அனுப்பப்பட்டது.

மத்வானி வியாபாரி. இடி அமீன் இலாபம் இல்லாமல் தன்னை அழைக்க மாட்டான் என்பதை ஊகித்து, 'தற்போது வருவதற்கு இல்லை?' என்று பதில் கொடுத்தார்.

**"அப்படியா கூறுகிறான். சரி இப்படி தகவல் கொடு. 'என் மாமனாராக மத்வானிக்கு சம்மதமா?' என்று நான் கேட்பதாக தெரிவித்துவிடு!"** என்றான்.

அதிகாரிக்கு உள்ளூரச் சிரிப்பாக இருந்தது. 'இடி அமீனுக்கு பெண் கொடுக்குமளவுக்கு மத்வானி முட்டாளல்ல. யாராவது கிளியை வளர்த்து குரங்கிடம் தருவார்களா?' என்று உள்ளூர நகைத்தபடி வெளியே பணிவுகாட்டி அமீன் கூறியபடியே செய்தான்.

அதிகாரி எதிர்பார்த்தபடியே பதில் வந்தது. "இடி அமீன் உகண்டாவின் அதிபராக இருக்கலாம். ஆனால் எந்தப் பெண்ணுக்கும் நல்ல புருஷனாக இருக்க முடியாது" என்று தன் சொத்துக்களை இழந்த கோபத்தையெல்லாம் திரட்டி பதில் போட்டிருந்தார் மத்வானி.

அதிகாரி அதை அப்படியே அமீனிடம் கொடுத்தான். தன் கன்னத்தில் அறைந்த அமீனின் இதயத்தில் மத்வானி அடித்துவிட்டார் என்று மகிழ்ந்த அதிகாரி, அமீனின் கோபத்தை ரசித்தான்.

**"மத்வானி ஒரு...... மகன்"** என்று கெட்டவார்த்தையை பிரயோகித்த அமீன், அடுத்து பிறப்பித்த கட்டளை அதிகாரியை தூக்கிவாரிப்போட்டது.

**"மத்வானியின் மகளது சாயலில் யார் இருந்தாலும் உடனே எனக்கு வேண்டும். ஆம், உடனே, உடனே வேண்டும்!"** என்று கத்தினான். அவனது தொண்டை நரம்புகள் புடைத்திருந்தன.

திடீரென்று அதிகாரியிடம் கேட்டான்; **"மத்வானி என்ன பதில் அனுப்பினான் என்று படித்து பார்த்தாயா?"**

அதிகாரியின் நல்ல நேரம், "இல்லை, தங்களிடம் அப்படியே தந்துவிட்டேன்" என்று சுத்தமாகப் பொய் சொன்னான்.

இடி அமீனின் முகத்தில் திருப்தி தெரிந்தது. **"சரி, சொன்னதைச் 'செய்"** என்று அனுப்பினான்.

அன்றிரவே அமீனின் உல்லாச மாளிகையாக மாறிய மத்வானியின் பங்களாவுக்கு பத்துக்கு மேற்பட்ட அழகிகள் கொண்டு வரப்பட்டனர்.

மத்வானியின் மகளது சாயல் அவர்கள் முகங்களில் இல்லையென்றாலும், உடம்பு மட்டும் வளப்பமாக இருந்தது.

அவர்கள் பலவந்தமாக இராணுவத்தினரால் கடத்திவரப்பட்டிருந்தனர். தங்களை விட்டுவிடுமாறு மன்றாடி அழுது புலம்பிக் கொண்டிருந்தனர்.

அமீன் அவர்களை பார்வையிட்டான். கோழிக் குஞ்சுகளை பருந்து ஒன்று விருந்துக்காக பார்ப்பதுபோன்ற பசிப்பார்வை.

சட்டென்று அவர்களில் ஒருத்தியை தூக்கி தன் தோளில் போட்டுக்கொண்டான். **"இவர்கள் உங்களுக்கு!"** என்றான் பாதுகாப்பாக நின்ற காவலர்களிடம்.

தூக்கிச் செல்லப்பட்டவள் துடித்தாள். பதறினாள். காலில் விழுந்து கதறினாள்.

எதையும் கேட்கும் நிலையில் அமீன் இருக்கவில்லை. அவன் பைத்தியம் பிடித்தவன் போல தன் உடைகளை களைந்து வீசினான்.

**"வா, நீதான் மத்வானியின் மகள்! நீதான் என்னை இகழ்ந்தவனின் மகள்! வாடி வா"** என்று தன் கரங்களை அகல விரித்தபடி அவளை அழைத்தான்.

அந்தப் பெண்ணுக்கு புரியவில்லை. "ஐயோ நான் மத்வானியின் **மகள் அல்ல. என்னை விடுங்கள்!" என்று கதறினாள்.**



அடுத்த நொடியே அமீனின் பலமான கரங்கள் அவளை தூக்கி கட்டிலில் பொம்மையை எறிவதுபோல எறிந்தன.

அவள் உடைகளை பிடித்து இழுத்தான். தடுக்க முயன்றபோது கன்னத்தில் அறைந்தான். அவள் பயத்தாலும், அறையாலும் மயக்கமானாள்.

அதன்பின்னர் நடந்தது ஜீரணிக்க முடியாத கோரம். அமீனின் காவலர்கள்கூட உள்ளூர வெறுத்துப் போயினர். தங்கள் அருவெறுப்பை மறைக்க முடியாமல் திண்டாடினார்கள்.

வெறிதீரும்வரை அவளை ஆக்கிரமித்த அமீன், அதன் பின்னரும் தன் கொடூரத்தை காட்டினான்.

சிறிய கத்தி ஒன்றால் அவளது குரல்வளை நரம்பை துண்டித்தான். குபுக்கென்று கொட்டிய இரத்தத்தை ஒரு குவளையில் சேகரித்தான்.

உடையற்ற உடல் உயிரற்ற உடலாகவும் மாறியது.

இரத்தம் நிறைந்த குவளையுடன் கதவைத் திறந்து வந்து, தன் காவலர்களை அழைத்தான்.

மாளிகை எங்கும் ஒரே கூக்குரல் சத்தம். அமீன் தம்மிடம் தந்த பெண்களை காவலர்கள் மேய்ந்துகொண்டிருந்தார்கள்.

அமீனின் குரல் கேட்டு அப்படியே விட்டுவிட்டு அவசர அவசரமாக யூனிபோமை மாட்டிக்கொண்டு ஓடிவந்தார்கள்.

**"இது இரத்தம்! அவன் உடல் மட்டுமல்ல,** இரத்தமும் சுவைதான்" என்றுவிட்டு இடியாக நகைத்து, குவளையின் விளிம்பில் தன் தடித்த உதடுகளை வைத்து ருசித்தான்.

காவலர்களுக்கு அமீன் மனித மாமிசம் சாப்பிடும் விஷயம் ஜாடைமாடையாகத் தெரிந்தாலும், இப்படி பச்சை இரத்தத்தை தம் கண் முன்பாகவே குடித்ததைக் காண வயிற்றைக் குமட்டியது.

அமீனோ ருசித்து ருசித்து குடித்தான்.

அக் காட்சியை கண்டபின்னர் தங்களுக்கு தரப்பட்ட அழகிகளை கொடுமைப்படுத்த எவருக்கும் மனம் வரவில்லை. சுகம் காணும் மனநிலையிலும் எவருமில்லை.

இச் சம்பவம் அமீனின் காவலர்கள் சிலர் மூலமாக வெளியே பரவி, நாடெங்கும் காட்டுத் தீயாகப் பரவியது.

அப்படியும் இருக்குமா? ஒரு மனிதனால் இப்படி நடக்க முடியுமா? என்று பலர் சந்தேகப்பட்டனர். சிலர்தான் நம்பினார்கள்.

அமீனின் எதிரிகள்தான் கதை கட்டி விடுகிறார்கள் என்று அமீனின் ஆட்கள் கூறினார்கள்.

தன் காவலர்கள் மூலம்தான் தகவல் வெளியே போகிறது என்று சந்தேகித்த அமீன், அத்தனைபேரையும் தடுப்பு முகாமில் போடுமாறு உத்தரவிட்டான்.

புதிய காவலர்கள் இராணுவத்தில் இருந்து தேர்வு செய்து நியமிக்கப்பட்டனர். தனது சொந்தக்காரர்களையும் மெய்க் காப்பாளர்களாக நியமித்தான்.

1973 மார்ச்சில் உகண்டாவின் ஜெர்மனுக்கான தூதராக இருந்த ஜோண் பாரிஜ்யே அனுப்பிய ராஜினாமாக் கடிதம் அமீனின் கையில் கிடைத்தது.

"காட்டுமிராண்டித்தனமாக மக்களை வதைக்கும் ஆட்சிக்கு உடந்தையாக இருக்க விரும்பவில்லை" என்று எழுதியிருந் தார்.

**"வெளிநாட்டமைச்சர் வான்யும் கிபேடி உடனே வரவேண்டும்!"** அமீன் அழைத்தான்.

வெளிநாட்டு அமைச்சர் பதினைந்து நிமிடத்துக்குள் அமீன் முன் ஆஜரானார்.

**"வெளிநாட்டு தூதர் ஒருவருக்கு எனக்கே கண்டனக் கடிதம் அனுப்பும் துணிச்சல் எப்படி வந்தது? நீர் அமைச்சு நடத்தும் அழகு இதுதானா?"** என்று சீறியபடி கடிதத்தை அவர் முன் விட்டெறிந்தான்.

கடிதத்தை படித்த அமைச்சர் "நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றார். **"எதை என்னை மிரட்டுவதையா?"** என்று எரிந்து விழுந்தான்.

"நாளையே ஒரு திட்டத்தோடு தங்களைப் பார்க்கிறேன்" என்று பவ்வியமாக கூறினார் அமைச்சர்.

மறுநாள் காலையில் குறிப்பிட்ட நேரத்திற்கு வெளிநாட்டமைச்சர் வராமல்போக, ஃபோனில் தேடினான் அமீன். பதிலில்லை.

பின்னர் ஃபோன் ஒலித்தது. அமீன் எடுத்தான்.

"நான்தான் வெளிநாட்டமைச்சர் பேசுகிறேன்." என்றார்.

## தருவது ரசிகன்

**"ஓ.நீரா? சொன்ன நேரத்திற்கு வரவில்லை?"** என்றான் அமீன் கோபமாக.

"இனி எப்போதும் வரமாட்டேன். நீ அதிபரே அல்ல. மிருகம்!" என்றார்.

**"டேய்! நாயே! உன்னை என்ன செய்கிறேன் பார்"** என்று அமீன் கத்தினான்.

மறுமுனையில் சிரித்த அமைச்சர்: "துள்ளாதே அமீன், முடிந்தால் பிடித்துக் கொள் முட்டாளே! முட்டாள், முட்டாள். முட்டாள்!" என்று ஆசைதீர திட்டிவிட்டு ஃபோனை வைத்துவிட்டார்.

அப்போது அவர் கென்யா நாட்டுக்குள் இருந்தார் என்பது அமீனுக்கு பின்னர்தான் தெரிந்தது.

(இடி தொடரும்)

# தேனிலவு நாயகன்



**79** வயதில் தேனிலவு கொண்டாடியுள்ளார் நடிகர் ஜெமினி கணேசன். 'தேனிலவு' என்ற பட நாயகனும் அவரே. தேனிலவு அனுபவத்தை அறிய பத்திரிகைகள் போட்டி போட்டன. மனுசரும் அசராமல் பேட்டி குடுத்திருக்கிறார்.

'என்னிடம் எந்த நடிகருக்கும் இல்லாதளவுக்கு பணமும், சொத்துக்களும் இருக்கின்றன. நான் என்ன செய்தாலும் எவனும் கேட்க முடியாது.

நான் இதுவரை பாப்ஜி, புஸ்பவல்லி, சாவித்திரி ஆகியோரை கல்யாணம் பண்ணினேன். பிள்ளைகள் எல்லோரும் நல்ல முறையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு என்னைக் கவனிக்க நேரம் கிடையாது.

என் முதல் மனைவி பாப்ஜி அம்மன் மாதிரி. ஆனால் அவருக்கு வயதாகிவிட்டது.

என்னைக் கவனிக்க, எனக்கு தாய் மாதிரி, தோழி மாதிரி, நர்ஸ் மாதிரி ஒரு துணை தேவை. அதுதான் இப்போது கல்யாணம் செய்து கொண்டேன்.

என் முதல் மனைவி பாப்ஜிக்கும் இதில் பூரண சந்தோசம். என்று கூறிய ஜெமினி, "அடுத்து எங்களுக்கு பிறக்கப்போகும் குழந்தையையும் நல்ல நிலைக்கு கொண்டு வரவேண்டும்" என்று ஒரே போடாக போட்டு பத்திரிகையாளர்களை கலங்கடித்திருக்கிறார். "இவரது வயதே நீங்கள் சொல்லித்தான் தெரிகிறது. எனக்கு அது தெரியவேயில்லை. இவரை முதன் முதலில் பெங்களூரில் விருந்துபசாரம் ஒன்றில் பார்த்தபோதே 'இவர்தான் எனக்குரியவர்' என்ற எண்ணம் ஏற்பட்டுவிட்டது.

பின்னர் நான் சிங்கப்பூர் சென்ற பின்னரும் ஃபோனில் பேசிக்கொள்வோம். இவர் என்னை நினைத்து புலம்புவதைப் பார்த்த பாப்ஜிதான் திருமணம் செய்து வைத்தார்" என்று கூறுகிறார் ஜெமினியின் இளம் மனைவி.

# கதிகலக்கும் பேட்டி



பிரபல ஹொலிவுட் நடிகர் கிளின்ட் ஈஸ்ட்வுட். பட்பட்டென்று எதிரிகளை குறி தவறாமல் சுட்டு வீழ்த்தும் சூரராக நடித்து புகழ் பெற்றவர். இப்போது வயதாகி விட்டது. ஆனாலும் படங்களை இயக்கி வருகிறார்.

கிளின்ட் ஈஸ்ட்வுட்டின் மனைவிகளது எண்ணிக்கையை விரல்விட்டு எண்ணுவது கஷ்டம். அந்த மனைவிகளில் ஒருவரது மகள் அலிசன் ஈஸ்ட்வுட்.

அப்பா சுட்டுக் கலக்கினார், மகளோ கவர்ச்சி கொட்டிக் கலக்குகிறாள்.

ஹொலிவுட் படவுலகில் இன்று கலக்கத் தொடங்கியுள்ள கவர்ச்சிப்புயல் இவர்தான். தனது தந்தையார் இயக்கிய 'மிட் நைட் இன் த கார்டன் ஒஃப் குட் அன்ட் ஈவில்' என்ற படத்தில் படு கவர்ச்சியாக நடித்து நடுங்க வைக்கிறார்.

தாராளமாக நடிக்க வேண்டிய காட்சிகளின்போது தந்தையார் தள்ளிப் போய்விடுவாராம்.

சமீபத்தில் இந்தக் கவர்ச்சிப் புயல் சொடுத்துள்ள பேட்டியும் பெரும் புயலை கிளப்பியுள்ளது.

பேட்டியில் இருந்து பிரசுரிக்கக் கூடிய பகுதிகள் மட்டும் இங்கே.

**கே: உங்கள் உடம்பில் உங்களுக்குப் பிடித்த பகுதி எது?**

ப: எனது கண்கள். அதன் பச்சை நிற விழிகள்.. அப்பாவுக்கு பிடித்தது.

**கே: உங்களை பாதித்த ஆண் நண்பர்கள்?**

ப: 16 வயதானபோது 31 வயது வாலிபர். 18 வயதானபோது 40 வயது நண்பர். என்னைப் பொறுத்தவரை சம வயது ஆண்களைவிட, பத்து வயது அதிகமான ஆண்களுடன்தான் நட்பு வைத்திருக்க விரும்புகிறேன்.

**கே: மறக்கமுடியாத நினைவுகள்?**

ப: நியூயோர்க்கில் நான் நடிப்புக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது மதுவுக்கும் போதைக்கும் அடிமையானேன். என்னோடு படித்த எல்லா மாணவர்களும் என்னுடன் நட்பு கொண்டிருந்தனர்! என்று அதிரடியாக பேட்டி கொடுத்திருக்கிறார் அலிசன்.

# 50வது குழந்தை

நடிகர் ஜெமினி கணேசனையும் தூக்கிச் சாப்பிட்டுவிடக்கூடிய ஒருத்தர் துருக்கி நாட்டில் இருக்கிறார். பெயர் அப்துர் ரஹ்மான் அட்மாகா. அன்னாரின் வயது 78.

இவருக்கு நாலு மனைவிகள். 49 பிள்ளைகள். மூத்த பிள்ளைக்கு 56 வயது. கடைசியாக ஆறு மாதங்களுக்கு முன்னர் இரட்டைக் குழந்தை பிறந்தது.

தொண்ணூறு பேரக் குழந்தைகளும் இருக்கிறார்கள். மூத்த பேரக் குழந்தையின் வயது 30. நான்காவது மனைவிக்கு 37 வயது. அந்த மனைவி விரைவில் குழந்தை பெறவுள்ளார். அத்தோடு ரஹமான் 50வது குழந்தைக்கு தந்தையாகி அரைச் சதம் போட்ட அப்பாவாகப் போகிறார்.

நான்கு மனைவிகளது வீட்டிலும் மாறி மாறித் தங்குவாராம். இவரது ஆசை என்னவென்றால், தனது கிராமத்தில் பள்ளிக்கூடம் ஒன்று கட்டப்படவேண்டும். அங்கு தன் பிள்ளைகளும், பேரக் குழந்தைகளும் படிக்க வேண்டுமாம். நியாயமான ஆசைதான். பள்ளிக்கூடம் என்ன பல்கலைக்கழகம் கூட கட்டித்தரலாம்.

# ஆப்கான் பெண்கள் விரக்தி

ஆப்கானிஸ்தானில் உள்ள பெண்களில் 97 சதவீதத்தினர் மிகுந்த மனத் தளர்ச்சி அடைந்துள்ளனர்.



அதில் 86 சதவீதத்தினர் கடும் கவலையுற்றுள்ளனர். 25 சதவீதம் பேர் தற்கொலை செய்யும் எண்ணம் கொண்டுள்ளனர்.

பெண்களின் இத்தகைய விரக்தி நிலைக்கு காரணம் ஆப்கானில் தலிபான் அரசின் கெடுபிடிகள்.

மருத்துவமனைகளில் பெண் மருத்துவர்களிடம்தான் பெண்கள் சிகிச்சை பெற வேண்டும் என்பது தலிபான் உத்தரவு.

பெண் மருத்துவர்கள் பற்றாக்குறையாக உள்ளதால் பெண் நோயாளர்கள் சிகிச்சை பெற முடியாமல் அவதிப்படுகின்றனர். இதுதவிர பெண்களுக்கு ஏகப்பட்ட கட்டுப்பாடுகள். அடிமைகள் போலவே நடத்தப்படுகின்றனர்.

# மீண்டும் தூண்டில்



'பேஸிக் இன்ஸ்டிங்ட்' படத்தில் தன் கால்களின் கவர்ச்சியை காட்டி ரசிகர்களை பைத்தியமாக்கியவர் ஷெரோன் ஸ்டோன்.

ஹொலிவுட் படவுலகில் கவர்ச்சி நாயகியாக உயர்ந்த ஷெரோனுக்கு சமீபத்தில் சரிவு.

ஆகவே மறுபடி கவர்ச்சிகாட்டி ரசிகர்களின் தூக்கத்தை கொள்ளையடிக்க திட்டமிட்டிருக்கிறார்.

'பேஸிக் இன்ஸ்டிங்ட்' படத்தின் இரண்டாம் பாகத்தில் நடிப்பதற்காக தயாராகிவருகிறார்.

அவரது கணவரும் பத்திரிகையாளருமான பில் ஃப்ரான்ஸ்டின் தனது துணைவி கவர்ச்சிச் சின்னமாக கருதப்படுவதை எண்ணி மகிழ்கிறார். ஆனால் மீண்டும் படு கவர்ச்சியாக அவர் நடிப்பதை மட்டும் விரும்பவில்லை.

ஷெரோன் தன் முடிவில் உறுதியாக இருந்தால் விவாகரத்துவரை விஷயம் போகலாம்.



www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# தகவல் பெட்டி


## மயிர்க்கூச்செறியும் சாதனை



உலகின் பல நாடுகளில் தனது சாகசச் செயல்களைக் காட்டிப் புகழ்பெற்றவர் ஹென்றிஸ் என்பவர். இங்கு என்ன செய்கிறார் தெரியுமா? சாதாரண மேசையின்மீது நாற்காலியை வைத்து அதன் இருக்கையின் விளிம்பில் இரு சாதாரண கண்ணாடி தம்ளர்களைக் கவிழ்த்து வைத்து, அதன் மீது மற்றுமொரு நாற்காலியின் பின் கால்களைக் குத்தெண்ண நிறுத்தி, அந்நாற்காலியில் அமர்ந்து கொள்ளுகிறார். அந்தரத்தில் ஆடாமல் அசையாமல் குறிப்பிட்ட காலநேரம் அமர்ந்து சாதனை புரிகிறார்.

ஃபிரான்சிலுள்ள மியூஸ் ஆற்றின் அருகேயுள்ள குன்றின் உச்சியில் தனது இருக்கையில் ஹென்றிஸ் அமர்ந்திருக்கும் காட்சிதான் இது. இது உலக சாதனையாக பதிவு செய்யப்பட்டுள்ளது. கண்ணாடித் தம்ளர்கள் சற்று பிசகினாலும் குன்றின் உச்சியில் இருந்து விழுந்து குன்றுமணியளவு எலும்புகூட மிஞ்சியிருக்காது. தன்னால் முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையில் தான் இந்த மயிர்க்கூச் செறியும் சாதனை படைக்கத் துணிந்தார். வென்றார்.

## சுருட்டு வியாபாரம்



பில் கிளின்ரன் மோனிகா விவகாரம் இன்னமும் சூடு போகாமல் இருக்கிறது.

அதற்கிடையே அதனை வைத்து இலாபம் பார்க்க ஆளாளுக்கு முண்டியடிக்கிறார்கள். அமெரிக்க இளைஞர்கள் பலர் மோனிகாமீது மோகம் கொண்டிருக்கிறார்கள். கிளின்ரனின் இடத்தில் தங்களை வைத்து கனவு காண்கிறார்கள். அதுபோல அமெரிக்க இளம் பெண்கள் பலருக்கு கிளின்ரன் மேல் ஒரு கிக். அமெரிக்க இளைஞர்களது மோகத்தை உணர்ந்த சுருட்டு நிறுவனம் ஒன்று, தமது சுருட்டுக்களில் மோனிகா படத்தை ஒட்டி விற்பனை செய்கிறது. அமோகமாக விற்பனை நடக்கிறது. இதனைப் பார்த்த இன்னொரு நிறுவனம் கிளின்ரன் படத்தோடு தனது சுருட்டுக்களை விற்க தயாராகிவிட்டதாம். அமெரிக்கப் பெண்கள் சுருட்டு புகைப்பதில் மன்னிகள்.

## டயானா நாற்காலி



மிக மிக சாதாரண நாற்காலிதான் இது. ஆனால் விலை அசாதாரணம்! அதற்கு காரணம் இது டயானா அமர்ந்த நாற்காலி. இதன் சாதாரண விலை ஐயாயிரம் ரூபா. டயானா அமர்ந்ததால் இதன் விலை சுமார் நாலு இலட்சம் ரூபாய்கள்.

இங்கிலாந்தில் சுர்ரேயில் இருக்கும் நிறுவனம் ஒன்றுதான் இதனை ஏலத்தில் விட்டுள்ளது. டயானாவின் இறுதிச் சடங்கிலும் இந்த நாற்காலி பயன்பட்டது என்று விளம்பரம் செய்திருந்தனர். யானை இருந்தாலும் ஆயிரம் பொன். இறந்தாலும் ஆயிரம் பொன். டயானாவும் அப்படித்தான். அவர் இருந்த நாறகாலியும் ஆயிரம் பொன். இந்த நாற்காலியை வாங்குவதற்கு பலத்த கிராக்கி. இது வேறு விதமான நாற்காலி ஆசை.


## பலே பலே



காண்பதென்ன சிற்பமோ? அல்லது இயற்கையாக மரம் செடியில் உருவான வடிவமோ? என்றுதான் எண்ணத் தோன்றும். இரண்டும் இல்லை. பிரிட்டனில் சக்கை போடும் பாலே நடனக் காட்சியில் அசத்தல் கட்டம் இது. உச்சக்கட்டம் என்றும் கூறலாம். ஆணும், பெண்ணும் சேர்ந்து ஆடும் ஆட்டம். ஆணை மரமாக கருதி அவர்மீது கொடியாக சுற்றிச் சுழன்று படர்ந்திருக்கிறார் நாட்டிய அழகி.

பாலே நடனம் வெகு காலத்திற்கு முன்னரே ஆடப்பட்டு வருகிறது. ஆனால் தற்போது புதுப்புது வடிவங்கள் சேர்க்கப்பட்டு காண்போரை கவர்க்கின்றன.


## கற்பூர மூளை



நீருக்குள் வித்தை காட்டுவதில் டொல்பின்கள் பலே கில்லாடிகள். பயிற்சி கொடுத்தால் சட்டென்று புரிந்துகொண்டு புகுந்து விளையாடுகின்றன. டொல்பின்களுக்கு கற்பூர மூளை.

அவுஸ்திரேலியாவில் டொல்பின்கள் சாகசம் செய்யும் காட்சி இது. அமெரிக்க கார் பந்தய வீரரான ரோபிகார்டன் தன் சிநேகிதியுடன் நீரில் குதித்து டொல்பின்களின் சாகசத்தை அருகிலிருந்து இரசிக்கிறார். கார்டனின் சிநேகிதிக்கு சாகசங்கள் பிடிக்குமாம்.

## பந்தயப் பன்றிகள்



குதிரை ஓட்டம், காளை ஓட்டம், மான் ஓட்டம், முயல் ஓட்டம் என்றெல்லாம் கேள்விப் பட்டிருப்பீர்கள்.

இது வித்தியாசமான ஓட்டப் போட்டி. பன்றிகளை சீவிச் சிங்காரித்து ஓட்டப் போட்டியில் இறக்கியுள்ளனர். போட்டிக்கு தயாராக நிற்கும் பன்றிகளே இவை.

சுவிற்ஸர்லாந்தில் ஆண்டுதோறும் நடைபெறும் வேளாண்மை பொருட்காட்சியில் பன்றிகளது ஓட்டப் போட்டிதான் கிளைமாக்ஸ்.

## தோள்கொடுத்த தேள்



மலேசிய அழகியான ரமாலி ஒரு நடனமாதாக மேடைகளில் தோன்றியவர். புதுவிதமாக எதையாவது செய்து சாதனை படைக்க வேண்டும் என்று இரு வருடங்களுக்கு முன்னர் ஆசைப் பட்டார். கொடும் விஷமுள்ள தேள்களுடன் அவற்றுக்கு கோபமூட்டாமல்-சமுகமாகப் பழகும் முறையைத் தானாகவே தெரிந்து கொண்டார். அடர்ந்த காடுகளுக்குச் சென்று தேள்களைப் பிடித்துச் சேகரித்தார். இவ்வாறு நூற்றுக்கணக்கான தேள்களைச் சேகரித்த இவரை ஒரு தேள்கூட கொடுக்கால் தீண்டியதேயில்லை என்கிறார்.

அதிக தேள்களோடு இருந்தவர் என்று உலக சாதனை படைத்திருப்பவர் இவர்தான். இவர் சாதனைக்கு தோள்கொடுக்கும் தோழர்கள் தேள்கள்தான்.

## சினிவிசிட்

# நேருக்கு நேர்
## சூர்யா - சிம்ரான்

'நேருக்கு நேர்' படத்தில் நடித்தபோதுதான் சிம்ரானை முதன்முதலில் நேருக்கு நேர் சந்தித்தார் சூர்யா.

முதல் காட்சியே சிம்ரானும் சூர்யாவும் நேருக்கு நேர் நெஞ்சோடு நெஞ்சாக மோதும் காட்சிதான். இயக்குநர் காட்சியை விளக்கியதும் சூர்யாவுக்குள் படபடப்பும், வெட்கமும் போட்டி போட்டன.

சிம்ரான் எந்த சலனமும் இல்லாமல், 'ரெடி டேக்' சொன்னதும் ஒய்யாரமாய் நடந்துவந்து சூர்யாவுடன் மோதினார் ஒரு மோது.

பயங்கரமான வெட்கம் சூர்யாவுக்கு. வியர்த்துப் போனாராம். அதனால் அக் காட்சியை மட்டும் மூன்று நான்கு தடவை திரும்பத் திரும்ப படமாக்கினார்கள்.

காட்சி ஓ.கே ஆனதும் இயக்குநர் கண்சிமிட்டிய படியே சூர்யாவிடம், "நீ பொல்லாத ஆளப்பா. சிம்ரானிடம் இடிவாங்குவதற்காகவே திரும்ப திரும்ப காட்சியை எடுக்க வைத்துவிட்டாயே," என்ற போது சூர்யாவுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றதாம்.

"முதல் அனுபவம் அப்படித்தான் இருக்கும். போகப்போக சரியாகிவிடும்" என்று தைரியம் கொடுத்ததும், தட்டிக்கொடுத்ததும் சிம்ரான்தானாம்.

அக் காட்சிக்குப் பின்னர் சூர்யாவும், சிம்ரானும் நண்பர்களாகிவிட்டனர். சிம்ரானின் தாராளம் சில சமயங்களில் சூர்யாவை கதி கலங்க வைத்ததும் உண்டாம்.

மற்றவர்கள் பார்க்கிறார்களே என்ற கூச்சம் கொஞ்சமும் இல்லாமல் பகிரங்கமாகவே சூர்யாவை தொட்டுத் தொட்டு சிம்ரான் பேசுவதுதான் சூர்யாவுக்கு தர்மசங்கடமாக இருந்ததாம்.

சூர்யா சிம்ரான் \ முகப்பில்

# முதல் தோல்வி

தெலுங்கில் பிரபல இயக்குநர் ராகவேந்திர ராவ். பிரபு தேவா முதன் முதலில் தெலுங்கில் நடிக்க 'லவ் 99' என்னும் படத்தை இயக்கினார்.

ராகவேந்திராவ் இயக்கும் படங்கள் தோல்வி காண்பது அரிது. ஆனால் 'லவ் 99' படு தோல்வி கண்டு அதிர்ச்சியடைய வைத்திருக்கிறது. அதிர்ச்சி ராகவேந்திராவுக்கு மட்டுமல்ல, பிரபு தேவாவுக்கும்தான்.

# உனக்கும் எனக்கும்

'சொல்லாமலே' படம் வெற்றி பெற்றதால் லிவிங்ஸ்டன் அடுத்த படத்தில் மூழ்கி விட்டார்.

லிவிங்ஸ்டன், தேவயாணி நடித்து இடைநடுவே தொங்கிய படம் 'உனக்கும் எனக்கும் கல்யாணம்! சொல்லாமலே பட வெற்றியால் மறுபடி படப் பிடிப்பு ஆரம்பமாகியுள்ளது.

# கஸ்தூரிமான்

தன்னை பாலியல் பலாத்காரம் செய்த சமூக விரோதிகளை ஒரு கல்லூரி மாணவி எப்படிப் பழிவாங்குகிறாள்? என்பதைச் சித்தரிக்கும் படம் கஸ்தூரிமான்.

கல்லூரி மாணவியாக நடிப்பவர் ஊர்வசி. பத்திரிகை நிருபராக ஜெயராம் நடிக்கிறார். மலையாளத்தில் வெற்றிக்கொடி நாட்டிய படம்தான் தமிழில் கஸ்தூரிமான் என்ற பெயரில் மொழிமாற்றப்படுகிறது.

# வேலு பிரபாகரன் இயக்க சத்யராஜ் புரட்சிக்காரன்

'கடவுள்' படத்தை இயக்கி நடித்தவர் வேலு பிரபாகரன். பகுத்தறிவு கருத்துக்களுக்கு முக்கியத்துவம் தந்து படம் இயக்குவது அவரது தனித்துவம்.

தற்போது சத்யராஜ், ரோஜா ராதிகா, மணிவண்ணன் ஆகியோர் நடிக்க 'புரட்சிக்காரன்' படத்தை இயக்கி வருகிறார்.

இப்படத்திற்காக 'சந்திரோதயம்' நாடகத்தில் அண்ணா எழுதிய காட்சிகளில் ஒன்றை எடுத்து படமாக்கியுள்ளனர்.

'புரட்சிக்காரனாக சத்யராஜ் நடிக்கிறார். சத்யராஜும் பகுத்தறிவு கருத்துள்ளவர். அதனால் இப்படத்தில் மிக ஈடுபாட்டோடு நடிக்கிறாராம்.

# கிளு கிளு சிம்ரான்

'கோடீஸ்வரன்' படத்திலும் அஜித்குமாருடன் 'வாலி' படத்திலும் ரசிகர்களை அவஸ்தைக்கு உள்ளாக்கப் போகிறார் சிம்ரான்.

இரண்டு படங்களிலும் கவர்ச்சிக் குளியல் காட்சியில் கவர்ச்சி சொட்டச் சொட்ட நடித்திருக்கிறாராம்.

# தாமதம்

மோகன் மீண்டும் ஒரு ரவுண்ட் வருவதற்காக நம்பியிருக்கும் படம் 'அன்புள்ள காதலுக்கு'. இப்படத்தை தீபாவளிக்கு வெளியிட இருந்தார்.

தீபாவளி பந்தயத்தில் அடி வாங்கினால் எதிர்காலமே சரிந்துவிடும் என்று பயந்ததால், சற்றுத் தள்ளி வெளியிடலாம் என்று தாமதித்திருக்கிறார்.




கல்பனா



கல்பனா

## நினைத்தாலே

அப்பாஸ்-ரவளி இணைந்து நடிக்கும் படத்திற்கு தீட்டப்பட்டுள்ள பெயர்: நினைத்தாலே.

கே.கவுதம் இயக்கும் இப்படத்திற்கு தேவா இசையமைக்கிறார். ரசிகா, பிரகாஷ்ராஜ், ஜனகராஜ், விவேக் ஆகியோரும் நடிக்கின்றனர்.



வெங்கடேஷ்-மீனா
படம்: சூர்யவம்சம் (தெலுங்கு)

## மினிசினி

* 'மன்னவரு சின்னவரு' படத்தைத் தயாரித்து வரும் கலைப்புலி எஸ். தாணு, அடுத்து ஒரே நேரத்தில் இரண்டு படங்களைத் தயாரிக்கவுள்ளார்.
* ராஜ்கிரண்-ரேவதி ஜோடியாக நடிக்கும் 'தலைமுறை' படத்தில் முக்கிய வேடத்தில் நடிக்கிறார் பானுப்பிரியா.
* 'நிலாவே உனக்காக' படத்தை இயக்கிய மலையாள இயக்குநர் கமல் அடுத்து மோகன்லால்-கௌசல்யா நடிக்கும் மலையாளப் படம் ஒன்றை இயக்கி வருகிறார்.
* 'இந்திரா' படத்திற்குப் பின் படத் தயாரிப்பில் ஈடுபடாமல் இருந்த ஜீ.வி. விரைவில் படமொன்றைத் தயாரிக்கவிருக்கிறார்.
* பல வெற்றிப் படங்களை இயக்கிய ஆர்.வி. உதயகுமாருக்கு தற்போது இறங்குமுகம். விரைவில் இவர் கார்த்திக் நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார்.
* குறுகிய காலத்திற்குள் பல படங்களைத் தயாரித்த பிரமிட் நடராஜன், அடுத்த வருடம் '2000' என்ற படத்தை முதன் முறையாக இயக்கவுள்ளார்.
* விஜய் அடுத்து நடிக்கவிருக்கும் இரண்டு புதிய படங்களுக்கு ஏ.ஆர்.ரகுமான் இசையமைக்க ஒப்புக்கொண்டுள்ளார்.
* தமிழில் வெற்றிபெற்ற 'மறுமலர்ச்சி' தெலுங்கில் தயாராகி வருகிறது. தமிழில் தேவயாணி நடித்த வேடத்தில் தெலுங்கில் சௌந்தர்யா நடிக்கிறார்.
* படவாய்ப்புக்கள் எதுவுமின்றி இருக்கும் அருண்குமார் விரைவில் சூப்பர்குட் ஃபிலிம்ஸ் நிறுவனம் தயாரிக்கும் படமொன்றில் நடிக்கவுள்ளார்.
* 'சொல்லாமலே' படத்திற்குப் பின் லிவிங்ஸ்டன் நடிக்கும் 'நெஞ்சுக்குள்ளே' படத்தில் குஷ்புவும், சிம்ரானும் கதாநாயகிகளாக நடிக்கின்றனர்.

# மாபெரும் ே

'புதுமைப்பித்தன்' பிடிப்பின்போது நல ஒன்று தற்போதுதான் கிறது.

படப்பிடிப்பு நடந் போது இயக்குநர் உதடு தன் முந்தானையை நழு புகழ் ப்ரியாராமன். பா வரை அந்த முந்தா கிடந்தது.

சுதந்திரமாக அப் ப்ரியா ராமன் நடித்த போது, அதனை கண்டெ கொண்டிருந்த உத மாபெரும் யோசனை தாம்.

பள பளவென்று ஒ ஒரு மச்சமிருந்தால் என்றாராம் உதவி இ

உடனே அதனை வந்தார் ப்ரியாராமன் மூலம். உதவி இயக்குநா யும் பாராட்டினாராம்


www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

## காதோடு சொல்லுகிறோம்

முன்றெழுத்து இளம் நாயகன் சம்பாதித்துக் கிறார். எண்ணி வைக்க வீட்டில் இடமில்லை. நனார் ஒரு ஸ்டுடியோவை விலை பேசிக்கொண்டி றாராம்.

முன்றெழுத்து நடிகையை திருமணம் செய்த றெழுத்து நடிகர் திருமணத்தை உடன் வெளி மல் மறைத்திருக்கிறார். ஆனால் நடிகை வயிற்றை க்க முடியாதல்லவா. மூன்றுமாத வாரிசு அவர் றில்.

றைக் பிடித்து பிரபலமான நடிகர் அவர். ங்கள் முடிவதில்லை என்று மறுபடி நடிக்க நக்கிறார். இயக்கமும் அவரே. அவரது இரு கிகளில் ஒருவர் புதுமுகம். இன்னொருவர் பழைய . புதுமுகத்தை எக்கச்சக்கமாக பிடித்துவிட்டதாம் நக்கு. அதனால் பழைய முகத்திற்கு விளம்பரங் கூட ஒரம் கட்டலாம். புதுமுகத்திடம் அப்படி திறமை இருக்கிறது, என்னிடம் இல்லாத ம என்று பழைய முகம் கவலைப்படுகிறாராம்.

அமெரிக்காவில் இருந்து திரும்பி மறுபடி னையில் குடித்தனம் ஆரம்பித்துவிட்டார் அந்த க. அவரது பெயர் 'பிகா' என்று முடிவடையும். னம் தேட வழி ஒன்றை கண்டுபிடித்திருக்கிறார்! திர கலைவிழா என்ற பெயரில் நடிகைகள் ர அழைத்துக் கொண்டு உலக வலம் நடத்தப் றார். கலைச் சேவை உணர்ச்சிகொண்ட விசித்ர நடிகையும், 'வாலி' நடிகையும் உடன் சம்மதம் பித்துவிட்டனர். நம் நாட்டுக்குக்கூட 'கலைப் ம்; வரக்கூடும். மாலைபோட்டு வரவேற்க நக்கிறார்கள்.

உயிரே' படத்தில் இரண்டாவது கதாநாயகியாக நவர் பிரித்தி ஸிந்தா. இவருக்கு ஏராளமான புக்கள் வீடுதேடிப் போயிருக்கின்றன. ஆனால் அவரோ அவுஸ்திரேலிய இளைஞர் ஒருவருடன் ராசி நல்ல ராசி என்று ஒட்டிக் கொண்டு சுற்றுகிறார்.

'காதல் கோட்டை' இயக்குநரிடம் தானாக வலிய 'டிஸ்கஷன்' நடத்தச் சென்றாராம் மான் ரகம் ஒன்றின் பெயர் கொண்ட நடிகை. டிஸ்கஷன் சிறப்பாக இருந்ததால் தனது படத்தில் இரண்டாவது நாயகியாக நடிக்க வைத்துள்ளா ராம்.

## இரட்டை விஜய்

இந்த வருட இறுதிக்குள் இரட்டை வேடத்தில் நடிக்கப் போவதாக கூறியிருக்கிறார் விஜய். "இது வரைவராத அளவுக்கு வித்தியாசமான இரட்டை வேடக் கதையாக இருக்க வேண்டும். கதை தயாராகி வருகிறது" என்றும் தெரிவித்திருக்கிறார் விஜய்.

விஜய்யுடன் படம் ஒன்றில் நடிக்கப் போவதாக இந்தி நடிகர் ஷாருக்கான் கூறியிருந்தார். "அதுபற்றி தன்னோடு யாரும் இதுவரை பேசவில்லை என்று கூறும் விஜய், அப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் தவறவிடமாட்டேன்" என்று கூறியுள்ளார்.

## சரச ஹீரா

அஜித்குமாரும் ஹீராவும் மறுபடி சமாதானமானதும், 'தொடரும்' படத்தில் இணைந்து நடிப்பதும் தெரிந்ததே.

அஜித்துடன் சண்டைபோட்டு விலகியிருந்த நாட்களில் சில பிரபல புள்ளிகளுடன் நெருக்கம் ஏற்படுத்திப் பார்த்தாராம் ஹீரா. அவர்கள் மூலமாக இந்திக்கு செல்ல முயன்றாராம்.

பெற வேண்டியதை பெற்றுவிட்டு புள்ளிகள் வாக்குறுதிகளை மறந்து போனார்களாம். பாவம் ஹீரா, மறுபடி அஜித்குமாரை தேடிவந்து சமரசமாகி, சரசமாகிவிட்டார்.

'தொடரும்' படத்தில் இரு நாயகிகள். தேவயானிக்குத்தான் முக்கியத்துவம். அஜித் இயக்குநரிடம் கூறி ஹீராவுக்கும் சம முக்கியத்துவம் கொடுக்கச் செய்திருக்கிறார்.

## ரோஜா ஏன் சொன்னார்?

நடிகை ரோஜாவிடம் ஒரு நிருபர் கேட்ட சூடான கேள்வி: "உங்களுக்கு எய்ட்ஸ்" என்று எழுதியது பற்றிய கேள்விக்கு, 'அப்போதாவது நடிகர்கள் முடு வந்து கிட்டே வரமாட்டார்கள்' என்று கூறியிருந்தீர்கள். அப்படி என்றால், ஒவ்வொரு நடிகரும் நடிகைகளைத் துரத்திக்கொண்டுதான் இருக்கிறார்களா?"

அதற்கு ரோஜா சொன்ன பதில்: "என்னைப் பற்றி தவறாக பத்திரிகைகளில் செய்தி வந்தபோது கோபத்தில் இருந்தேன். அப்போது நிருபர் ஒருத்தர் கேட்ட கேள்விக்கு கோபத்தில் சொன்ன பதில் அது. நல்ல நண்பர்களாகப் பல நடிகர்கள் இருக்கிறார்கள்."

நெப்போலியன்-சுவலட்சுமி
படம்: பொன்விழா






அஜித-தேவயாணி-ஹீரா
படம்: தொடரும்

## நிர்வாணக் கமல்

### யானையோடு மோதல்

'மருதநாயகம்' படத்தில் பல புதுமைகள். அதில் ஒன்று நிர்வாண சண்டை.

உடம்பில் பொட்டுத் துணிகூட இல்லாமல் சேறு மட்டும் பூசிக்கொண்டு ஆறுபேருடன் மோதுகிறார் கமல். இதற்காக 60 அடி உயரத்தில் இருந்து 'டுப்' போடாமல் குதித்தாராம். குதித்த இடத்திலிருந்து 30 அடிவரை எகிறுகிறார்.

நிர்வாண சண்டையில் பங்கேற்ற நடிகர்களுக்கு ஆங்காங்கே பலத்த அடி. அத்தனை பேருடனும் மோதிய கமல் சிராய்ப்புக்கூட இல்லாமல் நடந்துபோக, படப்பிடிப்பு குழு மொத்தமும் கைதட்டியது. யானையோடு கமல் சண்டைபோடும் காட்சியும் பிரமாண்டமான முறையில் படமாக்கப்பட்டுள்ளது.

'நாடோடி மன்னன்' படத்தை எம்.ஜி.ஆர். பெரும் பொருட்செலவில் எடுத்தபோது 'இந்தப் படம் ஓடினால் எம்.ஜி.ஆர்.மன்னன். ஓடாவிட்டால் நாடோடி' என்று கூறினார்கள். மருதநாயகம் படத்தை எடுக்கும் கமலுக்கும் அது பொருந்தும் என்று கூறியுள்ளது தமிழக சஞ்சிகை ஒன்று. அது உண்மைதான்.

## விஜய்-ஐஸ்வர்யா ராய்

விஜய்க்கு கண்பட்டதுபோல சிறு சறுக்கல். அவரது சொந்தப்படமான 'நிலாவே வா' எதிர்பார்த்தளவு போகவில்லை.

அதனால் உஷாராகிவிட்ட விஜய் அடுத்த படங்களை மிகக் கவனமாகத் தேர்வு செய்கிறாராம். ஐஸ்வர்யா ராய் ஜோடியாக நடிக்க, ஏ.ஆர்.ரகுமான் இசையில் ஒரு படம் செய்யும் திட்டமும் விஜய்க்கு இருக்கிறது. உலக அழகி, 50 கிலோ தாஜ்மஹால் ஐஸ்வர்யா ராய் விஜய்யுடன் நடிக்க ஓ.கே. சொல்லிவிட்டாராம்.

## ...ரசனை

...டத்தின் படப் ...ற்ற சம்பவம் ...ளியாகி இருக்

...கொண்டிருந்த ...சக்க முன்னரே ...டாராம் வள்ளி ...காட்சி முடியும் ...தரையிலேயே

...ல் காட்சியில் ...கொண்டிருந்த ...டாமல் ரசித்துக் ...இயக்குநருக்கு ...று தோன்றிய

...க்கும் இடையில் ...ாக இருக்கும் ...ர்.

...க்கு கொண்டு ...ுப்பு மையின் ...லா ரசனையை

திரையுலக மறுபக்கம் 77

## ஹீரோக்களுக்கு அடிபணிய மாட்டேன்

### ஜெயலலிதாவிடம் வாங்கிக்கட்டியவர்கள்

**1974**ல் 'குமுதம்' சஞ்சிகைக்கு ஜெயலலிதா வழங்கிய பேட்டி பரபரப்பாக பேசப்பட்டது. நடிகைகள் பலர் ஜெயலலிதாவை திட்டித்தீர்த்தனர். அப் பேட்டி இதுதான்:

**கேள்வி: உங்களை அதிகம் தமிழ்ப்படங்களில் காணமுடியவில்லையே ஏன்?**

ஜெ: 1964ம் ஆண்டில் இருந்து பத்து ஆண்டுகளாக மூன்று 'ஷிப்டு'களில் தூக்கமின்றி பல படங்களில் நடித்தேன். அப்படி நடித்து நடித்து எனக்கு அலுத்துப்போய்விட்டது. எனக்கு இப்போது ஒய்வு தேவை.

ஹைதராபாத்தில் திராட்சைத் தோட்டம் ஒன்று வைத்திருக்கிறேன். அங்கு சென்று அதை நேரில் கவனிக்கிறேன்.

**கே: நீங்கள் அமெரிக்கா சென்று தங்கிவிடப்போவதாக கூறப்படுகிறதே?**

ஜெ: இல்லை அது வெறும் வதந்தி.

**கே: பல பெரிய படக் கம்பனிகளில் நடித்துக் கொண்டிருந்த நீங்கள் இப்போது சிறிய படக்கம்பனிகளின் தயாரிப்பில் நடிக்கக் காரணம் என்ன?**

ஜெ: என் படவுலகின் ஆரம்ப காலத்திலிருந்தே பெரிய படக் கம்பனிகளில் மட்டும்தான் நடிப்பேன் என்று கூறியதே இல்லை. அப்போதும் சிறிய படக் கம்பனிகளது தயாரிப்பில் நடித்திருக்கிறேன்.

இந்திப் படவுலகில் கதாநாயகிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து படம் தயாரிக்கின்றனர். அதுபோல இங்கும் கே.ஆர். விஜயாவுக்கும், எனக்கும் முக்கியத்துவம் கொடுத்து படங்கள் தயாரிக்கப்படுகின்றன.

மேலும் பெரிய கதாநாயகர்களுடன் நடிக்கும்போது கதாநாயகிகளுக்கு பல தொல்லைகள் ஏற்படுகின்றன.

சில பெரிய கதாநாயகர்கள் தங்களுடன் நடிக்கும் கதாநாயகிகளைத் திரையில் மட்டும் கதாநாயகியாகக் காணாமல், திரைமறைவிலும் கதாநாயகிகளாகவே காணவிரும்புகின்றனர்.

வேறு சில கதாநாயகி நடிகைகளால் அப்படி இருக்கமுடியும். என்னால் ஒருக்காலும் இருக்க இயலாது.

ஆனால், ஆரம்பத்தில் நீங்களும் இதேபோல இருந்திருக்கலாம் என்று நீங்கள் கேட்கும் கேள்விக்கு பதில்கூற நான் கடமைப் பட்டுள்ளேன்.

ஆரம்ப காலத்தில் என் தாயார் என்கூடவே பாதுகாப்பாக இருந்தார். படவுலகினர் பலருக்கு அவர்மீது மரியாதையும், பயமும் உண்டு. அதனால் என்னிடத்தில் பெரிய நடிகர்களுக்கும் ஒன்றும் செய்ய முடியாமல் போய்விட்டது.

### ஏமாற்றம்

என் தாயார் இறந்தபின்பு, நான் இளமையுடனும், தனியாகவும் இருப்பதைப் பார்த்து, தங்கள் எண்ணப்படி நான் மாறுவேன் என்று அவர்களுக்கு தோன்றியிருக்கலாம்.

நான் கதாநாயகர்களின் விருப்பத்துக்கு அடிபணிவேன் என்று பல காலம் பொறுத்திருந்தவர்களுக்கு நான் ஏமாற்றத்தைத்தான் சுமத்த முடிந்தது.

பிரபல கதாநாயகரின் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. என்னை அவ்விழாவில் கலந்து கொள்ளுமாறு கேட்டார்கள். பலகாரணங்களால் நான் அந்த விழாவில் கலந்து கொள்ளவில்லை.

அவருடைய பிறந்தநாள் விழா முடிந்தபிறகு முன்பு ஒப்பந்தமான இரு படங்களில் இருந்தும் நான் விலக்கப்பட்டேன் அவருடைய 'நண்பி' கதாநாயகியாக ஒப்பந்தம் செய்யப்பட்டார். என்று கூறியிருந்தார் ஜெயலலிதா.

### பெரியவீட்டு பிள்ளை

**சமீபகாலத்தில்** பிரபலமான லட்சுமிகரமான பெயர் கொண்ட நடிகை அவர். கவர்ச்சிகாட்ட 'ஆசை' இல்லாதவர். கதாநாயக நடிகர்களுடன் அளவுக்கு மீறி குழையமாட்டார்.

தனக்கு பிடித்தமான சில நடிகர்களுடன் மட்டும் சற்று நெருக்கம் கொள்ளுவார். நட்சத்திரம் ஒன்றின் பெயர் கொண்ட நடிகருடன் வெளிப்புறப்படப்பிடிப்பு ஒன்றில் நெருக்கம் வைத்திருந்தார்.

இதனை அறிந்த தயாரிப்பாளர் ஒருவர் நடிகையை தன் 'ஆசை'க்கு பணியுமாறு வற்புறுத்த, நடிகை உதைக்காத குறையாக அந்தத் தயாரிப்பாளரை விரட்டினார்.

அந்தத் தயாரிப்பாளர் அரசியல் தொடர்பு உள்ளவர். அதனால் பெரிய இடத்துப் பிள்ளை ஒருவரை நடிகைமீது ஆசை கொள்ள வைத்து தூண்டிவிட்டார்.

நடிகை அதற்கும் மசியவில்லை. 'நான் நினைத்தால் உன்னை திரையுலகைவிட்டே துரத்துவேன்' என்றார் பெரிய வீட்டுப் பிள்ளை. 'பரவாயில்லை, நான் உயர்ந்த படிப்பு படித்திருக்கிறேன். திரையுலகம் மட்டும் கதியென்று கிடப்பவளல்ல' என்று நடிகை கூறிவிட்டார்.

அதனால் வெகுண்ட அந்த பெரிய வீட்டுப்பிள்ளை, நடிகை தன் வீட்டில் பெரும் புள்ளிகளுக்கு விருந்து கொடுப்பதாக புரளி கிளப்பிவிட்டிருக்கிறார். அதுமட்டுமல்ல அந்த நடிகை தன்னிடம் தனியறையில் எப்படியெல்லாம் நடந்து கொண்டார் என்றும் கற்பனை செய்து கதைவிட்டுக் கொண்டிருக்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com

## பொறுப்புள்ள அரசாங்கம்

ஓயாத அலை–2 உடன்
இரணை தீவுக் கடலில்
'வயன் ஏயார்' மூழ்கிப்போக,
குடாநாடு முடமாகிப் போனது!
நீயங்கே! நானிங்கே!
இலங்கைத் தீவின் தலைக்கு
இரத்தோட்டம் நின்றுவிட்டது!
***
பொறுப்புள்ள அரசாங்கத்தின்
பொதுசனத் தொடர்புகள்
வாயுழையச் செய்திகள் பேசின.
கப்பற் சேவை அடுத்த வாரம்!
ஆயிரத்தைந்நூறு பேர் திருமலை வருவர்!
வாதுவக் கப்பலில் வருவர் பயணிகள்
இது சாமான் கப்பல்:
சனங்கள் ஏற்ற காப்புறுதியில்லை!
வாதுவக் கப்பல் வாரியது காலை!
***
அகதிகள் வந்த 'லங்கா முதித்த!'
கவசவாகனத்தைக் கடலில் கவிழ்த்தபின்
காங்கேசனில் தரித்து நின்றது–
அகதிகள் கப்பலில் கவச வாகனம்!
***
இலங்கை வானொலி நேசிய சேவை–
"லங்கா முதித்தவில் 1500 பயணிகள்
வருவர்!
மறுநாள் அது யாழ் திரும்பும்!
விரைய விரும்புவோர்
வேலும் மயிலுவை விரைவாய்க்காண்க!"
'நல்ல சகுனம்!
கந்த சஷ்டிக்கு வீட்டில் நிற்கலாம்!'
***
"நாளை கப்பல் புறப்படும்!" என்றது
வானம்பாடி
"பயணிகள் புகையிரத நிலையம் வரவும்!"
'அப்பாடா– எனது நம்பர் எண்ணூறுக்குள்!'
***
பயணம் சொல்லி பஸ்களில் ஏறி–
காங்கேசனுக்கு புறப்பட்டது பஸ்கள்!
தெல்லிப்பழையில் திரும்பின பஸ்கள்!
லங்கா முதித்த திருமலை வந்தது!
பயணிகள் தொகை நானூறுச் சொச்சம்!
***
தமிழ்ச் சேவைகளில் ஜனாதிபதி–
தமிழ் மக்களின் கேள்விகளுக்கு
பதில் கூறுகிறார்:
"பொறுப்புள்ள அரசாங்கம்: ஆகையால்...
தமிழ் மக்களுக்கு உரிய பாதுகாப்பை
வழங்குவது நம்கடமை!"
உண்மை தான்!
லங்கா முதித்தவில்
கவச வாகனமும் படையினரும்
கூட வரும் அப்பாவித் தமிழருக்கு
கூடுதல் பாதுகாப்பு!

குழந்தை சுவாமி, மட்டக்களப்பு.

## தேன் கிண்ணம்

### அடையாளங்கள் இல்லாத மனிதம்

வாழ்க்கையின் நேசிப்பால்
மௌனமானது பிரபஞ்சம்.
*
கூனல் வானத்தை
குறுக்கே தறித்து
கூடாரம் அமைத்தது கோடை!
*
இரகசியம் பேசிய பனிச்
சேனையிலிருந்து
போராயுதம் செய்தன புற்கள்.
*
கோணலாய் எழும்பும்
காடுகள் சேர்ந்து
வானுக்கு அனுப்பின வாழ்த்துமடல்.
*
மேகப் பொதிகளில்
சாமரத் தூவலாய்
புழுதிகளை அனுப்பி
மழையினைக் கெடுத்தது சந்திரிகை.
*
வெப்பத் தும்மலால்
வெறுமையாகிப்போய்
அக்கினி வெயிலை அனுப்பி வைத்தது
சூரிய மூக்கு.
*
கொதிப்பும், துடிப்பும்
இதயத்துள் எழுந்து
நினைவின் ஓரங்களில்
நிழல்களை வளர்த்தன.
*
செயற்கைக்கு மட்டும்
சிறகு முளைத்து
வானத்தை நோக்கிப் பறக்கவே
கற்றுக் கொள்கிறது.
*
எங்கும் ஒரு யாசக இருட்டில்
தனிமையின் அருகிலிருந்து
வாழ்க்கை அதை மனப்பாடம் செய்தது.
*
மனிதம் மண்ணைக் கிண்டி
ஏதோ ஒரு பொருளை
அதற்குள் புதைக்கும் நினைவிலேயே
காலத்தைக் கழித்தது;
அது சந்திரனாகவும் இருக்கலாம்–
எரிந்த எலும்புகளின்
அடையாளமாகவும் இருக்கலாம்!

உவைஸ்கனி, பாணந்துறை.

### எனது ஏக்கம்

நிலவைப் பிடித்து
உதைப்பந்தாடிட
எண்ணவில்லை!
••
பசுபிக்கை இறைத்து
பள்ளம் அறிந்திட
துடிக்கவில்லை!
••
இமயத்தை நகர்த்தி
வீரம் படைத்திட
நினைக்கவில்லை!
••
அணுவைப் பிளந்து
அதனுள் குடியமர்ந்திட
ஆசைப்படவில்லை!
••
சாம்ராஜ்யம் அமைத்து
சக்கரவர்த்தியாகிட
கனவு காணவில்லை!
••
விண்வெளி சென்று
சாதனை புரிந்திட
முயற்சிக்கவில்லை!
••
சமாதான தேசத்தில்
சுகமாக சுவாசித்திடவே
ஏங்கித் தவிக்கின்றேன்!

எம். முஹாஜிரீன், வாழைச்சேனை.

# சந்ததி அழிப்பு



வியட்நாமில் 1964 இல் ஒரு புகைப்படக் கலைஞரின் கமரா பதிவு செய்த அவலம் இது.

வியட்நாம்மீது அமெரிக்கா கொடூர நச்சுக் குண்டுகளைக் கொட்டியது. நேபாம் குண்டுகள் பொழியப்பட்டன. படைபலம் முன்பும் பணிய மறுத்த வியட்நாம் மக்களை பயமுறுத்த, அழிவுகளைக் காட்டி விரக்தியடையவைக்க அமெரிக்கா கையாண்ட தந்திரம் அது.

நச்சுக் குண்டால் உடல் எரிந்த மழலை ஒன்று இறந்துபோக, அதன் உடலை ஏந்தியபடி வியட்நாம் போராளிகளிடம் முறையிடுகிறார் வியட்நாம் குடிமகன்.

### எனக்கு வேண்டும்!

அம்மா...
இனிய வரம் வேண்டும்
உன் மடியில் கிடந்து
மனச் சுமைகள்
அவிழ்ந்து
என் கண்களில்
நீர் பூக்கின்ற
அந்த அழுகை சுகம்
எப்போதும் வேண்டும்....

சேனையூரான் சனூன் நியாத்.

## பேனா நண்பர்கள்



பெயர்: எம். பாசில்,
வயது: 23
முகவரி: P.O.Box-1118, YANBU-51888, K.S.A.
பொழுது போக்கு: பேனா நட்பு, கிரிக்கெட்.



பெயர்: நிஹாரா,
வயது: 23
முகவரி: BLOCK -B BLOCK NO-8, ROAD NO-7, HOUSE NO-11, ARDIYA. KUWAIT.
பொழுது போக்கு: பத்திரிகை.

## இந்த வாரம் உங்கள் பலன்

(15.11.1998 தொடக்கம் 21.11.1998 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

துலாம் – சூரியன், சுக்கிரன்.
விருச்சிகம் – புதன்.
சிம்மம் – ராகு
கும்பம் – குரு, கேது
மேடம் – சனி. (வக்ரம்)
கன்னி – செவ்வாய்.
சந்திரன்– சிம்மம், கன்னி, துலாம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பொருள் நட்டம், மனக் கவலை. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் மந்தம், காரியத்தடை. | காலை | 6 | மணி |
| செவ்வாய்- பெரியோர் சகாயம், மன மகிழ்ச்சி | பி.ப. | 1 | மணி |
| புதன்- இனசன நன்மை, உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |
| வியாழன்- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | காலை | 7 | மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், செலவு மிகுதி. | பி.ப. | 3 | மணி |
| சனி- தொழில் சிறப்பு, பொருள் வரவு. | காலை | 7 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-2

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, பொருள் விரயம். | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- இனசன நன்மை, கௌரவம். | காலை | 6 | மணி |
| செவ்வாய்- தொழில் விருத்தி, பணவரவு. | பகல் | 12 | மணி |
| புதன்- பிரயாசை மிகுதி, காரியானுகூலம். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி. | காலை | 7 | மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம், காரியசித்தி. | பகல் | 12 | மணி |
| சனி- தொழில் மந்தம், வீண் செலவு | மு.ப. | 10 | மணி |

அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, பணச் செலவு. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | காலை | 6 | மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், பிரயாணமிகுதி. | மு.ப. | 9 | மணி |
| புதன்- மனமகிழ்ச்சி, காரிய அனுகூலம். | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, வெளியிட வாழ்க்கை. | மு.ப. | 9 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, பயனுள்ள செயல். | பி.ப. | 2 | மணி |
| சனி- தொழில் மந்தம், கடன் படல். | காலை | 6 | மணி |

அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்-5

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, பிரிவு நிலை. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- மனக்கலக்கம், மறைமுக எதிர்ப்பு. | மு.ப. | 9 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, காரியானுகூலம். | பகல் | 12 | மணி |
| வியாழன்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | காலை | 7 | மணி |
| வெள்ளி- கடன் தொல்லை, மனக்கிலேசம். | பி.ப. | 1 | மணி |
| சனி- துயர் நீங்கும், காரிய சித்தி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-3

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக் கிலேசம், பிரயாண மிகுதி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் நிலைக் கஷ்டம், பணச் செலவு. | காலை | 7 | மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, அந்நியர் நட்பு. | காலை | 6 | மணி |
| புதன்-வெளியிட பயணம், பணக் கஷ்டம். | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், பெரியோர் நட்பு. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- தொழில் நிலை மந்தம், செலவு மிகுதி. | காலை | 7 | மணி |
| சனி- காரியசித்தி, பண வரவு. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் பகை, வீண் கலக்கம். | காலை | 7 | மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, பணச் செலவு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- பிரயாணமிகுதி, வீண் அலைச்சல். | மு.ப. | 9 | மணி |
| புதன்- துயர் அதிகம், இனசன விரோதம். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- நிலைப்பிரிவு, பிள்ளைகளால் தொல்லை. | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, சுகபோகம். | காலை | 6 | மணி |
| சனி- பயண அனுகூலம், மனமகிழ்ச்சி. | காலை | 7 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பொருள் நட்டம், காரியக்கேடு. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- வீண் பகை, குடும்ப சுகம் குறைவு. | காலை | 6 | மணி |
| செவ்வாய்- இனசன விரோதம், மனக்கிலேசம். | பகல் | 12 | மணி |
| புதன்- தொழில் கேடு, மனக் கலக்கம். | மு.ப. | 9 | மணி |
| வியாழன்- புதிய முயற்சி, செலவு அதிகம். | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, மனப்பயம். | காலை | 7 | மணி |
| சனி- அந்நியர் உதவி, செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பொருள் விருத்தி, காரியசித்தி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | காலை | 6 | மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், மனக் கலக்கம். | பகல் | 12 | மணி |
| புதன்- இனசன நன்மை, கௌரவம். | காலை | 7 | மணி |
| வியாழன்- துன்பம் நீங்கும், முயற்சி பலிதம். | காலை | 6 | மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, பணவரவு. | பி.ப. | 2 | மணி |
| சனி- செய்தொழில் நன்மை, மனமகிழ்ச்சி. | காலை | 6 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-6

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனச் சஞ்சலம், காரியத்தடை. | காலை | 6 | மணி |
| திங்கள்- முயற்சி தடை, பொருள் விரயம். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| புதன்- புதிய முயற்சி, உயர்ந்த நிலை. | காலை | 7 | மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், அந்நியர் உதவி. | காலை | 6 | மணி |
| சனி- பயனுள்ள செயல், தொழில் விருத்தி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியசித்தி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- முயற்சி மேன்மை, பண வரவு. | காலை | 7 | மணி |
| புதன்- காரியசித்தி, பொருள் விரயம். | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், அந்நியர் உதவி. | மு.ப. | 9 | மணி |
| வெள்ளி- துயர் அதிகம், முயற்சி பலிதம். | பி.ப. | 2 | மணி |
| சனி- தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | காலை | 6 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | காலை | 6 | மணி |
| திங்கள்- வீண் முயற்சி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, தொழில் சிறப்பு. | காலை | 7 | மணி |
| புதன்- பயனுள்ள செயல், காரிய சித்தி. | பகல் | 12 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, பண வரவு. | காலை | 6 | மணி |
| வெள்ளி- அதிகார விருத்தி, அற்ப இலாபம். | பி.ப. | 2 | மணி |
| சனி- தொழில் மந்தம், பணச் செலவு. | காலை | 7 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரிய சித்தி. | காலை | 6 | மணி |
| திங்கள்- துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- வீண் குறை கேட்டல், அந்நியர் பகை. | காலை | 6 | மணி |
| புதன்- மனக்கிலேசம், உயர்ந்த எண்ணம். | பகல் | 12 | மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், கௌரவம். | காலை | 7 | மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, பணச் செலவு. | மு.ப. | 9 | மணி |
| சனி- அந்நியர் உதவி, கௌரவம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4


படிப்பகம்

www.padippakam.com

# லேடீஸ் ஸ்பெஷல்

## கூந்தலோ கூந்தல்



சமையல் அறையில் பயன்படுத்தும் பொருட்களை வைத்தே கூந்தலை அழகுபடுத்தலாம்.

* தேயிலை போட்டு கொதிக்க வைத்த நீரை ஆறவைத்துக் கூந்தலைக் கழுவலாம். முடிக்கு அதிக மினுமினுப்புக் கிடைக்கும்.
* ஒரு தேக்கரண்டி வினிகருடன், 3 தேக்கரண்டி தேங்காய் எண்ணெய் கலந்து கூந்தலில் தேய்த்துக் குளித்தால் கூந்தலுக்கு அதிக மிருதுத்தன்மை கிடைக்கும்.
* குளிப்பதற்கு முன்பு சிறிதளவு எலுமிச்சம் பழச்சாற்றை எடுத்து மண்டையோட்டிலும் கூந்தலிலும் தடவுங்கள். பொடுகு நீங்கி முடி நன்றாக வளரும்.

கூந்தலைப் பற்றி இன்னும் சில விஷயங்கள்:

* முறிந்துபோகின்ற முடிகளைத் தேடிப்பிடித்து வெட்ட வேண்டாம். அப்படிச் செய்தால் நிறைய முடிகள் முறிந்து போகும்.
* நனைந்த முடியைச் சீவக்கூடாது. முடி காய்ந்த பின்தான் சீவவேண்டும்.
* நனைந்த முடியைச் சேர்த்து மேல் நோக்கி கொண்டை போடக்கூடாது. அதனால் முடி முறியும். ○

## பதமான பாதங்கள்



பாதங்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க இதோ சில ஆலோசனைகள்:

- நடக்கும் பாதங்களை மென்மையாக வைத்து, நிதானமான வேகத்தில் நடப்பது நல்லது.
- தினமும் பாதங்களை மென்மையாக- சிறிது நேரம் பிடித்து விடுங்கள். தசைகளுக்கு நெகிழ்வு கிடைத்ததும் கால் விரல்களை மேல் நோக்கி இழுத்துப் பிடியுங்கள். இப்படித் தினமும் 10 தடவை செய்யுங்கள்.
- நாற்காலியில் இருந்தபடி கால்களை நீட்டி வையுங்கள். பாதங்களை ஓரடி உயரம் தூக்கி, வட்ட நிலையில் சுற்றுங்கள். முதலில் இடது புறத்தில் இருந்து வலது பக்கமாகவும் பின்பு வலது பக்கமிருந்து இடது புறமாகவும் 10 நிமிடம் செய்யுங்கள். இதன் மூலம் தசைகளின் இறுக்கம் குறையும்.
- தரையில், உருண்ட தடியொன்றைப் போட்டு பாதங்களால் உருட்டி பாதங்களுக்கு மசாஜ் செய்யுங்கள். இதன்மூலம் இரத்த ஓட்டம் அதிகரிக்கும். □

## பரிசு வென்றவர்



முரசின் பட்டுச்சேலை பரிசு பெற்ற அதிஷ்டசாலிகளில் ஒருவர் இவர்:-

**பவானி தங்கராஜ்**
**ஆர். கே. எம். வீதி, அக்கரைப்பற்று**

## சின்னச் சின்ன யோசனைகள்

* குழம்பில் காரம் அதிகமாகி விட்டதா? எலுமிச்சம் பழத்தைக் கொஞ்சம் பிழியுங்கள். காரம் தானாகக் குறைந்துவிடும்.

* மோதிரம் கழற்ற முடியவில்லையா? விரலில் கொஞ்சம் விளக்கெண்ணெயைத் தடவி விட்டுக் கழற்றுங்கள். எளிதாக வந்து விடும்.

* துணிகள் சாயம் போகாமல் இருக்க வேண்டுமா? தண்ணீரில் கொஞ்சம் உப்பைப் போட்டு விட்டுப் பிறகு துவைத்தால் சாயம் போகாது.

* வீட்டில் எறும்புகள் இருந்தால் கற்பூரத்தைப் போட்டு வையுங்கள். எறும்புகள் இருக்கும் இடம் தெரியாது.

* முட்டைகளை வேகவைக்கும்போது தண்ணீரில் கொஞ்சம் உப்பைப் போட்டு விட்டால் முட்டைக் கோதுகளை உடைப்பதற்கு எளிதாக இருக்கும். ○


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** ES

பெயர்:.........................
முகவரி:.........................
.........................
தொழில்:.........................
கையொப்பம்:.........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 21-11-1998**
அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள் 61

**புவனா**



மாடியிருக்கிறார். கடைத் தெருவில் பொருட்கள் வாங்கியிருக்கிறார்.

தன்னை இனம் கண்டுகொண்டு மக்கள் கூட்டம் மொய்ப்பதுற்கு முன்னரே காரில் ஏறிப் பறந்துவிடுவார்.

அந்த அனுபவம் ரசிக்கக்கூடிய அனுபவமாக இருந்த போதும், அதனை அறிந்து தலை நகரப் பொலிசாரும், அரச குடும்பப் பாதுகாப்புப் பிரிவினரும் கூறிய அறிவுரைகள் சலிக்கவைத்துவிடும்.

அந்த அறிவுரைகளைக் கேட்கச் சகிக்காமல்

## டயானாவின் ஆசை

டயானா மனம் உடையும்போதெல்லாம் அவருக்கு ஆறுதல் கூறக்கூடியவர்கள் மூவர் இருந்தனர். அவர்கள் டயானாவின் மெய்காப்பாளர்கள். பாலி மன்னாக்கி, கிரஹாம் ஸ்மித் மற்றும் ஜென் வோர்.:.ப் ஆகியோரே அந்த மூவர்.

டயானா சோர்ந்திருக்கும்போது நகைச்சுவை 'ஜோக்ஸ்' கூறி மகிழ்விப்பார்கள். டயானாவின் பிரச்சனைகளை அவர்கள் அறிந்திருந்தனர்.

டயானாவும் அவர்களுடன் மனம்விட்டுப் பேசுவார்.

டயானாவும் அவரது மெய்காப்பாளர்கள் மூவரும் நெருக்கமாக இருப்பதாக அரச குடும்பத்திற்கு தகவல் கூறப்பட்டது.

'ஒன்றுக்கு மூன்றாக தேவைப்படுகிறதாக்கும்....!' என்று காது கூசும்படியான வார்த்தைகளால் சாள்ஸ்சின் நண்பர்கள் வட்டாரம் கிண்டலடித்தது.

தனது மெய்காப்பாளர்களுடன் டயானா களியாட்டம் நடத்துவதாக கதை கட்டியும் விட்டானர்.

தனது பாதுகாவலர்களிடம் தன்னையே கொடுத்துவிட்டார் டயானா எனவும் கேலி செய்தனர்.

அப்பேச்சுக்கள் டயானாவின் காதுக்கும் எட்டின. அவர் மனம் புண்பட்டது.

மெய்காப்பாளர்களில் ஒருவரை தனது தந்தையின் ஸ்தானத்தில் வைத்து மரியாதை செலுத்தி வந்தார் டயானா. அவரையும் தனது காதலராக சித்தரிக்கிறார்களே என்று நினைத்தபோது பெரும் கவலை கொண்டார்.

மெய்க்காப்பாளர்களே தனக்குத் தேவையில்லை என்று முடிவுக்கு வந்தார் டயானா.

"நான் மிகச் சாதாரணமான வாழ்க்கை வாழவே ஆசைப்படுகிறேன். என்னை விநோதமாகப் பார்க்கும் எவருமில்லாமல், என்னைத் தொடர்ந்து வரும் மெய்காப்பாளர்கள் எவருமில்லாமல், நான் நடந்து செல்வதற்காக பிற பாதசாரிகளை எவரும் ஒதுக்கிவிடாமல் தெருவின் நடைபாதைகளில் உல்லாசமாக நடந்துதிரிய ஆசையாக இருக்கிறது..." என்று டயானா கூறினார்.

ஆனால் டயானாவின் ஆசை நிறைவேறுவது சுலபமாக இருக்கவில்லை.

பிரபலமாகிவிட்டவர்கள் அந்த பிரபலத்திற்காக விலை கொடுத்தாக வேண்டும்.

பொது இடங்களில் தனியாக நடமாடுவது முடியாத காரியம். தாம் நினைத்தபடி சுதந்திரமாக சுற்றித்திரிய முடியாது. எங்கு போனாலும் இனம் கண்டு கொள்ளப்பட்டுவிடுவர். கூட்டம் சேரும். எல்லோர் விழிகளும் அவர்கள்மீது பாயும்.

சாதாரணமக்கள் போல, அவர்கள் மத்தியில் வாழ விரும்பினாலும் அதற்கான சூழ்நிலை இருக்காது.

டயானா மட்டுமல்ல, புகழும் பிரபலமும் அடைந்த சகலருமே அதற்கு விலையாக சில சுதந்திரங்களை இழந்தேயிருக்கின்றனர்.

### கூடாத ஆசை

இலண்டன் பத்திரிகை ஒன்று பின்வருமாறு எழுதியது:

"சாதாரண பிரஜை என்று கணிக்கக்கூடிய ஒருவரல்ல டயானா. உலகப்பிரசித்தி பெற்றவர்





பட்டியலில் ஒருவராகிவிட்டார்.

இவர் சாதாரண பிரஜைபோல வெளியில் நடமாட ஆரம்பித்தால் இவரை நேசிப்பவர்கள் மொய்த்துக் கொள்வார்கள். முரட்டுத்தனமான புகைப்படக் கலைஞர்கள் நெருங்கிச் சென்று தொந்தரவு கொடுப்பார்கள்.

மனநிலை சரியில்லாத பைத்தியக்காரன் எவனாவது ஓடிவந்து அணைத்துக் கொள்வான். அதுமட்டுமல்லாமல் பயங்கரவாத இயக்கத்தினர் எவராவது தமது கைவரிசையைக் காண்பிக்கக்கூடும். இத்தகைய காரணங்களால் டயானா தன் ஆசையைக் கட்டுப்படுத்தியாக வேண்டும்!" என்று அறிவுரை கூறியிருந்தது.

டயானா சமயத்தில் சகலரது கண்களிலும் மண்ணைத்தூவிவிட்டு இலண்டன் வீதிகளில் தனியே நடமாடுவதைக் குறைத்துக் கொண்டார்.

டயானா எங்கு சென்றாலும், எந்தப் பொது நிகழ்ச்சியில் கலந்து கொண்டாலும் தலை நகரப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் டயானாவுக்கே தெரியாமல் குறிப்பிட்ட தொலைவில் இருந்து கண்காணித்தபடி இருப்பார்கள்.

நோயாளர்கள் மற்றும் வயோதிபப் பெண்களின் விடுதிகள் மற்றும் அகதி முகாம்களுக்கு விஜயம் செய்வதையே டயானா பெரிதும் விரும்பினார்.

பொதுத் தொண்டில் நாட்டம் உள்ளவர்களை கென்சின்ரன்மாளிகைக்கு அழைத்து விருந்தளித்து உற்சாகப்படுத்தினார்.

அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்-இளவரசி என்ற பெருமைகள்தான் டயானாவின் புகழுக்குக் காரணம் என்று கருதப்பட்டதை பொய்யாக்க முனைந்தார்.

ஏழைகள், அநாதைகள், நோயாளர்கள் ஆகியோருக்கு உதவும் பெண்மணியாக பத்திரிகைகளும் புகழத் தொடங்கின.

அரண்மனைக் கடமைகளின்போது எல்லோரிடமும் ஒருபோலித்தனம் ஒட்டியிருக்கும். முகஸ்துதிக்காக அதிகாரிகள் பல் இளிப்பார்கள். கை குலுக்குவார்கள். புகைப்படம் எடுத்துக் கொள்வதற்காக கை குலுக்கும் ஆட்களும் இருக்கிறார்கள். இத்தகைய போலித்தனம் எதுவும் இல்லாத அன்பை அநாதை இல்லங்களிலும், நோயாளர் விடுதிகளிலும் டயானா கண்டு கொண்டார்.

"பொதுத் தொண்டில் முக்கிய கவனம் செலுத்தி மக்களின் உண்மையான அன்பை மேலும் மேலும் சம்பாதிக்கப் போகிறேன். அழிவில்லாத சொத்து அதுதான். அதற்காக எந்த விலை கொடுக்கவும் தயாராக இருக்கிறேன்!" என்று தன் சிநேகிதிகளிடம் கூறினாராம்.



தனது ஆற்றல், உரை நிகழ்த்துவது போன்றவற்றை சிறப்பாக்க தகுந்த ஆலோசர்களையும் நாடினார்.

'காந்தி' திரப்படத்தை உருவாக்கி உலகப் புகழ் பெற்றவர் சேர் ரிச்சாட் அட்டன்பேக். அவரும் டயானாவின் ஆளுமையை சீர்படுத்த உதவினார். குரல் வளத்தை சிறப்பாக்க பீட்டர் செட்லென் என்பவரும் உதவினார்.

மக்களின் இளவரசியாக தன்னை மாற்றிக் கொள்ளவும், அரச குடும்பம் வியப்புறும் வண்ணம் தன் ஆளுமையை விருத்தி செய்யவும் டயானா தயாரானது அப்படித்தான்.

**(அடுத்த வாரமும் வரும்)**


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

## நுவரெலியா வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான்

**.:.பெமீலா ஆதம்பாவா,**
அஞ்சலக வீதி, நுவரெலியா.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.




படிப்பகம்

www.padippakam.com



மொய்க்குங் கவலைப் பகைபோக்கி,
முன்னோன் அருளைத் துணையாக்கி,
எய்க்கும் நெஞ்சை வலியுறுத்தி,
உடலை இரும்புக் கிணையாக்கு!

-சுப்பிரமணிய பாரதியார்.



## பாப்பா முரசு சிறுகதை

# காலத்தின் கோலம்

அந்தக் காட்டில் ஒரு சிங்கம் வாழ்ந்து வந்தது. அந்தச் சிங்கத்தின் கர்ஜனையைக் கேட்கவே ஏனைய உயிரினங்கள் பயந்தன. இதனால் அந்தச் சிங்கம் மிகுந்த இறுமாப்புடன் இருந்தது.

ஒருநாள் அந்தக் காட்டிற்கு ஒரு வேடன் கம்பிகளால் செய்யப்பட்ட ஒரு பொறியுடன் வந்தான்.

அந்தப் பொறியைக் காட்டின் மத்தியில் வைத்து, அதன் கதவைத் திறந்து பொறிக்குள் ஆட்டின் இறைச்சியைப் போட்டான். பின் போய் விட்டான்.

ஆட்டிறைச்சியின் வாசனையால் கவரப்பட்ட சிங்கம், பொறிக்குள் ஆட்டிறைச்சியைக் கண்டது. உள்ளே சென்றது. அகப்பட்டுக் கொண்டது.

பொறியில் இருந்து வெளியே வர எவ்வளவோ முயற்சி செய்தது. பயனில்லை. பேசாமல் பொறிக்குள் படுத்துக் கொண்டது.

அந்தப் பக்கமாக ஒரு முயல்குட்டி வந்தது. பொறியில் சிங்கம் அகப்பட்டிருப்பதைக் கண்டது. அதனருகில் சென்றது.

முயல்குட்டியைக் கண்ட சிங்கம் கோபத்தோடு பாய்ந்தது. ஆனால் பொறிக் கூண்டால் தடுக்கப்பட்டு, உள்ளே விழுந்தது.



முயல் குட்டிக்கு சிறிது அச்சம்தான். இருந்தாலும் அச்சத்தோடு சென்று, பொறிக் கூண்டின் கதவை அசைத்துப் பார்த்தது.

கதவைத் திறந்து கொண்டு சிங்கம் வெளியே வராது என்று முயல் குட்டிக்குத் தெளிவாகத் தெரிந்ததும், அதற்குத் துணிச்சல் வந்து விட்டது.

அது சிங்கத்தின் முகத்திற்கு நேரே வந்து,

"ஏ! சிங்கமே! நீ வெளியில் இருக்கும் போது என்னவெல்லாம் செய்தாய்? மற்ற உயிரினங்களை எல்லாம் எப்படித் துன்புறுத்தினாய்? கடைசியில் கூண்டில் அடைபட்டு எங்கோ போகப்போகிறாய்.

எல்லோரும் எப்போதும் ஒரே மாதிரி இருப்பதில்லை. காலம் மாறும், அவர்களின் கோலமும் மாறும். இப்போதாவது இதைத் தெரிந்துகொள்!" என்று கூறிவிட்டுச் சென்றது முயல்குட்டி.

சிலர் உயர்ந்த வாழ்வு வாழும்போது தன்னிலை மறந்து பிறரை மதியாது பல காரியங்களைச் செய்வார்கள். பின் அவர்களின் வாழ்க்கை நிலை தடுமாறி வீழ்ச்சி அடையும்போது, யாரை மதியாமல், யாருக்கு தீங்கு செய்தார்களோ அவர்களாலேயே கேலி செய்யப்படுவார்கள்.

# அதிசயம் – ஆனால் உண்மை!



← பிரைகேட் எனப்படும் ஒருவகைப் பறவை, இரையைக் கவ்விக்கொண்டு பறக்கும் வேறு இனப் பறவைகளைத் தாக்கும். இப்படித்தாக்கும்போது அந்தப் பறவைகளின் வாயில் இருக்கும் இரை கீழே விழும். அந்த இரை நிலத்தில் விழுவதற்கு முன் அதைத் தனது இரையாக்கிக் கொள்ளும்.



சுமேரிய மன்னர்கள் மரணமடையும் போது, அவர்களது சவக்குழிகளுக்குள் உயிருடன் இருக்கும் அவர்களது மனைவிகள், அடிமைகள், செல்லப்பிராணிகளையும் சேர்த்துப் புதைத்தனர்.



↑ பண்டைய ஜப்பானில் நடக்கும் போட்டிகளில் தோற்றுப் போகிறவர்கள் வாளால் தமது வயிற்றைக் குத்திக்கொள்வார்கள்.



→ இந்தியாவில் உள்ள ஒரிஸ்ஸா மாநிலத்தில் வாழும் பாண்டோ பழங்குடி இனத்தவர்களில் ஆண்கள் மட்டுமே நீண்ட தலைமுடி வளர்ப்பார்கள். பெண்கள் முடி வளர்ப்பதில்லை.

# வாரம் ஒரு நாடு

## இஸ்ரேல்

தலைநகர்- ஜெருசலேம்
பரப்பு- 20,772 கிலோமீட்டர்
மக்கள் தொகை- 54 இலட்சம்
மொழி- ஹிப்ரு (ஆட்சிமொழி), அரபி.
எழுத்தறிவு- 92% (யூதர்), 70% (அராபியர்)
சமயம்- யூதம், இஸ்லாம்
நாணயம்- ஷெகெல்
தனிநபர் வருமானம்- 12,500 டொலர்.

**அமைவிடம்:**

மேற்கே மத்தியதரைக் கடலையும் கிழக்கே ஜோர்டானையும் வடக்கே சிரியாவையும் தெற்கே செங்கடல் மற்றும் எகிப்து ஆகிய நாடுகளையும் எல்லைகளாகக் கொண்டது.

**வரலாறு:**


மூன்று பக்கமும் அரபு நாடுகளால் சூழப்பட்ட மத்தியகிழக்கு நாடு. பாலஸ்தீன துருக்கியின் ஒட்டோமான் சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாக இருந்தது. 4 நூற்றாண்டுகள் ஒட்டோமான் சாம்ராஜ்ய ஆட்சிக்குப்பின் 1917ல் பிரிட்டனின் ஆளுகைக்குட்பட்டது. யூதர்களுக்கு ஒரு தனிநாடு அளிப்பதாக பிரிட்டன் உறுதியளித்தது. ஜெர்மனியின் நாஸிப் படுகொலையைத் தொடர்ந்து பாலஸ்தீனத்தை இரண்டாகப் பிரித்து யூதர்களும் அராபியர்களும் பங்கிட்டுக் கொண்டனர். 1948 மே 14ல் இஸ்ரேல் சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்திக் கொண்டது. ஆனால் அராபியர் இதை விரும்பவில்லை. எனவே அண்டை நாடுகளுடன் போரைத் தவிர்க்க இயலாததாகி விட்டது. 1993 செப்டெம்பர் 13ல் பாலஸ்தீன தன்னாட்சி உடன்பாடு ஏற்பட்டது.



**பொருளாதாரம்:**

விவசாயத்திலும் தொழிற்துறையிலும் தனக்கு ஒதுக்கப்பட்ட சிறிய நிலப்பகுதியிலேயே தனது திறமையால் பெரும் வளர்ச்சியடைந்துள்ளது. மதுத் தயாரிப்பு, இரத்தினங்கள் வெட்டுதல் முக்கிய தொழில்கள், முந்திரி, எலுமிச்சை முக்கிய ஏற்றுமதிகள். உப்பு, பொட்டாசியம், கந்தகம் கிடைக்கின்றன.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 21.11.1998.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 271**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல.1772**
**கொழும்பு.**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 268

**பரிசுக்குரியவர்:**
**கபிலாஷிதா சிவநாதன்,**
**வித்தியாலயம் ஒழுங்கை, திருக்கோணமலை.**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| செல்வி செல்வம் அனுஹாசினி,<br>தமிழ் மகா வித்தியாலயம், தலவாக்கலை. | ஷாலீன் றம்ஸானி,<br>கல்கமுவ மொடல் முஸ்லிம் மகாவித்தியாலயம், கல்கமுவ. |
| கன்சுல் மெஹறுன் காதர்,<br>முஸ்லிம் மகாவித்தியாலயம், வவுனியா. | செல்வி றொமினா சுரேஷ்,<br>கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். |
| பி.பிரதீபன்,<br>7ம் ஒழுங்கை , கல்லடி, மட்டக்களப்பு. | றஸ்ஸாக் பர்ஸான்,<br>கரீம் கார்டன், ஹாலி எல. |
| ஃபாதிமா நிஷ்மா நஜீம்,<br>ஒக்ஸ்போட் சர்வதேச பாடசாலை, பலாங்கொடை. | கனகசுந்தரம் இழங்கோராஜ்,<br>சுவாமி விபுலானந்த வித்தியாலயம், நற்பிட்டி முனை-03, கல்முனை. |
| அ.சாம்பவி,<br>ஸ்ரீசண்முக இந்துமகளிர் கல்லூரி, திருகோணமலை. | ஜே.நிரஞ்ஜனி,<br>புனித கபிரியேல் மகளிர் மகாவித்தியாலயம், ஹட்டன். |

# மரவீடுகள்

அவுஸ்திரேலியாவுக்கு அருகில் உள்ள நியூகினியாவில் உள்ள மக்கள் மரத்திற்கு மேல் வீடு கட்டி வசிக்கிறார்கள். இங்குள்ள காடுகளில் எப்போதும் மழை பெய்து கொண்டிருக்கும். இவர்கள் மர வீடுகளில் வாழ்வதற்கான காரணங்கள் இவை:

* இங்கு அடிக்கடி மழை பெய்வதால் நிலம் சகதியாக இருக்கும். மரவீடுகளில் வசிப்பதால் இந்தத் தொல்லை இல்லை.
* அடர்ந்த காடுகளில் இவர்கள் இருப்பதால் சூரிய வெளிச்சம் தரையில் வந்தடைய முடியாமல் நிலப்பகுதி இருட்டாக இருக்கும். இதனால் நிலத்தில் விஷப்பூச்சிகளும், கொடிய விலங்குகளும் தரையில் வாழும். மரத்திற்கு மேல் வீடுகட்டி வசிப்பதால் இங்குள்ள மக்களுக்கு இவற்றால் தொல்லை ஏற்படுவதில்லை.
* நிலப்பகுதியை விட மரங்களுக்கு மேல் கட்டப்பட்டிருக்கும் மரவீடுகளில் நல்ல காற்றோட்டமும், போதுமான சூரிய ஒளியும் கிடைப்பதும் ஒரு காரணம்.



# டாவின்ஸியின் சாதனைகள்



பிரபல ஓவியரான லியார்னடோ டாவின்ஸி ஓவியங்கள் மட்டுமன்றி, பல்வேறு அறிவியல் சாதனைகளையும் நிகழ்த்தியுள்ளார். அவை வருமாறு:

✤ விமானங்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் போன்றவற்றின் உள்ளமைப்புக்கள் எப்படி இருக்க வேண்டுமென்று படம் வரைந்து விளக்கினார்.
✤ பரசூட் பயன்படுத்தும் முறையைத் தெரிவித்தார். இத்தாலி நாட்டின் மிலான் தேவாலயத்தின் படிக்கட்டுக்களில் ஏறிச் செல்வதற்கு இலகுவான ஒரு எலிவேட்டரை அமைத்தவர் இவரே.
✤ பறவைகளைக் கண்டு விமானமும், மீன்களைக் கண்டு நீர்மூழ்கிக் கப்பல்களைத் தயாரிக்கவும் அவற்றை வடிவமைத்தவர்.
✤ பலவித போர்த்தளவாடங்களை வடிவமைத்துக் கொடுத்தார்.
✤ மேலிருந்து கீழே விழும் பொருட்களின் வேகம் அதிகரிக்கும் என்ற உண்மையை முதலில் அறிவித்தவர் இவர்தான்.
✤ மனிதனுடைய எலும்புகள், தசைகள் முதலியவற்றின் உடற்கூறியல் படங்களை வரைந்து விளக்கினார்.
✤ இரத்தம் உடலுக்குள் சுழன்றோடிக் கொண்டிருக்கிறது என்பதைக் கூறினார்.
✤ சந்திரன், சூரிய ஒளியைப் பிரதிபலிக்கிறது. பிரபஞ்சத்தின் மையம் பூமி அல்ல என்பன போன்ற கருத்துக்களை அக்காலத்திலேயே தெரிவித்தார்.

# தபால் தலைகள் பற்றிய தகவல்கள்




▲ இங்கிலாந்தில் 1840ம் ஆண்டு மே மாதம் 6ம் திகதி 'பென்னி பிளக்' என்ற விக்டோரியா மகாராணியின் உருவம் பொறிக்கப்பட்ட தபால் தலை வெளியிடப்பட்டது. இத்தபால் தலைதான் உலகின் முதல் தபால்தலை.

▲ ஆசியாக் கண்டத்தில் முதன் முதலாக தபால் தலை வெளியிட்ட நாடு இந்தியா. அதிலும் விக்டோரியா மகாராணியின் உருவம்தான் பொறிக்கப்பட்டிருந்தது.

▲ தீபாவளிப் பண்டிகையை ஒட்டி விசேட தபால் தலை வெளியிட்ட நாடு சிங்கப்பூர்.

▲ தபால் தலையை வட்டவடிவமாக வெளியிட்ட நாடு மலேஷியா.

▲ வாசனையான தபால் தலையை வெளியிட்ட நாடு தென்னாபிரிக்கா.

▲ விற்பனையில் அதிக வசூலைக்குவித்த தபால் தலை, மனிதன் சந்திரனில் இறங்கியதற்கு அடையாளமாக அமெரிக்கா வெளியிட்ட தபால் தலை.

▲ 1913ல் சீனா வெளியிட்ட தபால் தலையின் நீளம் 9 3/4 அங்குலம். அகலம் 2 3/4 அங்குலம். இதுதான் உலகின் மிகப் பெரிய தபால் தலை.

▲ முதல் முதலில் தபால் தலையில் இடம்பெற்ற திரைப்பட நட்சத்திரம் மொனோக்கோ இளவரசி கிரேஸ்.

▲ தபால் தலையில் தனது பெயரை வெளியிடாத நாடு இங்கிலாந்து.

தபால் தலை சேகரிப்பது பலரது பொழுது போக்குகளில் ஒன்று. முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியான ஃபிராங்க்ளின் ரூஸ்வெல்ட்டும் தபால்தலை சேகரிப்பவர்களில் ஒருவர்.



படிப்பகம்

www.padippakam.com

**மர்மம், காதல் குடும்ப நயம் கலந்த விறு விறு தொடர்**

# டிசம்பர் பௌர்ணமி

**03**

**இதுவரை**

பிரபல தொழிலதிபர் ருத்ரமூர்த்தியின் ஒரே மகன் நித்தியன். பம்பாயில் சிறையிலிருந்து விடுதலையாகி வருபவனை வெளிநாட்டில் இருந்து வருபவனாக கூறி விசாலிக்கு மணம்முடிக்க திட்டமிடுகிறார். நித்தியனோ சாந்தாவைக் காதலிக்கிறான்.

**இனி......**

**க்ரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்**

சாந்தாவின் உடம்புக்குள் ஒரு பெரிய சந்தோஷத்துக்குரிய இரசாயன மாற்றங்கள் துரித கதியில் நடந்தன.

"ஏ...என்னங்க... நீ... நீங்களா...?"

மறுமுனையில் நித்தியன் சிரித்தான்.

"நானே.... நானே!"

"பம்பாயிலிருந்து எப்போ... எப்போ..?" சாந்தா தயக்கமாய் குரலை இழுக்க நித்தியன் குறுக்கிட்டு கேட்டான்.

"ரிலீஸானேன்னு கேட்கறியா? நேத்தே என்னை ரிலீஸ் பண்ணிட்டாங்க. இன்னிக்கு விடிகாலைல அஞ்சு மணி மெட்ராஸ் ஃபிளைட்டைப் பிடிச்சேன். வந்து சேர்ந்துட்டேன்"

"எத்தனை மணிக்கு மெட்ரால் வந்து சேர்ந்தீங்க?"

"ஏழரை மணிக்கு ஏர்போர்ட். எட்டு மணிக்கு வீடு."

"இப்ப மணி என்ன?"

"பத்தாகப் போகுது...."

"அதாவது நீங்க மெட்ராஸ் வந்து சேர்ந்த ரெண்டரை மணி நேரத்துக்குப் பிறகுதான் என்னோட ஞாபகமே உங்களுக்கு வந்திருக்கு....!"

"ஸாரி சாந்தா! அங்கே வீட்ல ஏகப்பட்ட கூட்டம். என்னோட அப்பா கொஞ்சம் ஆர்ப்பாட்டம் பண்ணிட்டார். நான் ஜெயிலுக்குப் போய்ட்டு வந்ததை மறைச்சு வெளிநாட்டுக்கு போய்ட்டு வந்ததாய் எல்லார்கிட்டேயும் சொல்லி வைக்க அங்கே எனக்கு வேண்டாத வரவேற்பு. மாலை மரியாதை..."

"என்னைப் பொறுத்தவரைக்கும் உங்களுக்கு கொடுக்கப்பட்ட வரவேற்பு சரியான ஒண்ணுதான்... மத்தவங்களை மாதிரி நீங்க... தப்புப் பண்ணிட்டு ஜெயிலுக்குப் போகலையே...."

"சரி... நான் உன்னை இப்போ உடனடியாக பார்த்தாகணும். எங்கே புறப்பட்டு வர்றே?"

"கன்னிமாரா ரெஸ்டாரண்டுக்கு வந்தடறீங்களா? காலை நேரத்துல அவ்வளவா கூட்டம் இருக்காது."

"இருபது நிமிஷத்துக்குள்ளே அங்கே நீ இருக்கணும்."

"இருப்பேன்!"

"ஆட்டோவுல வந்துடு. பஸ்ஸுக்காக வெயிட் பண்ணிட்டிருக்காதே..."

"சரிங்க... வாடகைக்கு ஹெலிகாப்டர் கிடைக்குதான்னு பார்க்கறேன்... கிடைச்சா அதுலயே வந்துடறேன்." சாந்தா சிரித்துக்கொண்டே ரிஸீவரை வைத்துவிட்டு விடுதியிலிருந்து வெளிப்பட்டாள். விடுதியின் காம்பௌண்ட் ஓரமாய் பூக்கடை வைத்திருந்த ஜெயம்மாவுக்கு முன்பாய் போய் நின்றாள்.

"மஞ்சள் ரோஸ் இருக்கா ஜெயம்மா...?"

"இருக்கே..."

"விரியற பக்குவத்துல ரெண்டு ரோஸ் மொட்டும் ரெண்டு முழம் ஜாதி மல்லிகையும் குடு..."

"என்னம்மா இது...! ஒரு வருஷமா பூவே வெச்சுக்காமே இருந்த நீ இன்னிக்கு வந்து பூ கேக்குறே... ஏதாவது கல்யாணத்துக்குப் போறியா?"

"ம்... கல்யாணந்தான்.."

"இத்தனை சந்தோஷமாயிருந்து நான் என்னிக்குமே பார்த்ததில்லை..."

"இனிமே எப்பவும் சந்தோஷம்தான். நீ மொதல்ல பூ... கொடு. பேசிகிட்டே முழத்தைக் குறைச்சுடாதே!"

"ஒரு அரை முழம் சேர்த்தியே தர்றேன். எடுத்துக்க. காசுகூட எனக்கு வேண்டாம்."

"எனக்கு ஓசி பிடிக்காது. இந்தா பத்து ரூபா!" ரூபாய் நோட்டை ஜெயம்மாவின் கையில் திணித்தாள் சாந்தா. மஞ்சளில் முக்கி எடுத்த மாதிரி இரண்டு ரோஜாக்களும் மணக்க மணக்க ஜாதி மல்லிகையும் சாந்தாவின் அடர்த்தியான சுருண்ட தலைக் கேசத்தில் இடம் பிடித்தது.

ரோட்டுக்கு வந்து ஆட்டோ தேடினாள். கிடைத்தது.

"கன்னிமாரா ரெஸ்டாரண்ட் போகணும்."

"மீட்டர் போட மாட்டேன். இருபத்தஞ்சு ரூபாய் ஆகும்!"

"மேல அஞ்சு ரூபாயை சேர்த்து வாங்கிக்க டிரைவர், ஆனா, சரியா பதினைஞ்சு நிமிஷத்துல நான் ஸ்பாட்ல இருக்கணும்..."

"ஏறி உட்காரம்மா... என்னோட ஆட்டோவுக்கு ரெண்டு ரெக்கையே இருக்கு..."

சாந்தா ஆட்டோவுக்குள் நுழைய, அது வேகம் பிடித்து காற்றைக் காயப்படுத்தியது.

▢○▢

சாந்தாவுக்கு பிடித்தமான சந்தன நிற சர்ட் சிவப்பு பேண்டில் தன்னைத் திணித்துக் கொண்டு அறையினின்றும் வெளிப்பட்ட நித்தியனை மறித்த மாதிரி வந்து நின்றார் ருத்ரமூர்த்தி.

"எங்கியோ கிளம்பிட்டே போலிருக்கே?"

"ஆமாப்பா... ஒரு ஃபிரெண்டைப் பார்க்கணும்."

"மெட்ராஸ் வந்து சேர்ந்த ரெண்டு மணி நேரத்துக்குள்ளே நீ பார்க்க கிளம்பிட்ட அந்த ஃபிரண்ட் யார்னு நான் தெரிஞ்சுக்கலாமா?"

"அந்த ஃபிரண்ட் யார்னு சொன்னாத்தான் நீங்க என்னை வெளியே போக அலவ் பண்ணுவீங்களா?."

"தப்பா நினைச்சுக்காதே நித்தி... நீ ஒரு வருஷம் பம்பாய் ஜெயில்ல இருந்துட்டு வந்த கசப்பான சம்பவம் யாருக்கும் தெரிஞ்சுடக் கூடாதேங்கிற பெரிய பயமும், உனக்கும் விசாலிக்கும் நல்லபடியா கல்யாணம் நடந்து முடியணுமேங்கிற கவலையும்தான் எனக்கு... நீ இப்போ வெளியே யாரைப் பார்க்கப் போறதாயிருந்தாலும் சரியா ஒரு மணி நேரத்துக்குள்ள திரும்பி வந்துடணும்!"

"எதுக்காக?"

"விசாலியோட அப்பாவும் அம்மாவும் அவங்க ஃபேமிலி ஜோஸ்யரைக் கூட்டிகிட்டு கல்யாணத்துக்கு நாள் குறிக்கிறது சம்பந்தமா பேச வர்றாங்க... விசாலியும் வர்றா! அவங்க எல்லாரும் நம்ம வீட்டுக்கு வரும்போது நீ வீட்ல இல்லாமே இருந்தா நல்லாயிருக்காது.."

நித்தியன் மௌனமாய் நிற்க, ருத்ரமூர்த்தி அவனுடைய தோளைத் தட்டினார் "என்ன பதிலையே காணோம்?"

"அவங்க எத்தனை மணிக்கு வர்றாங்க?"

"சரியா பதினொரு மணிக்கு.."

"நான் கண்டிப்பா வீட்ல இருக்கணுமாப்பா?"

"இருந்தா... விசாலிக்கு சந்தோஷமா இருக்கும்."

"சரி... வந்துடறேன்!"

"பதினொரு மணிக்கு?"

"ஞாபகம் இருக்கு..." தலையாட்டிய நித்தியன் மாடிப்படிகளில் வேகவேகமாய் இறங்கி போர்டிகோவுக்கு வந்தான். சாக்லெட் நிற மாருதி ஜென் விசுவாசமாய் காத்திருக்க உள்ளே போய் இக்னிஷியனை உசுப்பினான்.

காரை காற்றில் பறக்க விட்டான்.

பத்து நிமிஷ பயணத்தில் கன்னிமாரா ரெஸ்டாரெண்ட் வந்தது. மஞ்சளாய் பூத்துக் கொட்டிய மரத்துக்குக் கீழே ஒரு பூங்கொத்து மாதிரி நின்றிருந்தாள் சாந்தா.

கார் அவளுக்குப் பக்கத்தில் போய்நின்றது. காரின் கண்ணாடிக் கதவு மெதுவாய் கீழே இறங்க நித்தியனின் முகம் ஸ்லோமோஷனில் உற்பத்தியாயிற்று.

பரஸ்பரம் உதடுகள் புன்னகைத்துக் கொள்ள இரண்டு ஜோடி விழிகளிலும் லேசாய் கண்ணீர் கோட்டில்.

காரின் கதவைத் திறந்துவிட்டான் நித்தியன். சாந்தா காரைச் சுற்றிக் கொண்டு வந்து உள்ளே நுழைந்தாள். மல்லிகையின் மணம் காருக்குள் நிரம்பிக் கொண்டது. சாந்தா இமைக்காமல் நித்தியனையே பார்க்க அவன் புன்னகைத்தான்.

"என்ன அப்படிப் பார்க்கிறே.... சாந்தா...?"

"ரொம்பவும் இளைச்சுட்டீங்க...?"

"நான் போனது ஜெயில். ரெஸ்ட் எடுக்கிறதுக்காக சிம்லாவோ காஷ்மீரோ போகலை. நீ மட்டும் என்னவாம்? முன்னைக்கு இருபது பர்செண்ட் லெஸ். முகத்துல இருந்த ஆப்பிள் மினுமினுப்பு மிஸ்ஸிங்க..."

சாந்தா கண்களில் நீர் கோர்த்துக் கொள்ள உடைந்து போன குரலில் கேட்டாள்.

"அங்கே ரொம்பவும் கஷ்டமாயிருந்ததா?"

"ஜெயில்னாலே கஷ்டம் தானே...? ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வருஷம் மாதிரி நகர்ந்த அவஸ்தை இருக்கே அதை இப்ப நினைச்சாலும் மனசு ரணமாயிடும்..."

"அதை மறந்துடுங்க... வேற விஷயம் பேசுவோம். இனிமே அந்த கறுப்பு நாட்களோடு ஞாபகமே உங்களுக்கு வரக்கூடாது. வாங்க... ரெஸ்டாரெண்டுக்குள்ளே போயிருவோம்..."

இருவரும் இறங்கி நிசப்தமாய் இருந்த அந்த கன்னிமாரா ரெஸ்டாரண்டுக்குள் நுழைந்தார்கள். ஃபேமிலி ரூம் என்று ஒரு சிறிய போர்டு சொன்ன கேபினுக்குள் நுழைந்து பக்கம் பக்கமாய் உட்கார்ந்தார்கள்.

பேரர் உள்ளே எட்டிப் பார்க்க நித்தியன், "ரெண்டு காபி!" என்றான். பேரர் தலை மறைந்தது.

சில வினாடி மௌனத்திற்குப் பிறகு நித்தியன் மெல்ல பேச்சை ஆரம்பித்தான்.

"சாந்தா! இன்னும் ஒரு பத்து பதினைஞ்சு நாளைக்குள்ளே நீயும் நானும் ஒரு கோயில்ல கல்யாணத்தை முடித்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் வரலாம்."

சாந்தா திடுக்கிட்ட மாதிரி பார்த்தாள்.

"ஏன்?"

"என்னோட அப்பா எனக்குக் கல்யாணத்தைப்பண்ணி வைக்கிறதுக்கான முயற்சியில் தீவிரமா இறங்கிட்டார். பொண்ணு பேரு விசாலி. கோடீஸ்வரக் குடும்பம்... நான் ஒரு ஜெயில் ரிட்டர்ன் என்கிற விஷயம் அந்தக் குடும்பத்துக்கு தெரியாது. நான் ஃபாரின் போய்ட்டு வந்திருக்கிறதா மத்தவங்க மாதிரி அவங்களும் நினைச்சுட்டிருக்காங்க... விஷயம் அவர்களுக்கு தெரியறதுக்கு முந்தியே கல்யாணத்தை முடிச்சுடணும்னு அப்பா கால்ல வெந்நீரைக் கொட்டிக்கிட்ட மாதிரி பறந்துட்டிருக்கார்..."

சாந்தா மௌனமாய் தலை குனிந்து கிரானைட் மேஜையின் ஓரத்தை தன் இடது கை விரல்களால் தடவ ஆரம்பிக்க நித்தியன் அவளுடைய மோவாயை தன் ஆள்காட்டி விரலால் நிமிர்த்தினான். கண்களில் நீர் தத்தளித்தது.

"ஏய்... என்னாச்சு...?"

"எ... எனக்கு... எனக்கு...?"

"சொல்லு.... உனக்கு...?"

"ப....ப...பயமாயிருக்குங்க..."

"எதுக்கு பயம்...?"

"நம்ம கல்யாணம் நடக்குமா?"

"நடக்கும்..."

"உங்க அப்பா...?"

"நம்ம கல்யாணத்துக்கு சரின்னு சம்மதம் கொடுத்து பச்சைக்கொடி காட்டறமாதிரி நான் ஏற்பாடு பண்றேன்."

"எப்படி?"

பேரர் காப்பியோடு வந்தான். டம்ளர்களை வைத்துவிட்டு போகும்வரை மௌனம் காத்த நித்தியன் பின் வாயைத் திறந்தான்.

"நான் ஒரு ஜெயில் ரிடர்ன் என்கிற விஷயம் விசாலிக்கோ விசாலியோட அப்பா அம்மாவுக்கோ தெரியாது. விஷயம் தெரிஞ்சா அந்த நிமிஷமே அவங்க பின் வாங்கிப் போயிடுவாங்க. ஸோ நான் ஜெயிலுக்குப் போன விஷயத்தை அவங்களுக்கு வெட்ட வெளிச்சமாக்கப் போறேன்."

"எப்போ?"

"இன்னிக்கே... இன்னிக்குக் காலையில பதினொரு மணிக்கு விசாலியும் அவளோட ஃபாதர் மதரும் கல்யாண நாளை ஃபிக்ஸ் பண்றதுக்காக என்னோட வீட்டுக்கு வரப்போறாங்க... அதுக்கு முந்தியே நான் அவங்க வீட்டுக்குப் போய் விஷயத்தைச் சொல்லிடப் போறேன்."

சாந்தா கவலையாய் கேட்டாள், "நீங்க போய் விஷயத்தை சொன்னதா உங்கப்பாவுக்குத் தெரிய வரும்போது அவருக்கு உங்க மேல கோபம் வருமே...?"

"விஷயத்தைச் சொன்னது நான் தான்னு அப்பாவுக்குத் தெரிய வேண்டாம்னு விசாலியோட அப்பா அம்மா கிட்டே சொல்லிடுவேன்."

"என்னிக்காவது உண்மை தெரிய வரும்போது...?"

"அதுக்குள்ளே நம்ம கல்யாணம் முடிஞ்சிருக்கும்." நித்தியன் சிரித்து சொல்லிக் கொண்டிருக்கும் போதே பேரர் தள்ளுக்கதவை திறந்து கொண்டு மறுபடியும் எட்டிப் பார்த்தான்.

"ஸார்... உங்க பேர் நித்தியனா?"

"ஆமா...."

"உங்களுக்கு ஃபோன்... பில்லிங் கௌண்டர்ல ரிஸீவரை எடுத்து வைச்சிருக்காங்க... போய் பேசுங்க..."

நித்தியன் குழப்பமாய் எழுந்தான்.

(பௌர்ணமி தொடரும்)



**அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு பணியாத இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாமின் உண்மைக் கதை**

# சதாம் உசேன்

**15**

**ராஜையா**

கணக்கு எங்கோ பிசகிவிட்டது...

தலைமறைவாக இருந்த சதாம் எதிர்பாராத விதமாக பொலிஸில் சிக்கினார். பொலிஸ் அவரைப் பிடித்து தனிமைச் சிறையில் அடைத்ததோடு அவர் செய்த- செய்யாத சகல அரசியல் கொலைகளையும் அவர் தலையில் போட்டுவிட்டது. இது சதாமுக்கு விழுந்த நான்காவது அடி...!

சதாம் புரண்டு படுத்தார்...

அவர்மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்களுக்கு கண்டிப்பாக மரண தண்டனைதான் கிடைக்கும். அல்லது வாழ்நாள் முழுவதும் ஆயுள் கைதியாக இதே இருட்டறையில் கிடந்து சாக வேண்டும்.

இது பற்றி சதாம் துளியும் கவலைப்படவில்லை.

சிரமப்பட்டு ஆட்சியைப் பிடித்த கட்சி இப்படி அற்ப ஆயுளில் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டு விட்டதே? எங்கே தவறு நடந்தது? அதை சரிப்படுத்த என்ன செய்ய வேண்டும்? என்ற கவலைதான் பெரிய கேள்விக்குறியாய் அவர் மூளையைக் குடைந்து கொண்டிருந்தது.

எழுந்து உட்கார்ந்தார். பிறகு எழுந்து நின்றார். குறுக்கும் நெடுக்கும் நடந்தார்.

தீவிரமாய் அரசியலைச் சிந்திக்கச் சிந்திக்க விடலைப் பருவத்திலிருந்து அவரோடு தொடர்ந்து வந்துகொண்டிருந்த துடுக்குத்தனம் கொஞ்சம் கொஞ்சமாக விலகி மறைந்தது.

ஒருநாள் அவர் கேள்விக்கு விடை கிடைத்தது:

'ஆட்சி அதிகாரத்தைப் பிடிக்கவும், அதை காப்பாத்தி வச்சுக்கவும் கட்சிக்குள் ஒற்றுமை இருக்கணும். இந்த ஒற்றுமைக்கு பங்கம் வர்ற மாதிரி இருந்தா, பூசல் வெடிச்சா தயவு தாட்சண்யம் பாக்காம உடனே களையெடுப்பு செஞ்சிருக்கணும். தேவைப்பட்டா, அந்தத் துரோகிகளின் இரத்தத்தை எடுத்தாவது கட்சிக்குள் ஒற்றுமையை நிலை நாட்டியிருக்கணும். இதைச் செய்யாம விட்டது தப்பு!'

'அந்த தப்பு எதிர்காலத்துல திரும்ப நடக்க விடக்கூடாது. தகுந்த ஏற்பாடு செய்யணும். கட்சிக்குள் யார் துரோகிங்கறதைக் கண்டு பிடிக்க புதுசா ஒரு கண்காணிப்பு படை அமைக்கணும்...'

இந்த ஞானம் வந்தவுடன் சதாமின் உடம்புக்குள் புதிய உற்சாகம் பீறிட்டுப் பாய்ந்தது. துள்ளிக் குதித்தார். உடனே ஏதாவது செய்ய வேண்டும் என்று பரபரத்தார்.

இனி சிறைக்குள் முடங்கிக் கிடப்பது இயலாத காரியம் என்று உணர்ந்தார்.

சிறையிலுள்ள அதிகாரிகளின் கண்களில் சாமர்த்தியமாய் மண்ணைத் தூவி தப்பியோட திட்டம் வகுத்தார்....

▫◆▫

காலிங் பெல் ஒலிக்கும் சத்தம் கேட்டு திடுக்கிட்டு விழித்தார் பக்கர். கைக் கடிகாரத்தைப் பார்த்தார். நேரம் பின்னிரவு இரண்டை நெருங்கிக்கொண்டிருந்தது...

படுக்கையிலிருந்து எழுந்து வந்தார்.

பக்கர் இராணுவ உயர் அதிகாரியாக இருந்தவர். ஆரம்ப நாட்களிலிருந்தே மறுமலர்ச்சிக் கட்சியோடும், அதன் வளர்ச்சியோடும் தன்னை இணைத்துக் கொண்டவர். தற்போதைய மறுமலர்ச்சிக் கட்சியில் பொதுச் செயலாளராக இருப்பவர்.

மீண்டும் காலிங் பெல் ஒலித்தது...

கதவருகே வந்தார் பக்கர். "யாரு...?" என்றார்.

"நான்தான் சதாம்!" வெளியிலிருந்து குரல் கேட்டது.

பக்கர் பரபரப்படைந்தார். 'சிறையிலிருந்த சதாமா? எப்போ வெளியே வந்தான்? எப்படி வந்தான்? அவனை விடுவிப்பதாக அரசாங்கம் அறிவிக்கவில்லையே...?'



வேகமாக கதவைத் திறந்தார்.

"தப்பிச்சா வந்தே...?"

"ஆமா!"

சோபாவில் சாய்ந்த சதாம் சற்று ஆசுவாசப்படுத்திக்கொண்டார்.

சதாமுக்கு பக்கர் மிகவும் நெருங்கிய உறவினர். சதாமின் மனைவி சாஜிதாவின் தங்கையை பக்கரின் மகன் திருமணம் செய்திருந்தான். அதுபோல் சாஜிதாவின் இரு தம்பிகளுக்கும், பக்கரின் இரண்டு மகள்களை திருமணம் செய்து வைத்திருந்தார்கள்.

"எப்படி தப்பிச்சே...?"

சதாம் மெதுவாக சிரித்துக் கொண்டார். "ஜெயில்ல இந்த அரசாங்கத்தைப் பிடிக்காதவங்களும் வேலை செய்யிறாங்க. அவங்க ஒத்தாசையோட தப்பி வந்துட்டேன்!"

குடும்பத்தினர் நலம் பற்றி விசாரித்துத் தெரிந்து கொண்டபின், அரசியல் விவகாரத்துக்குள் நுழைந்தார் சதாம். "கட்சி உறுப்பினர்களைக் கண்காணிக்கவும் துரோகிகளாக மாறிவிடும் உறுப்பினர்களைக் ஒழித்துக் கட்டவும் கட்சிக்குள் ஒரு இரகசிய கண்காணிப்பு- அதிரடிப்படை அமைக்க வேண்டும். இது அவசியம்!" என்ற தன் கருத்தை சதாம் பக்கரிடம் விரிவாக விளக்கினார்.

சதாம் சொல்வது சரியென்று பட்டது, பக்கருக்கு. உடனே அப்படியொரு படையை அமைத்து நிர்வகிப்பது, அத்துடன் வெகுஜனங்களைத் திரட்டுவது என்ற இரு முக்கியப் பொறுப்புகளை சதாமிடம் ஒப்படைத்தார் பக்கர்.

(தொடர்ந்து வரும்)

www.padippakam.com

# 04

# உதட்டில் ஒரு மச்சம்

சீனுவை தோட்டா தாக்கியதும் அவன் பின்னால் தூக்கியெறியப்பட்டான். அதற்கு முந்தின வினாடிவரை பொலிஸும், புழுதியும், புகைச்சலும் நிரம்பியிருந்த நினைவுகள் அந்தக் கணத்தில் பொட்டென்று அறுந்து போனது.

தூக்கியெறியப்பட்ட வேகத்தில் சீனு அவனுக்கு நேர் பின்னால் நின்று கொண்டிருந்த தம்பி ஷிவாவின்மீது மோதினான். அவனையும் கீழே சரித்து அவன்மீது விழுந்தான்.

கூட்டம் சிதறி ஓட, அவன், ஷிவா, பொலிஸ் மட்டும்.

ஷிவாவின் நாடி ஒடுங்கி விட்டது. மடியில் அண்ணன் அசைவற்றுக் கிடந்தான். பொலிஸ் ஒரு வியூகம் அமைத்து அவர்கள் இருவரையும் வேனிற்குள் திணித்தபோதும், பிரமிப்புடன்தான் இருந்தான்.

பொலிஸ் வேன் அவர்களைச் சுமந்து இராட்சத வேகத்தில் பறந்தது.

★★★

கலைந்து ஓடும் கூட்டத்தை அரவிந்த் ஹெலிகாப்டரிலிருந்து பார்த்தான்.

அமைச்சர் பிரகாஷ் குப்தா ஹெலிகாப்டரில் இருந்து இறங்கினார். உடனடியாகத் துப்பாக்கி ஏந்திய காவலர்கள் அவரைச் சுற்றி பாதுகாப்பு வளையமாக நின்றார்கள்.

பொலிஸின் உயர் அதிகாரி ஒருவர் ஓடிவந்து அமைச்சரிடம் மன்னிப்புக் கோரும் குரலில் பேசினார்.

"நோ பிராப்ளம் சார்... தடையைமீறி இளைஞர்கள் ஆர்ப்பாட்டம் செய்ததால், வேறு வழியின்றி துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டியிருந்தது. கலவரத்தை அடக்கி விட்டோம்! இனி எந்தப் பிரச்சனையும் இருக்காது."

அமைச்சர் ஒரு சிறு தயக்கத்துக்குப் பின் பொலிஸ் பரிவாரம் புடை சூழ மேடை நோக்கி நகர்ந்தார்.

தலையில் இரத்தம் சொட்டச்சொட்ட வேனிற்குள் திணிக்கப்பட்ட இளைஞன், அரவிந்த்தைப் பாதித்தான்.

'இளைஞன்! இவன் இன்னும் வாழ்க்கையில் சாதிக்க வேண்டியது எவ்வளவோ இருக்கிறது! ஒரு துப்பாக்கிக்கு பலியாகி இவன் வீழ்வதா?'

"மிஸ்டர் அரவிந்த்!" பொலிஸ் தலைவரின் குரல் அருகில் கேட்டது. "ஹெலிகாப்டரை தயார் நிலையிலேயே வைத்திருங்கள். நெருக்கடியான சூழ்நிலையில் திடீரென்று புறப்பட வேண்டியிருந்தாலும் இருக்கலாம்."

ஹெலிகாப்டரிலிருந்து இறங்காமல் அரவிந்த் தூரத்தில் நடக்கும் களேபரத்தை வருத்தத்தோடு கவனிக்கலானான்.

அமைச்சர் தன் பிடிவாதத்தை விட்டுக் கொடுத்திருக்கலாம் என்றே அவனுக்குத் தோன்றியது.

ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போகப்பட்ட இளைஞன் உயிர்பிழைக்க வேண்டும் என்று கண்மூடிப் பிரார்த்தித்தான்.

•••

ஷிவா பதற்றத்துடன் ஆபரேஷன் தியேட்டரின் மூடிய கதவையே பார்த்துக் கொண்டிருந்தான்.

ஒடக்கரையில் அப்புறம் என்ன நடந்திருக்கும்?

அம்மாவிடம், துப்பாக்கியில் அடிபட்டு சீனு சுருண்டு விழுந்த சேதி சொல்லப்பட்டிருக்குமா? தகவல் வந்ததும் அம்மா எப்படித் துடித்துப் போயிருப்பாள்?

போர்முனையில் உயிர் இழந்த கணவனை எண்ணிப் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தவளுக்கு உள்ளூர் போராட்டத்தில் 'உன் மகன் உயிர் பிரிந்தது' என்று சொல்லப்பட்டால் அதை எப்படி எடுத்துக் கொள்வாள்?

கதவு திறந்து வெள்ளை உடுப்பு டாக்டர் வெளியே வந்தார்.

உடனடியாக அவரை நெருங்கிய பொலிஸ் அதிகாரியிடம்.

"உயிர் பிழைத்து விட்டான். ஆனால், கண் திறப்பானா என்று சொல்ல முடியவில்லை. இன்டன்ஸிவ் கேர் யூனிட்டில் வைத்திருக்கிறோம். இன்னும் இருபத்து நான்கு மணிநேரம் கடக்கும்வரை எதுவும் சொல்ல முடியாது!" என்று சொல்வது ஷிவாவின் காதில் விழுந்தது.

சீனு உயிர் பிழைத்து விட்டான்.

பொலிஸ் அதிகாரி அவனை அருகே கூப்பிட்டார். கடுமையான கண்களும் மீசையும் இருந்தாலும் அவர் குரலில் கனிவு இருந்தது.

"தம்பி, பார்த்தாயா, உன் அண்ணன் நிலைமையை? இது தேவையா? பிரகாஷ் குப்தா பதவியில் இல்லாதபோதே செல்வாக்கான மனிதர். இப்போது அமைச்சராக வேறு இருக்கிறார். அவரோடு மோதிப் பார்க்கலாமா? தடை உத்தரவை மீறியதற்காக உன்னையும் அரெஸ்ட் பண்ணி உள்ளே வைக்க வேண்டும். ஆனால், உன் அம்மா தாங்க மாட்டாள். அதற்காக விடுவிக்கிறேன். இனிமேலாவது புத்தியோடு நடந்துகொள்... போ..."

இன்டன்ஸிவ்கேர் யூனிட்டில் இருந்த சீனுவை, ஷிவா பார்க்க அனுமதிக்கப்படவில்லை.

அம்மா கவலைப்படும் முன் அண்ணன் உயிரோடு இருப்பதைச் சொல்ல வேண்டும் என்று பரபரப்பாக ஷிவா புறப்பட்டான்.

♥ ♥ ♥

புது டில்லி.

வீட்டு வாசலில் வந்து அம்பாஸிடர் பிரேக் அடித்தது. அரவிந்த் டிரைவருக்கு குட்நைட் சொல்லிவிட்டு இறங்கினான். காரின் சீட்டிலிருந்து அலங்காரம் செய்யப்பட்ட மலர்க் கொத்தையும், ஸ்வீட் பாக்ஸையும் எடுத்துக் கொண்டான்.

டிரைவர் அவனைப் பார்த்து இந்தியில் கண்ணடித்தான். அரவிந்த் அதை அலட்சியம் செய்தான்.

ஒடக்கரை கிராமத்தில் பொலிஸ் வேனில் அள்ளிப் போகப்பட்ட இளைஞனின் நினைவு மறுபடி இடறியது. அவனைப்பற்றி எந்தக் கவலையும் இல்லாமல், பொலிஸ் வியூகங்களுக்கு நடுவில் அமைச்சர் பிடிவாதமாக அடிக்கல் நாட்டியபோது, அரவிந்திற்கு சற்று வலித்தது.

அடிபட்டவன் இளைஞன் என்று நினைக்கும்போது, நெஞ்சு விம்மியது. அவன் தோட்டாவில் தாக்கப்பட்டு எகிறி விழுந்த காட்சி மனதில் மறுபடி புரண்டது.

'வேண்டாம் நினைக்காதே! கனமான எண்ணங்களால் நெஞ்சை பாரமாக்கிக் கொள்ளாதே! மனித வாழ்க்கையின் குறுகிய நாட்களை சோகமாக்கிக் கொள்ளாதே!'

'போ, உனக்காக ஜ்யோதி காத்திருக்கிறாள்.'

'ஒரு கணத்தைக்கூட வீணாக்காதே!'

'ஏன் இன்றைக்கு இவ்வளவு இருட்டாக இருக்கிறது இங்கே?' அழைப்பு மணி பொத்தானை அழுத்தினான்.

கதவு பளிச்சென்று திறக்கவில்லை. நைட் லாட்ச் போடப்பட்டு இரண்டங்குலம் திறந்து ஜ்யோதியின் கண்கள்.

அரவிந்த் அதிர்ந்தான்.

"ஏய், என்ன இது, உடம்பு சரியில்லையா என் செல்லக் குட்டிக்கு?"

கதவு திறந்தது.

இரண்டு கைகளையும் அவன் யேசுபோல் விரித்து நிற்க, ஜ்யோதி அவனை அப்படியே அணைத்து இறுக்குவாள் என்று எதிர்பார்த்தால்- ஜ்யோதி அவனைக் கடந்து சென்று கதவைச் சாத்தினாள்.

"ஜ்யோதி..." அரவிந்த் பதறினான். "என்ன ஆயிற்று உனக்கு? ஈவினிங் ஆனாலே பளபளவென்று ட்ரீம் கேர்ள்போல் டிரெஸ் செய்து ரெடியாய் இருப்பாயே... பேரில் இருக்கும் ஜ்யோதிபோதும் என்று லைட் கூடப்போடவில்லையா நீ?"

"நான் உன்னுடன் பேசப்போவதில்லை!" ஜ்யோதி செல்லமாக எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறாள். பேசாத உதடுகளுக்கு வேறு வேலையாவது தருகிறேன். என்று அவளை இறுக்கி அணைத்து...ஆனால், இன்றைக்கு குரலில் குறும்பு இல்லை. அவன் ஆசை ஆசையாகக் கொண்டு வந்திருந்த மலர்க்கொத்தையோ இனிப்புக்களையோ அவள் சீந்தக்கூட இல்லை.

அரவிந்த் அடிபட்டான். கையிலிருந்ததை சோபாவில் எறிந்தான். அவளை நெருங்கி, "ஜ்யோதி..!" என்று முகத்தை நிமிர்த்தினான்.

அந்தக் கணத்திற்காகக் காத்திருந்தவள் போல அவள் வெடித்து அழுதாள். அவன் மார்பில் மோதிச் சாய்ந்து குலுங்கினாள். அரவிந்த் அவள் முதுகைச் சேர்த்து அணைத்துக் கொண்டான்.



**இதுவரை**

அரவிந்த் ஒரு பைலட்.
அவனது மனைவி ஜ்யோதி.
அவர்களது நண்பன் விக்ரம்.
அவனுக்கு ஜ்யோதி மீது ஆசை.
இதற்கிடையே அரவிந்த், அமைச்சர் பிரகாஷ் குப்தாவுடன் பைலட்டாக ஒடக்கரை கிராமத்திற்கு செல்கிறான்.
அக்கிராமத்தை வளைத்துப்போட அமைச்சர் திட்டமிட அதை எதிர்க்கிறார்கள் கிராம இளைஞர்கள்.
பொலிஸ் சுடுகிறது.
சீனு காயமடைகிறான்.

**இனி....**

## சுபா

"ஜ்யோதிம்மா, என்னடா ஆச்சு?"

ஜ்யோதி விம்மலினூடே தவணை தவணையாகப் பேசினாள்.

"அந்த விக்ரம் வந்திருந்தான்... இன்றைக்கு. அவன் நண்பன் இல்லை அரவிந்த். பெண்வெறி பிடித்து அலைபவன். என்னை...என்னை சீண்டிப் பார்த்தான். எனக்கு யாரும் இல்லை அரவிந்த். நான் தனியாள். அதனால் அவனுக்குத் தைரியம் வருகிறது. எனக்கு யாரும் இல்லை....யாரும் இல்லை..."

"ஜ்யோதி!" அவள் முகத்தை நிமிர்த்தி கண்ணீரை உதடுகளால் ஒற்றினான். அரவிந்த். "நான் உன் பக்கத்தில் இருக்கும் போதே, அப்படிப் பேசலாமா?"

"பக்கத்தில்! பக்கத்தில் இருக்கிறாயா நீ? எப்போது வேண்டும் என்று தேடுகிறேனோ அப்போது பக்கத்தில் இருக்கிறாயா நீ?"

"என்ன ஜ்யோதி நீ- இருபத்து நான்கு மணிநேரமும் எந்தப் புருஷனால் பக்கத்திலேயே இருக்க முடியும்?"

"வேண்டாம்ப்பா... பக்கத்தில் வேண்டாம்... அவசரம் என்றால் உன்னைக் கூப்பிட்டுப் பேச முடியுமா என்னால்? எமர்ஜென்ஸி என்கிறேன்... ராங் நம்பர் என்று மினிஸ்டர் ஆபீஸில் ஃபோனை வைக்கிறார்கள். நீ கொடுத்த ஃபோன் நம்பர் கரெக்ட்தானே?"

"அந்த சிடுமூஞ்சி ஒரு டைப்... பர்ஸனல் ஃபோன்கால் வந்தால் கொடுக்காது. என்னவோ அதுவே மினிஸ்டர் என்ற நினைப்பு! பர்ஸனல் ஃபோன் பேசினால் கவனம் சிதறி விடுமாம்."

"அப்படிப்பட்ட சிடு மூஞ்சியிடம் ஏன் அட்ஜெஸ்ட் பண்ணிக் கொண்டு போக வேண்டும்? ஓங்கி முகத்திலேயே குத்துவிட தைரியம் இருக்கிறதா உனக்கு? என் பெண்டாட்டியிடமிருந்து ஃபோன் வந்தால் என்னை ஏன்யா கூப்பிடவில்லை என்று கேட்டு மூஞ்சியிலேயே மொத்தும் ஆண்பிள்ளையாக இருந்திருக்கிறாயா நீ?"

"நான் இருக்கும் வேலை அப்படிப்பட்டதில்லையே ஜ்யோதி."

"என்ன புடலங்காய் வேலை? தூக்கி அவன் முகத்திலேயே எறிந்த விட்டு வா... ரோட்டோரத்தில் எங்காவது ஒரு பீடா கடை போடுவோம்... சிகரெட் விற்போம். ஸ்வெட்டர் விற்போம். என்னாவது செய்து பிழைத்துக் கொள்வோம். அரவிந்த் அரவிந்த் என்று நான் கதறும்போது, நீ எங்கேயோ ஆகாசத்தில் பறக்கும் இந்த வேலை வேண்டாம்."

"ஜ்யோதி... இன்றைக்கு நீ ரொம்ப ஆடிப் போயிருக்கிறாய்... வாயில் வந்ததையெல்லாம் பேசுகிறாய். என் கண்ணைப் பார்த்துச்சொல்... இந்த வேலையா வேண்டாம் என்கிறாய்? என்னை முதன் முதலில் பார்த்தது எங்கே? மயங்கி மயங்கி என் மடியில் சாய்ந்தது என்னை யாராகப் பார்த்து?"

ஜ்யோதி கண்களை விரல் முட்டிகளால் தேய்த்து விட்டுக் கொண்டாள். "அன்றைக்குப் பிடித்தது. இன்றைக்குப் பிடிக்கவில்லை..."

"ஜ்யோதி.. கமான்... இரண்டு பேருமே அழுக்காக இருக்கிறோம்.. குளித்தாக வேண்டும்... குளித்தாக வேண்டும்... குளித்துவிட்டுப் பேசுவோமா?"

"பேச்சை மாற்றுகிறாய்...!"

"இல்லை. தள்ளிப் போடுகிறேன். ஒடு... பாத்டப்பை நிரப்பு... நான் டிரஸ்ஸை மாற்றிவிட்டு வருகிறேன்... கமான்... போ..." அவளை பாத்ரூமுக்குள் உந்தித் தள்ளினான்.

(○—வரும்—○)

---

**கவியரசு கண்ணதாசன் எழுதிய—அவரது சுயசரிதத்தின் முக்கிய பக்கங்கள் உங்கள் முன் விரிகின்றன. 'எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அல்ல; எப்படி வாழக்கூடாது என்பதற்கான வழிகாட்டிகள்' இவை....**

# கவியரசுவின் சுயசரிதை

## 23

காற்றிலேறி விண்ணிலே பறந்தோம், கண்களைக் கட்டி மண்ணிலே தவழ்ந்தோம். நாற்றிடைத் தென்றல் நடப்பது போல, நலமிகும் காதலில் மனமகிழ்வுற்றோம். களங்க மனத்தினர் ஆசைகட்காக, காதலர் நாங்கள் சாவினை அடைந்தோம். லட்சியவாதிகளுக்கு கோபுரம் கட்டும் நல்ல மனிதர்களே! காதலும் ஒரு லட்சியம்தான் என்பதை மறந்து விடாதீர்கள்!

போரிலே மாண்டால்தான் வீரசுவர்க்கம் போகலாம் என்பீர்களே! நாங்கள் இருப்பதும் வீரசுவர்க்கம்தான் என்பது இன்னும் இங்கு வராத உங்களுக்குத் தெரியுமா?

இதோ லைலா! இதோ கயஸ்! இதோ அம்பிகாபதி! இதோ அமராவதி! ரோமியோ ஜூலியட்! சீசரும் இங்கேதான் இருக்கிறான். கிளியோபாத்ரா எங்கள் பக்கத்தில்! எல்லோரும் இங்கேதான். இன்னும் சாகாதவர்களே! வீர சுவர்க்கம் என்றால் சரித்திரம் என்பது உங்களுக்குத் தெரியுமா?

படித்த சரித்திரத்தையும் மறந்துவிடும் பரிதாப ஜென்மங்களே! ஆடவர் பலருண்டு, அழகியர் மிக உண்டு அவனியில்; எனினும் ஒருவருக்கொருவர் என்கிற உறுதியை உயிர் போகும் வரையில் கடைப்பிடித்த எங்களை ஒவ்வொரு வினாடியும் நினைத்துக் கொண்டிருப்பீர்களாக!

மேகம் குவிந்தால் மயில் ஆடுகிறது; மரங்கள் அசைந்தால் குயில் பாடுகிறது; வசந்தத்தின் வரவை நாணல் தலைசாய்த்து வரவேற்கிறது. மலர்ந்திருக்கும் சோலைக்கு வண்டு அழைப்பில்லாமலே வருகிறது. சுவையோடு இசை பிறந்தால் கருநாகம்கூட அசைவற்றுப் போகிறது. ஞானமுள்ளவன் விரல் பட்டால் வீணையிலே நல்லிசை எழுகிறது. சமுத்திரத்திலே நிறைய நீர் இருந்தாலும், சக்ரவாகப் பட்சி பனித்துளியைத்தான் நாடுகிறது. தினசரி நிகழும் இவையெல்லாம் எங்கள் காதலை உங்களுக்கு நினைவூட்டவில்லையா?

அன்பு மலை முகட்டில், இன்பக் கடலடியில், ஆசை நதிப் பெருக்கில், காதற் பூங்காவனத்தில் எங்கெங்கு நோக்கினும் அங்கெல்லாம் எங்கள் உருவம் தோன்றவில்லையா?

ஓ! உறக்கத்திலிருப்பவர்களே! எங்கள் குரல் உங்கள் காதுகளில் விழவில்லையா?

அறுபட்ட காற்றாடிபோல் அலைந்து, மரம் விட்ட இலைபோல மறைந்துவிடும் மக்கள் கூட்டமே! எங்களைப் பாருங்கள்; நாங்கள் சொல்வதைக் கேளுங்கள்!

வசந்தம் உங்களைத் தழுவ வரும்போது, அசந்த நிலையில் அதை அணைத்துக் கொள்ளுங்கள்!

மாமழை உங்களைச் சுற்றி விழும்போது, மாளிகையோ, மண் குடிசையோ, 'ஒருவர் உடலில் ஒருவர் ஒதுங்கி, இருவர் எனும் தோற்றமின்றி, இன்பங்காண விழையுங்கள்!'

ஆடவரெல்லாம் அழகியரின் தலைகோதி மெய்சிலிர்த்திருங்கள். அழகியரெல்லாம் ஆடவரின் மார்பில் சாய்ந்து மனம் குளிருங்கள்.

போட்டி உங்களுக்கு வேண்டாம். பொறாமையை மறந்துவிடுங்கள். சண்டைக்கு வேறு களம் வேண்டாம். காதற் களம் போதும். சச்சரவுக்கு நேரமில்லாமல் காதல் அளியுங்கள். கண்ணீர் வரட்டும்; ஆனந்தத்தில் மட்டும்! கவலை என்று அழுபவனைப் பார்த்துச் சிரியுங்கள். மண்ணகத்திலே வாழுகின்ற போதிலும் உங்கள் கன்னத்தில் கணந்தோறும் கனிப்புச் சிந்தட்டும், இன்பம் கொள்ளுங்கள். எக்காளமிடுங்கள். நாளைக்கு நாம் போவது உறுதி யென்றாலும், இந்த வேளையிலே சுகமிருப்பது உறுதி என்று நினையுங்கள்.

பொழுது போய்க்கொண்டிருக்கிறது. பகல் நடந்து விட்டது. மாலை வந்துவிட்டது. இதோ தென்றல்! ஆஹா! இன்பமயமான தென்றல்! கவலைகளை மறைப்பதற்கு 'மணமுடி' கொண்டு வரும் தென்றல்! இதோ வந்துவிட்டது.



ஓ! தோழரே! தோழியரே! தயாராகிக் கொள்ளுங்கள். பஞ்சணையிலே மலர் தூவுங்கள்! சன்னல்களைத் திறந்து வையுங்கள். வீணை எங்கே? மெல்லியரே எடுத்துக்கொள்ளுங்கள்! மீட்டுங்கள்! பாடுங்கள் காதல் கீதம் பாடுங்கள்! வீரர்களே கேளுங்கள்! உங்கள் செவிகளிலே, தேன் மாரி பெய்த தீஞ்சுவைக் கனியைத் தழுவத் தாவுங்கள்! அவசரம் வேண்டாம், மெல்ல வாருங்கள். வீணையை வாங்கித் தரையிலே வையுங்கள்.

பூங்கரம்பற்றிப் புளகாங்கிதம் பெறுங்கள். அருகிலே அணைத்தபடி அணையருகே செல்லுங்கள். கட்டிலுக்கு வலிக்காது. ஆனாலும் மெதுவாக அமருங்கள், காதற் புறாக்களே! கதவை மூடிவிடுங்கள்!

நீலங்கரைத்த வானிலே, கோலங் குழைத்து வந்திருக்கிறது வெண்ணிலா! அது நடந்து வந்த வேளையில் விழுந்து விட்ட வைரங்கள் பொறுக்குவாரில்லாமல் கிடக்கின்றன.

ஓ! காதலரே! இவற்றை நீங்கள் காண முடியாது! ஆனாலும், கதவைத் தாழிட்ட கட்டழகரே! இவற்றின் நினைவே உங்களுக்கு வாராது.

சுவையாகச் சுவையாக இரவு போய்விட்டது. பொழுது விடிந்து விட்டது....

கண்ணாடி மேனியரே! நீங்கள் வெளி உலகத்திற்கு வாருங்கள்!

இதுதான்-பகல்தான்-இப்போது காண்பதுதான் உலகமா? இல்லை...

நிச்சயமாக இல்லை...

இரவு நீங்கள் கண்டீர்களே! அதுதான் உலகம். அதுதான் உண்மையான உலகம்..

பகல் வெறும் கனவு!

(சரிதம் தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

# எது உண்மை?

காலையில் நான் கண்ட அந்த விபத்து என் மனதினை விட்டு அகல மறுத்தது. எமது கல்லூரி மாணவியை முட்டித்தள்ளி விட்டு நிற்காமல் சென்றுவிட்ட அந்த ஆட்டோ சாரதியின் வறட்டு வைராக்கியம் எனக்கு ஆத்திரத்தையே உண்டு பண்ணியது. ஆனால் வழமைபோலவே என் மனம் எந்த வித எதிர் நடவடிக்கை பற்றியும் முடிவெடுக்காமல் சோர்ந்து கவலையில் மூழ்கியது.

உலகில் இப்படியெல்லாம் துயர சம்பவங்கள், அவலங்கள், அட்டூழியங்கள் சம்பவிக்கக் காரணம் என்ன? இரு வினை என்று கூறிவிட்டால் போதுமா? இரத்த வெள்ளத்தில் மிதந்த அந்த மாணவி என்ன தப்பினைச் செய்தாள்? அவளுக்கு இப்படியொரு தண்டனை தேவையா? அப்படியிருப்பினும் இது அதிகமில்லையா? மனிதாபி



**வீ.என். சந்திரகாந்தி – திருமலை**

மானம்தான் கெட்டுப்போய்விட்டால்கூட இறையருள் என்ற ஒன்று இருந்து இவற்றை ஏன் தடுப்பதில்லை?

அந்த மகளிர் பாடசாலையின் கருமங்கள் யாவும் தடையின்றி நடந்து கொண்டிருந்தன. எனக்குத்தான் பாடங்களில் மனம் ஒட்டவில்லை.

பல சம்பவங்கள் எனது மனத் திரையில் காட்சிகளை விரித்துக் கொண்டிருந்தன.

மறைந்த எம் மதிப்புக்குரிய கல்லூரி அதிபர்- எமது பாடசாலை வாசலிலேயே இரத்த வெள்ளத்தில் தோய்ந்த காட்சி, மாணவிகள் நாம் கதறி அழுத கோலங்கள். இவையெல்லாம் எமது மனதில் ஆறாத இரணங்களாகப் பதிவாகிவிட்டன. எமது அதிபர் சக ஆசிரியைகளுக்கும் மாணவ சமூகத்துக்கும் வழிகாட்டியமையை தவிர அவர் செய்த தவறு என்ன? காளி ஆச்சியின் அருளை தனக்காக மட்டுமன்றி எமக்காகவும் வேண்டி சந்நிதானத்தில் தவம் இருந்தது தவறா?

எனது மனம் எடைபோட்டுக்கொண்டே இருந்தது. பாடசாலை முடிவுற்று ஆசிரியைகளும் மாணவிகளும் வெளியேறிக் கொண்டிருந்தார்கள். திடுக்குற்று சகஜ நிலைக்குத் திரும்பிய நான் வாசலுக்கு வந்தேன். மாணவிகள் நடந்தும் துவிச்சக்கர வண்டியிலும் ஆட்டோவிலும் விரைந்து கொண்டிருந்தனர். எவருக்கும் எப்போதும் எதுவும் நடக்கலாம்! எதற்கும் யாரும் உறுதி இல்லை.

என்னை அன்பாக அழைத்துச் செல்ல அப்பாவோ அண்ணாவோ ஆர்வமாக ஓடி வருவார்கள். மோட்டார் வண்டியில் நான் அழைத்துச் செல்லப்படுவேன்.

அம்மா காப்பு விரதம். பத்து வருடங்களாக அனுஷ்டிக்கின்றாள். தான் நினைத்தது நடக்கும் என்பாள். கனவு கண்டது பலிக்கும் என்பாள்.

அம்மா அன்புடன் சைவ உணவு பரிமாறிக்கொண்டிருந்தாள். அப்பா கவலையுடன் அமர்ந்திருந்தார். ஏதோ ஒரு உரையாடல்- நான் வர முன்னரே நடந்ததன் பின்னணி அது.

அம்மா விளக்கினாள். "பிள்ளை! உன் அண்ணனோடு படிக்கிற சுரேஷின் அப்பாவாம். உன்னுடைய அப்பாவோடதான் ஒரே கந்தோரிலை வேலை பார்க்கிறவராம் 'மேற்பிப்ரிமிலை' வரேக்கை ஆமி ட்ரக் அடிச்சு ஐ.சி. வாட்டிலை போட்டிருக்காம். உயிர் பிழைக்கிறதும் கஷ்டமாம்"

ஏற்கனவே நைந்து போயிருந்த என் மனம் உள்ளூர அழவே ஆரம்பித்தது. நாங்கள் உள்துறைமுக வீதியில் அமைந்த ஒரு வீட்டில் சில ஆண்டுகளுக்கு முன் வாடகைக்கு இருந்தபோது அவரையும் மனைவி பிள்ளைகளையும் நான் பல தடவை கண்டிருக்கின்றேன். அப்போது அவர்கள் உவர்மலை மத்திய வீதியில் இருந்தார்கள்.

நான் கேட்டேன், "ஏனம்மா அந்த அன்ரி உங்களுடன் காப்பு விரதம் அனுஷ்டிப்பதாகக் கூறினீர்களே அவ இப்போ கோயிலுக்கு வருவதில்லையோ?"

"வராமல் என்ன பிள்ளை! விபத்து நடந்தபோது அவ காப்பு எடுப்பதற்காக என்னுடன்தான் கோவில் சந்நிதானத்தில் நின்றவ. செய்தி கேட்டுத் தான் அழுது கொண்டு ஓடினவ."

'காளித் தாயே! அந்த அன்னை உன்னைக் கேட்டது இதுவா? காப்பு விரதத்தின் பொருள்தான் என்ன?'

மாலையில் அப்பாவின் தொலைபேசி அழைப்பு வந்தது. அந்த அங்கிள் இறந்து விட்டாராம்!

அம்மா கோயில் போக ஆயத்தமாகிக் கொண்டிருந்தாள். "பிள்ளை வெளிக்கிடு- கோயிலுக்குப் போவோம்"

நான் மறுத்துவிட்டேன். எனக்கு எதிலும் நம்பிக்கை பிறக்கவில்லை. எதிலும் பற்றுக்கோடு இல்லாத மனநிலை. ஊமைக் காயங்கள். அப்பா கட்டளையிட்டார் -"கோயிலுக்குப் போ...!"

நான் கேட்டேன், "எதற்காக அப்பா? நான் எதிலும் ஈடுபாடாக இல்லை. என்னை விட்டு விடுங்கள்"

அப்பா புத்திமதி கூறுவது போல் கூறினார். "இந்த உலகத்தில் நடப்பனவற்றின் ஒரு பகுதியைத்தான் பார்க்கின்றோம். மறுபக்கம் எமக்குத் தெரியாது. நன்மை என்று நாம் முன்னர் எண்ணியதெல்லாம் பின்னர் தீமையாக மாறுவதனையும், தீமையென்று நாம் துயருற்றவையெல்லாம் பின்னர் நன்மையாக மாறியதையும் நாம் கண்டதில்லையா? கடவுள் மேல் நம்பிக்கை வைப்பதைத் தவிர மனிதனுக்கு வேறு ஒரு மார்க்கம் உண்டா?"

இன்னும் பல கூறி அப்பா என்னை தேற்றினார். நானும் மனதைத் துயரத்திலிருந்து மீட்டு கோயில் சென்றேன். கோயிலில் ஏதேதோ கதைகளுக்கு மத்தியில் என் மனம் விரும்பாத அந்தக் கதையும் என் காதில் விழுந்தது. 'ஆறு வயது பெண்பிள்ளையின் கால்மேல் 'ஆமிட்ரக்' ஏறிவிட்டதாம்.' கோயிலுக்கு வந்து திரும்பிய வழியில் அப்படி நடந்துவிட்டது.

அப்பா கூறிய ஆலோசனைகள் கற்பூரமாகக் கரைய என் மனம் மீண்டும் ஆறாத கவலையில் மூழ்கியது.

மனிதன் தனக்குத்தானே சமாதானங்களை ஏற்படுத்திக் கொள்கிறானா? அல்லது சம்பவங்கள் எல்லாம் ஒரு விதி முறையில் நடந்து கொண்டிருக்கின்றனவா? எது உண்மை?

# காதல் ரோஜாவே

கண்களைக் கசக்கிக் கொண்டே நான் படுக்கையிலிருந்து எழுந்தேன். உற்சாகமாக இருந்தது. இரவு தூக்கத்தைக் கெடுத்த ரியாஸாவின் முகம், முழுமதியாய் இப்போதும் மனதில் பிரதிபலித்தது.

'இவ்வளவு நாளும் வெறும் நண்பியாகப் பழகிய ரியாஸாவை இன்று காதலியாக காணப்போகிறேன். கல்லூரிக்குச் சென்றதும் முதல் வேலையாக என் காதலை அவளுக்கு தெரியப்படுத்த வேண்டும்' என்று மனதுக்குள் கூறிக்கொண்டே கல்லூரிக்குப் புறப்பட்ட போது, வீட்டு முற்றத்தில் பூத்திருந்த ரோஜா மலர், மனதைப் பறித்தது.

'காதலர்கள் தங்களுக்குள் பரிமாறிக் கொள்ளும் மலரல்லவா ரோஜா.'

ரியாஸாவுக்குக் கொடுக்க வேண்டும் எனும் எண்ணத்தோடு அதை பறித்து எடுத்துக்கொண்டு புறப்பட்டேன்.

கல்லூரிக்குள் நுழைந்ததும் அலை பாய்ந்த கண்கள், தூரத்தில் தோழிகளோடு



**ஸபீர் ஹாபிஸ்**

சிரித்துப்பேசிக் கொண்டிருந்த ரியாஸாவை கண்டு கொண்டன. இதுவரை காலமும் அவளோடு நன்றாக நெருங்கிப் பழகி கதைத்து வந்த எனக்கு இன்று தயக்கமும், ஒருவித நடுக்கமும் ஏற்பட காரணம் புரிந்தது. 'காதலிக்கிறேன் அல்லவா!'

கையிலே இருந்த காதல் ரோஜா, 'தயாராக இருக்கிறேன்' என்று தைரியம் கூறியது.

தோழிகளிடம் விடை பெற்றுக்கொண்டே திரும்பிய ரியாஸா, என்னைக் கண்டதும், முகமலர்வுடன் விரைந்து வந்தாள். "குட்மார்னிங்!" சொல்லி, அவளை வரவேற்றபோது, பதில் சொன்னவள், என் கைகளைப் பிடித்து, அதில் அவள் கொண்டு வந்திருந்த ரோஜா மலரை வைத்தாள்.

ஆனந்த அதிர்ச்சியாய் அவளை நோக்கினேன். 'பழம் நழுவிப் பாலுள் விழுந்ததோ' என்று மனம் சந்தேகத்துடனும், சந்தோஷத்துடனும் கேட்டுக் கொண்டது.

"பாருங்க ஸபீர்! இந்த ஆறுமாசமா, வெறும் நண்பியா நான் உங்களோட பழகிட்டிருக்கேன். அது போலதான் நம்ம கிளாஸ்ல இருக்கிற பர்ஸானோடவும் பழகிட்டிருந்தேன். ஆனா, அத அவன், தப்பா நினைச்சு, வேறு மாதிரியா கற்பனை பண்ணிக்கிட்டான்."

"....."

"இன்னிக்குக் காலைல இந்த ரோஜாவை என்கிட்ட தந்து, என்னைக் காதலிக்கிறதாவும், இது அவன் தாற 'காதல் ரோஜா'ன்னும் கூறி, என் கையில கொடுத்திட்டான். எனக்கு வந்த ஆத்திரத்தில் நல்லா விளாசித் தள்ளிட்டன்."

நான் மௌனமாக கேட்டுக் கொண்டிருந்தேன்.

"இந்த போய்ஸ்களெல்லாம் ஏன்தான் இப்படி இருக்காங்கன்னே தெரியல்ல. ஸபீர்! நீங்கதான் அவனுக்கு புத்திமதி சொல்லி, படிப்பில கவனம் செலுத்த வைக்கணும். உங்களைப் பார்த்தாவது அவன் திருந்தட்டும் கிளாசுக்கு நேரமாகுது. நான் வர்றேன் ஸபீர்!"

விடை பெற்றுக்கொண்டு அங்கிருந்து நகர்ந்தாள் ரியாஸா. என் மறு கையில் நான்கொண்டு வந்த அந்த 'காதல் ரோஜா' பத்திரமாக இருந்தது. நல்லவேளை ரியாஸா அதைப்பார்த்துவிடவில்லை.

# ஒரு நாடு– இரு நேரம்

குளிரூட்டப்பட்ட மனேஜரின் அறைக் கதவை திறந்து உள்ளே சென்று மேசையின் மேல் வைக்கப்பட்டிருந்த 'எட்டன்டன்ட ரெஜிஸ்டரில்' தன் பெயரைப் பதிவு செய்து விட்டுத் திரும்புகையில், கதவைத் தள்ளிக் கொண்டு மனேஜர் கவிராஜ் உள்ளே வந்தார்.

"குட் மோனிங் ஸார்!"

"குட் மோனிங், மிஸ்டர் அஸீஸ் ஏன் லேட்?"

"இல்லையே ஸார்; வழக்கமா வார நேரத்துக்குத்தானே வந்திருக்கேன்!"

"என்ன மிஸ்டர் அஸீஸ் நேரத்தை பாருங்க!" என்றார் மனேஜர் கவிராஜ்.

அஸீஸ் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தார் 8.02. ஆபிஸ் சுவர்க்கடிகாரத்தைப் பார்த்தார் 8.32.

"ஸார் என் கடிகாரத்தில் எட்டு மணி ஸார்!" எனக் கூறிக்கொண்டே கையை நீட்டி கடிகாரத்தைக் காட்டினார் அஸீஸ்.

"ஓஹோ, அப்படியா?" எனக்கூறிக் கொண்டே அழைப்பு மணியின் விசையை அழுத்தினார் கவிராஜ்.

"என்ன ஸார்?" எனக் கேட்டுக் கொண்டே உள்ளே வந்தான் ரங்கன்.

"மிஸ்டர் சிரினேரிசை வரச் சொல்லும்!"

சிரினேரிஸ் உள்ளே வந்தார். "மிஸ்டர் சிரினேரிஸ், வட்ஸ் த டைம் நவ்?"

"8.35 ஸார்"

"ஓ.கே. ஸ்டெனோவை வரச் சொல்லுங்க!"

ஸ்டெனோ கிரிஸ்டினா புன்னகைத்த படியே உள்ளே வந்தாள்.

"டைம் என்ன?"

"8.36 ஸார்,"

"சரி நீங்க போங்க," எனக்கூறிவிட்டு "என்ன மிஸ்டர் அஸீஸ் இப்ப என்ன சொல்கிறீர், லேட் ஆக வந்ததும் போதாமல்.... பொய் வேற; நீர் என்னைவிட வயசுல மூத்தவரா இருப்பதால உமது மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளுங்க, சரி போங்க!"

"ஸாரி ஸார் எங்கேயோ தவறு நடந்திருக்கு என்னை தவறா நினைக்காதீங்க!" எனக் கூறிக் கொண்டே அறையை விட்டு வெளியேறினார் அஸீஸ்.

அக்காரியாலயத்தில் பிரதான குமாஸ்தாவாக கடந்த பதின்மூன்று ஆண்டுகளாக கடமையாற்றும் அஸீஸுக்கு இது போன்றதொரு சம்பவம் நடந்ததேயில்லை.

தனது இருக்கையில் அமர்ந்த அஸீஸுக்கு வேலையில் நாட்டம் செலுத்தவே முடியவில்லை.

காலையில் தன் காதாலேயே ரேடியோவில் நேரத்தைக் கேட்டு, தன் கைக்கடிகாரத்தில் 'டைம் செட்' பண்ணியது எப்படி பிழையாகலாம்?

அன்றைய வேலை நேரத்தை எப்படியோ சமாளித்துவிட்டு வீடு சென்றவரின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. அனைவரிடமும் கடுகடுப்பாக இருந்தார்.

அதுவரை அமைதியாகவிருந்த வீட்டில் அஸீஸின் கடைசி மகள் தனது 'டியூசன்'



**ரம்புக்எலையூரான்**

வகுப்புக்களை முடித்துக்கொண்டு வருகையில் 5 மணியும் பிந்திவிட்டது. வந்ததும் வராததுமாய் வானொலியைத் தட்டி விட்டாள்,

"இத்துடன் இந்நிகழ்ச்சி நிறைவுபெறுகிறது. இப்பொழுது நேரம் 5 மணி 30 நிமிடம். இலங்கை வானொலி...." அஸீஸ் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தார், சரியாக 5.30. தனது வீட்டுச் சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தார் 6.00 மணியைக் காட்டியது.

"மகள் இங்க வாங்க!"

"என்ன வாப்பா?"

"ரேடியோவில 5.30. எங்கீட வீட்டு சுவர்க்கடிகாரத்துல 6 மணி: இதுல எது சரி மகள்!" எனக் கேட்டார் அஸீஸ்.

"ரெண்டும் சரிதான் வாப்பா!" எனக் கூறிக் கொண்டே ரேடியோவில் வேறோர் அலைவரிசையைப் பிடித்தாள். அங்கே செய்தி வாசிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

"வாப்பா, நேரத்தோட நான் போட்டிருந்தது இலங்கை வானொலியின் சர்வதேச ஒலிபரப்பு. அதுல பழைய 'டைம்'தான் சொல்வார்கள். இப்போ நான் போட்டது உள்ளூர் தேசிய சேவை. இதுல புதிய 'டைம்', இப்ப விளங்கிச்சா?" எனக்கூறிச் சிரித்துக் கொண்டே ஓடினாள் மகள்.

அப்படியே நாற்காலியில் சாய்ந்தார் அஸீஸ்.

அடுத்த நாள்-

தான் இலங்கை வானொலியின் சர்வதேச ஒலிபரப்பைக் கேட்டு தனது 'வொட்ச்சில் 'டைம் செட்' பண்ணிய விபரத்தை மனேஜரிடம் கூறினார் அஸீஸ்.

இருவரும் சிரித்தனர்.

"மிஸ்டர் அஸீஸ் இதுபோல எங்கட உறவினர் ஒருவருக்கும் ஒரு சம்பவம் நடந்தது!" எனக் கூறிவிட்டு விளக்கினார் மனேஜர்.

"எனது உறவினர் ஒருவரின் 'ஹஸ்பன்ட்' ஜப்பானில் இருக்கிறார். அவர்கள் வீட்டுக்கு எதிரில் 'போஸ்ட் ஒபீஸ்' இருக்கிறது. அதற்குத்தான் ஜப்பானில் இருந்து 'கோல்ஸ்' எடுப்பார். அவர் ஜப்பானிலிருந்து சர்வதேச ஒலிபரப்பைக் கேட்டு இலங்கை நேரத்தை அறிந்து, பின்னேரம் 4.30க்கு 'கோல்' எடுத்தால் இங்கே 'சப்போஸ்ட் ஒபீஸ்' முடப்பட்டிருக்கும். ஏனென்றால் உள்ளூரில் அப்பொழுது ஐந்து மணியாகி இருக்கும்.

"ஒரு நாடு இரு நேரம்- அதிசயம்!" என்றார் அஸீஸ்.

"மிஸ்டர் அஸீஸ்! இந்த நாட்டில் எது தான் உருப்படியாகக் கெடக்கு!" என்றார் மனேஜர் கவிராஜ்.

# வானவில்

கல்யாண மண்டபமே கோலாகலமாக இருந்தது. தன்னுடைய ஒரே தங்கை புவனாவின் திருமணத்தை யாரும் குறை சொல்லாத அளவிற்கு நடத்திக்கொண்டிருந்தான் கணேஷ். கணேஷ் வேலை செய்யும் அலுவலகத்திலிருந்து மேனேஜர் முதல் பியேபன்வரை கல்யாணத்திற்கு வந்திருந்தனர்.

கணேஷ் தெருவில் உள்ளவர்களும் சரி, திருமணத்திற்கு வந்தவர்களும் சரி. 'இப்படி பொறுப்புள்ள ஒரு பிள்ளை நமக்கு இல்லையே' என்று மனதிற்குள் மிகவும் வருத்தப் பட்டார்கள்.

கேமராவும், வீடியோவும் படம் பிடித்துக் கொண்டிருந்தது.

மாப்பிள்ளை கேட்காமலேயே கணேஷ் அதிகமாகவே சீர்வரிசை செய்திருந்தான்.



**சத்யன்**

'பெண் போட்டிருக்கும் நகைகளே ஐம்பது சவரனுக்கு துளிகூட குறையாது' என்று மண்டத்தில் உள்ள பெண்கள் பேசிக் கொண்டது கணேஷ் காதில் கேட்காமலில்லை. 'மதிய சாப்பாடு பிரமாதமாக இருக்கும்' என்று கும்பல் கும்பலாக நின்றவர்கள் பேசிக் கொண்டார்கள்.

தன் கணவர் இருந்தாலும் குடும்ப பொறுப்பை இந்த இருபத்தியெட்டு வயதில் எடுத்துப்போட்டுக்கொண்டு எவ்வளவு பொறுப்பாக செய்கிறான் என்று நினைத்து பார்த்து கணேசின் அம்மா மீனாட்சி, கல்யாண ஆனந்தக் கண்ணீர் விட்டாள்.

மாப்பிள்ளை மணப்பெண்ணின் கழுத்தில் தாலிகட்ட, அனைவரும் அட்சதை தூவ திருமணம் நல்ல முறையில் நடந்து முடிந்தது.

"வயசுக்கு வந்து எட்டு வருஷம் ஆகுது, வெலவாசி ஏறுகிற மாதிரி இவளுக்கு வயசு ஏறி கிட்டே போகுது.. ஒரு வேலையை தேடிப்போம்... தங்கச்சிக்கு ஒரு நல்ல இடத்தில கல்யாணம் கட்டிக் கொடுப்போம் என்ற பொறுப்பே இல்லாமல் தூங்குது பாரு ஏழு மணிவரைக்கும்...." என்ற தன் தாயின் குரலை கேட்டு திடுக்கிட்டு எழுந்தான் கணேஷ். கனவு கலைந்து விட்டது. வானவில்லாக மறைந்துவிட்டது.

தன் தாய் மீனாட்சி நீட்டிய தேனீரை வாங்கி குடித்தான் கணேஷ் தேனீர் கடக்... முடக்...கென்று அது பங்கிற்கு கணேஷை திட்டிக்கொண்டே வயிற்றுக்குள் சென்றது.


படிப்பகம்

www.padippakam.com

# இலக்கிய நயம்

தருவது ரசிகன்



கையை மூடித் திறக்க
கற்கண்டு வருகிறது!

வாயை மூடித் திறக்க
வளையல் வருகிறது!

கண்ணை மூடித் திறக்க
பொன்னொளி வருகிறது!

பெண்ணை ஆசிர்வதித்தால்
பிள்ளை பிறக்கிறது!

பிள்ளையை ஆசிர்வதித்தால்
பெரியாளாக சிறக்கிறது!

சித்து முனியின்
வித்தை அறிந்து
கூட்டம் திரண்டது!

இளம் பெண்களுக்கு
முன்னுரிமை!

சுடச்சுட
சிவலிங்கம்!

மின்னலடிக்கும்
தங்க மோதிரம்!

படப் பட
தொட்டு
ஆசிர்வாதம்!

உச்சியில் தொட்டு
ஊரும் கரம்
முதுகு தடவும்!

கம கம
வாசனைத் திரவியம்!

பள பள
உடையலங்காரம்!
விசேஷ எண்ணெய்
உபயத்தில்
விரிந்து உயர்ந்து
பொம்மிய முடி!

முடிக்குள்
ஒரு சரக்குகடையே
வைத்து நடத்தலாம்!

அதற்குள்தான்
லிங்கம், வளையல்
கற்கண்டு யாவும்
அடக்கம்!

சின்ன வயதில்
கண்கட்டு வித்தை
கற்றதால்,
பக்தர்களின் கண்களை
கட்டுவது கைவந்தது!

கண்கட்டு வித்தையை
வீதியில் செய்தால்
அது மஜிக்!

அதையே ஆசிரமத்தில்
செய்தால்
அது அற்புதம்!
கடவுள் அவதாரம்!

நம்புகிறவர்கள்
உள்ளவரை

சித்து முனிகளின்
காட்டில் மழைதான்!

அளவுக்கு மீறினால்
பக்தியும்
கத்தியாகிவிடும்!

மத வெறியாகி
அடுத்தாரையும் குத்தும்!

முடத்தனமாகி
தன்னை எடுத்தாரையும்
குத்தும்!

மந்தாகினிக்கு
முனியின் வசீகரத்தில்
சிந்தனை மழுங்கியது!

ஆசிர்வாதம் வாங்க
வந்தவள்
ஆட்கொள்ளப்பட்டாள்!

சித்து முனிக்கும்
அவள் கட்டழகு
பித்துப் பிடிக்கவைத்தது!

முன்னழகாக
இரு மொட்டுக்கள்!
பின்னழகாக
இரு மொட்டுக்கள்!

கண்ணுக்குள் சிக்காத
இடையளவு!-அவள்
கருத்துக்குள் சிக்காத
புதிரழகி!

மெய்மறந்த முனி
"வா குழந்தாய்"
என்று அழைத்தது!

அருகில் சென்றவளின்
உச்சி தொட்டது.

பைதிறந்து
விபூதி எடுத்து
'ப்பூ' என்று ஊதியது!

விரித்த கையில்
வைர மோதிரம்!

எந்தப் பெண்ணுக்கும்
இதுவரை
வைரம் வந்ததில்லை!

தங்கம் வந்தது
வெள்ளி வந்தது
இன்றுதான்...
வைரம் வந்திருக்கிறது!

நீ வித்தியாசமானவள்
வெற்றிக்குரியவள்"

முனி புகழ்ந்தது
மந்தாகினி மகிழ்ந்தாள்!

"இந்தா மோதிரம்!"
விரலை வருடி
அணிவித்தது!

"நெஞ்சு ஏன்
துடிக்கிறது?"

கேட்டபடியே முனி

அவள் நெஞ்சை
விரலால் தொட்டது!

மந்தாகினிக்கு
விஷமம் புரியவில்லை!

விரலால் தொட்ட
முனிக்கு
அவள் மறுப்பின்மை
தைரியம் தந்தது!

கைகளை விரித்து
உள்ளங்கையால்
நெஞ்சை அழுத்தியது!

மந்தாகினிக்கு
இப்போது புரிந்தது!

தொடக்கூடாத
பகுதியெங்கும்
முனியின் கை
உலாப் போனது!

அவள் ஆர்வப்பட்டாள்.
சரசத்தை அனுமதித்தாள்!

முனி துணிவுடன்
படை நடத்தினான்!
கனி கைக்கெட்டியதும்
மடை திறந்த மகிழ்ச்சி!

"எத்தனையோ புத்தகங்கள்
புரட்டியிருக்கிறேன்
இப்படியொரு புத்தகத்தை
புரட்டியதில்லை!

எத்தனையோ புத்தகங்களில்
பொருள் அறிந்திருக்கிறேன்
இந்தப் புத்தகத்தில்தான்
புதையல் அறிந்திருக்கிறேன்!

புரட்ட புரட்ட
புதிய அர்த்தம்!
திகட்டாத
புதிய அமுதம்!"

முனி வியந்தான்
பிரிய மனமின்றி
கூடிக் களித்தான்!

"ஆட வைப்பவளும்
நீதான்!
அடங்க வைப்பவளும்
நீதான்!

கூட வைப்பவளும்
நீதான்-இன்பத்தில்
கூவ வைப்பவளும்
நீதான்!

நாடவைப்பவளும்
நீதான்-மனதை
மாடாய் அலைப்பவளும்
நீதான்!"

முனி முற்றும்
துறந்த நிலையில்
உளறினான்!

மந்தாகினி
'களுக்'கென நகைத்தாள்!

"இப்போதுதான் நீர்
முற்றும் துறந்திருக்கிறீர்!
ஆடையை
முற்றும் துறந்திருக்கிறீர்!

ஆசையையும் இதுபோல்
துறந்திருந்தால்-மோக
வலையில் வீழ்ந்திருப்பீரா?
மீளா நோயில்
வீழ்ந்திருப்பீரா?"
என்று கேட்டாள்!

முனி குழம்பியது;
"என்ன சொல்கிறாய்
மீளாத நோயா?
யாருக்கு?" என்றது!

மந்தாகினி சிரித்தாள்;
"என்னுடன் கலந்தாய்
உன்னுடன் கலந்தது
கொடிய நோய்!
ஆம்! முனி
எனக்குள் இருப்பது
கொடும் பால்வினை நோய்!"

முனிக்கு
பாதி உயிர் போய்விட்டது!
உடல் வியர்த்தது!

"உண்மையாகவா?
உண்மையாகவா?"
என்று அழுதது!

"உண்மைதான்
பெண் பித்தால்
பலரை மோசம் செய்தாய்!
அப்பித்தால்
நீயே அழிந்து போனாய்!

எந்தெந்தப் பொருளில்
ஒருவன் பற்று
துறக்கிறானோ
அந்தந்தப் பொருளால்
துன்பமும் நேராது!

நீயோ!
பெண்களில்
ஆசை வைத்தாய்!
ஆடைகள்
துறக்க வைத்தாய்!

ஆசைக்கு விலையாய்
உந்தன்
வாழ்க்கையை
தொலைத்துவிட்டாய்!

துன்பமே இனியுன்
துணை!
துன்பமே இனியுன்
சுவாசம்!"

மந்தாகினி சிரித்தாள்
அது மரண ஒலி!

"யாதனின் யாதனின் நீங்கியான் –நோதல்
அதனின் அதனின் இலன்"

அதிகாரம்: 35, குறள்: 341.

## ஸ்போர்ட்ஸ்

### இன்னொரு கோப்பை

ஷார்ஜாவில் இலங்கை, இந்தியா, ஸிம்பாப்வே ஆகிய மூன்று நாடுகள் பங்கு பற்றும் கொக்கா கோலா கோப்பைக்கான ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் வரும் 13ம் திகதியுடன் முடிவடைந்துவிடும்.

இதை அடுத்து ஷார்ஜாவில் அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் கொக்கா கோலா கோப்பைக்கான ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவுள்ளன. இப்போட்டிகளில் இந்தியா, இங்கிலாந்து, பாகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகள் கலந்து கொள்கின்றன.

அடுத்த வருடம் நடைபெறும் 7வது உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கு முன் நடக்கும் சாம்பியன் போட்டி இதுவாகும்.

### அதிக சம்பளம்



டாக்காவில் நடைபெற்ற மினி உலகக் கோப்பைப் போட்டியைத் தொடர்ந்து மேற்கிந்தியத் தீவுகள் அணி தென்னாபிரிக்காவுக்குச் செல்வதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் ஊதியப் பிரச்சனை காரணமாக மேற்கிந்திய அணியின் கேப்டன் லாராவும், உதவி கேப்டன் ஹூப்பரும் தென்னாபிரிக்காவுக்குச் செல்ல மறுத்துவிட்டனர். மேலும் 7 வீரர்களும் இவர்களுடன் சேர்ந்து தென்னாபிரிக்க சுற்றுப்பயணத்தைப் புறக்கணித்துள்ளனர்.

20 ஆண்டுகளுக்குப்பின் மேற்கிந்தியத்தீவு அணி தென்னாபிரிக்காவுக்கு விஜயம் செய்யும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது இச்சுற்றுப்பயணம், இதனால் தென்னாபிரிக்க தலைவர் நெல்சன் மண்டேலா இவர்களுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

மேற்கிந்தியத்தீவு அணியின் பயிற்சியாளர் கிளைவ் லொயிட், கிரிக்கெட் சபை உறுப்பினர் ஜோயல் கார்னர் இவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனால் இதில் எந்த உடன்பாடும் ஏற்படவில்லை.

இதனைத் தொடர்ந்தே தென்னாபிரிக்க கிரிக்கெட் சபைத் தலைவர் அலி பாச்சர் மூலமாக நெல்சன் மண்டேலா இவர்களுக்குக் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார். அந்தக் கடிதத்தில்,

"20 ஆண்டுகளுக்குப் பிறகு தென்னாபிரிக்காவுக்கு விஜயம்செய்ய முன்வந்த நீங்கள், தொடர்ந்து வேற்றுமைகளை மறந்து டெஸ்ட் தொடரில் ஆட வேண்டும்..." என்று கேட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்களுக்கு அடுத்து மேற்கிந்தியத்தீவு வீரர்கள் மிக அதிக அளவில் சம்பளம் வாங்குகின்றனர்.

தென்னாபிரிக்க தொடருக்கு கனிஷ்ட வீரர்களுக்கு 16 ஆயிரம் டொலர்களும், சிரேஷ்ட வீரர்களுக்கு 50 முதல் 60 ஆயிரம் டொலர்களும் சம்பளமாக வழங்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், இவர்கள் கனிஷ்ட வீரர்களுக்கு 22 முதல் 25 ஆயிரம் டொலர்களும், சிரேஷ்ட வீரர்களுக்கு 60 முதல் 70 ஆயிரம் டொலர்களும் வழங்க வேண்டும் என்று கேட்கின்றனர்.

### வீச்சில் தவறில்லை

சமீபத்தில் இந்தியாவின் இளம் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் பந்து வீசும் முறையில் தவறு இருப்பதாகக் கூறி, சர்வதேசப் போட்டிகளில் பந்து வீசத் தடைவிதிக்கப்பட்டிருந்தது. சர்வதேச கிரிக்கெட் சபையின் இத்தீர்ப்பினால் இந்திய அணியிலிருந்து நீக்கப்பட்ட ஹர்பஜன் சிங்கின் பந்துவீச்சு இங்கிலாந்தில் சோதனை செய்யப்பட்டது.

இரண்டு நாட்கள் பயிற்சி- சோதனை, சர்வதேச கிரிக்கெட் சபையால் நியமிக்கப்பட்ட சோதனையாளர் பிரெட் டிட்மஸ் என்பவரால் நடத்தப்பட்டது. சோதனையின்பின்,

"ஹர்பஜன் சிங் பந்து வீசும் முறையில் எவ்வித குற்றமும் இல்லை" என்று கூறியுள்ளார். அத்துடன் ஹர்பஜனின் பந்துவீச்சை மேம்படுத்த சில ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார்.

பிரெட் டிட்மஸின் அறிக்கையும், ஹர்பஜன் சிங்கின் பந்துவீச்சு வீடியோ நாடாவும் விரைவில் சர்வதேச கிரிக்கெட் சபையின் பார்வைக்கு அனுப்பப்படும். அதன் பின் ஹர்பஜன் சிங் சர்வதேச போட்டிகளில் பங்குபற்றுவார்.

## சிந்தியா பதில்கள்

* யாழ் மக்களின் போக்குவரத்து பிரச்சனை என்று தீரும்?

செ. மனோகரன், திருமலை.

அரசியல் தீர்வு எட்டப்பட்டு யுத்தம் தணியும்வரை இதுபோன்ற பிரச்சனைகளுக்கான தீர்வுகள் தற்காலிகமே! ஆனாலும் யாழ் குடாநாட்டை விடுவிப்பதாகக் கூறி படை நடத்திய அரசு, அம் மக்களுக்கான கப்பல் சேவையை நடத்தக் கடமைப்பட்டுள்ளது. அக் கடமையில் இருந்து தவறியும் வருகிறது.

* சிந்தியா! தென்னாபிரிக்காவில் புலிகள் இருக்கிறார்களா, என விசாரிப்பதாக அந்த நாட்டு அரசு கூறியுள்ளதே?

ஆர். குகநாதன், கொழும்பு-11.

இலங்கை அரசு தொடர்ந்து புகார் கூறிக்கொண்டிருந்ததால் சகிக்க முடியாமல் கூறப்பட்ட இராஜதந்திரரீதியான பதில்தான் அது. குகநாதன் உங்களுக்குத் தெரியுமா- 'எந்த இயக்கத்திற்கும் தாம் பயிற்சி அளிக்கவில்லை' என்று இந்திய அரசு திட்டவட்டமாக மறுத்துக் கொண்டிருந்தபோது, அதே அரசிடம் ஐந்து இயக்கங்கள் அமோகமாய்ப் பயிற்சி பெற்றுக்கொண்டிருந்தன!

* புலிகள் தாம் மட்டும் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதை ஏற்கவியலாது என்று தமிழ்க் கட்சி ஒன்று கூறியுள்ளதே?

எம். தர்மலிங்கம், வவுனியா.

தமிழ் பேசும் மக்களது உரிமைக்காகத் தாமும் போராடிக் கொண்டு அதனைக் கூறியிருந்தால் ஏற்கலாம். 'வந்தேறு குடிகள்' என்று கூறிய பின்னும் மௌனமாக இருக்கும் கட்சிகள் தம்மை தமிழர்களது பிரதிநிதிகள் எனக் கூறுவதை எவர்தான் ஏற்பர்?! அரசு கூட ஏற்பதாகத் தெரியவில்லை!



ரஜினி

* 'படையப்பா' ரஜினி, 'மருதநாயகம்' கமல் ஒற்றுமை என்ன வேற்றுமை என்ன?

பா. ரகுராம், ஹெந்தளை.

இருவருமே பெரும் எதிர்பார்ப்புக்களை உருவாக்கியுள்ளனர்! இருவரது இரசிகர்களும் நீண்டநாள் பட்டினி!

படையப்பாவுக்கு ரஜினி தன் தாடியை இழந்திருக்கிறார். கமல் மருதநாயகத்திற்காக தாடி வளர்த்திருக்கிறார்.

* சிந்தியா! தமிழ்க் கட்சிகள் இந்தியாவை நம்பி ஆயுதங்களைக் கைவிட்டதால்தான் பொறுமைசாலிக் கட்சிகளாக மாறிவிட்டன என்கிறார்களே? ஆயுதம் ஏந்த வேண்டும் என்று முரசு கூறுகிறதா?

சி. ரவிகரன், மட்டக்களப்பு.

அப்படிக் கூறுவதாக நினைத்து சில கட்சித் தலைவர்கள் கலங்குவதற்கு நாமா பொறுப்பு? இந்தக் கதையை கேளுங்கள்.

சாது ஒருவர் பாம்பு ஒன்றை இறப்பில் இருந்து காப்பாற்றினார். அதற்கு நன்றியாக அப்பாம்பு: "இனி நான் யாரையும் கடிக்க மாட்டேன்:" என்று சாதுவுக்கு உறுதியளித்தது.

பாம்பு இனி தம்மைக் கடிக்காது என்பதை உணர்ந்த மொத்த கிராமத்து மக்களும் பாம்புமீது கல்லெறிந்தார்கள். அதனைக் காயப்படுத்தினார்கள். ஓட ஓட விரட்டினார்கள்.

சாதுவிடம் பாம்பு தன் காயங்களையெல்லாம் காட்டியது. சாது சிரித்துக்கொண்டே அந்தப் பாம்பிடம் சொன்னார்: "நான் உன்னைக் கடிக்க வேண்டாம் என்றுதான் சொன்னேன். சீற வேண்டாம் என்று சொல்லவில்லையே!"

* 'மருதநாயக'த்தில் புதுமைகள் என்னென்ன சிந்தியா?

எம்.எஃப். லைலா, கம்பளை.

முடியில் தொடங்கி அடிவரை பல புதுமைகள். அதில் சில மிக இரகசியமாம்!

* நம் அரசியல் கட்சிகள் பிரச்சனைகளை உடனுக்குடன் தீர்ப்பதில் ஏன் நாட்டம் காண்பிப்பதில்லை?

எஸ். கருணாநிதி, மாத்தளை.

ஓர் உயிருள்ள தவளையைத் தூக்கி ஒரு கிண்ணத்தில் உள்ள கொதிக்கும் நீரில் போட்டால், உடனே அந்தத் தவளை மின்னல் வேகத்தில் தாவி வெளியே வந்துவிடும். ஆனால் அதே தவளையை குளிர்ந்த நீருள்ள கிண்ணத்தில் போட்டு, அந்தக் கிண்ணத்தை மெதுவாக சூடேற்றினால் அந்தத் தவளை பாத்திரத்தில் இருந்து வெளியேவராமல் அதனுள்ளேயே கிடந்து சாகிறது.

அதைப்போல நம்நாட்டு அரசியல் கட்சிகளும் பிரச்சனைகள் சிறிதாக தோன்றும்போது தடுக்காமல், பின்னர் பெரிதான பின்னர்தான் கூத்தாடுகின்றன. ஆகவே 'தவளைக் கட்சிகள்' என்று அழைக்கலாம். தப்பில்லை.

* சிந்தியா! எதிர்பாராத முடிவு வரும்படியாக ஒரு கதை தேடி எடுத்துத் தாருங்கள்!

ஏ. ஹனீஸா, பாணந்துறை.

சிறையில் பார்வையாளர் நேரம்-கைதிகளை அவர்களது உறவினர்கள் வந்து பார்வையிட்டுக் கொண்டிருந்தனர். ஒரே ஒரு கைதியைப் பார்வையிட மட்டும் எந்த உறவினரும் வரவில்லை. அந்தக் கைதியைப் பார்க்க சிறை அதிகாரிக்கு பரிதாபமாக இருந்தது. அவனிடம் சென்று:

"நான் உன்னை ரொம்ப நாட்களாகக் கவனித்து வருகிறேன். உன்னைப் பார்க்க யாரும் வருவதில்லையே. உனக்கு உறவினர்கள் யாரும் இல்லையா?" என்று கேட்டார்.

உடனே அந்தக் கைதி: "உறவினர்கள் நிறையப்பேர் இருக்கிறார்கள். ஆனால் எல்லோரும் உள்ளேதான் இருக்கிறார்கள்!" என்று சலிப்போடு சொன்னான்.

* தனியார் வானொலி தமிழ் அலை வரிசைகள் பெருகி வருகின்றனவே? நல்லதா?

ஆர். சித்திரகலா, கொழும்பு-09.

எம்.ரி.வி. புதிதாக 'சக்தி' ரேடியோ ஆரம்பிக்கிறது. எந்த அலைவரிசையைத் திருப்பினாலும் தமிழ் செவியில் பாய்வது இன்பம்தான். ஒரு தனியார் தொலைக்காட்சி விளம்பரத்தில் குட்டிகளை சைட் அடிப்பது என்றெல்லாம் விளம்பர வாசகங்கள் ஒலிப்பது சகிக்கவில்லை. திருத்தலாம்!

* ஸிம்பாப்வேயிடம் இலங்கை அணி தோற்று விட்டதே?

கே. யோகலட்சுமி, கொழும்பு-05.

யானைக்கும் அடி சறுக்கும். தவிர ஸிம்பாப்வே அணியும் அப்படி ஒன்றும் சாதாரண அணியல்ல. போராடும் அணி. ஒரு காலத்தில் இலங்கை அணியிடம் இருந்த வெற்றி பெறும் உத்வேகம் ஸிம்பாப்வே அணியிடம் அப்படியே இருக்கிறது. ஆகவே அதுவும் முன்னணியாகிக் கொண்டிருக்கிறது.

* சிந்தியா! மகிழ்ச்சி என்ன விலை?

எம். நியாஸ், பொலனறுவை.

சொன்னால் உள்ள மகிழ்ச்சியும் இல்லாமல் போய்விடும்!



கமல்

* ஆலயத்தில் தேங்காய் உடைப்பது ஏன்?

பி. மீனலோஜினி, தலாத்து ஓயா.

'அகம்பாவத்தை உடைக்கிறோம்' என்பதன் அடையாளம்தானாம்! அதுதான் சிதறு தேங்காயாக உடைக்கும்படி கூறுகிறார்களோ?

* தொழிலில் வெற்றிபெறக் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய அம்சம் என்ன?

மு. நிரோசன், புத்தளம்.

மூளை! அதற்கு உதாரணமான கதை ஒன்று:

பழைய கார்களைத் தேர்ந்தெடுத்து வாங்கி விற்பதில் ஒருவர் கில்லாடியாக இருந்தார்.

அவருடைய நண்பர் அவரிடம்: "நான் ஒரு கார் மெக்கானிக். நானே பலமுறை ஏமாந்திருக்கிறேன். கார்களை பற்றி ஒன்றுமே தெரியாத நீ மட்டும் எப்படி நியாயமான விலையில் வாங்கி விற்கிறாய்?" என்று கேட்டார்.

அதுக்கு அவர் சொன்னார்:

"நான் காரை வாங்குவதற்கு முன்னர் அதனைச் சோதித்துப் பார்க்கிறேன் என்று கூறிவிட்டு, நேராக கார் டீலரிடம் போவேன். இந்தக் காரை விற்கப்போகிறேன். எவ்வளவு தருகிறீர்கள்? என்று கேட்பேன். உடனே அவர் விலையையும், தரத்தையும் கூறிவிடுவார். அதனை வைத்து அந்தக் காரை வாங்கினால் இலாபமா? என்று முடிவு செய்வேன்!"



படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 35

ஆண்டவர் சாமுவேலுக்கு இட்ட கட்டளைப்படி சவுலை இஸ்ரயேலரின் முதல் அரசனாக சாமுவேல் திருப்பொழிவு செய்தார். ஆனால் ஆண்டவருக்கு ஏற்புடையதல்லாத பல தீய செயல்களில் ஈடுபட்ட சவுல் மீது கர்த்தர் வெறுப்புற்றார். கர்த்தர் கேட்டுக்கொண்டதற்கிணங்க தாவீதை இஸ்ரயேலரின் மன்னராக்கும் பொறுப்பினை சாமுவேல் ஏற்றார்.

பெலிஸ்திய வீரனான கோலியாத்தைக் கொன்ற இளைஞர் தாவீதுக்கு மக்களிடம் செல்வாக்குப் பெருகுவதைக் கண்டு பொறாமை கொண்ட சவுல் தாவீதைக் கொன்றுவிடத் திட்டமிடுகிறார். சவுலின் மகன் யோனத்தானும் தாவீதும் இணைபிரியா நண்பர்களாகி விட்டமையும் சவுலுக்கு ஒரு பெரும் பிரச்சனையாகிவிட்டது.

தாவீதை தான் கொன்றுவிட்டால் தன் மீது தன் மகனான யோனத்தானே வெறுப்புக்கொள்ளக்கூடும் என்பதனால், பெலிஸ்தியர் கையாலேயே தாவீதைக் கொலை செய்ய வைத்து விடலாம் என்று சவுல் எண்ணினார். பெலிஸ்தியர்மீது போர் தொடுப்பதற்கான வழிவகைகளை வகுத்து, தாவீதையே படைநடத்திச் செல்லுமாறு சவுல் பணித்தார். அவ்வாறு நடைபெற்ற போர்களிலெல்லாம் தாவீதே வெற்றி பெற்றார்.

கோலியாத்தை வீழ்த்தும் வீரனுக்குத் தன் மகளைத் திருமணம் முடித்து வைப்பதாக முன்னரே சவுல் அறிவித்திருந்தார். ஆகவே தாவீதைத் தன் மூத்த மகளான மேராபுவை மணம் முடித்துக்கொடுக்க சவுல் ஆயத்தங்களைச் செய்தார். ஆனால் அப்பெண் அதிரியேல் என்பவனை மணந்து கொண்டாள். சவுலின் இரண்டாவது மகள் மீகாள் தாவீதை மனதார விரும்பினாள். இதற்கு சவுல் அனுமதி அளித்தார். திருமணமும் நடந்து முடிந்தது.

தனது மருமகனாகிவிட்ட தாவீதைச் சுலபமாகக் கொன்றுவிடலாம் என்று சவுல் கருதினார். தாவீது தனது மனைவி மீகாளுடன் தங்கியிருந்த வீட்டைச் சுற்றி காவலர்களை சவுல் அமர்த்தினார். சந்தர்ப்பம் பார்த்து தாவீதைக் கொன்று விடுமாறு காவலாளிகளுக்கு சவுல் ஆணைபிறப்பித்திருந்தார். இந்த இரகசியத் திட்டம் எப்படியோ தவீதின் மனைவி மீகாளுக்குத் தெரிந்துவிட்டது. இரவோடிரவாகத் தனது கணவனைத் தப்பிச் செல்லுமாறு அவள் கேட்டுக்கொண்டாள். அதன்படி பலகணியினூடாக தாவீதை மீகாள் தப்பிச்செல்ல வைத்தாள்.

## யோனத்தானின் உறுதி

சவுல் தனது மகன் யோனத்தானிடம் தனது கருத்தை வெளியிட்டார். தாவீது உயிருடனிருந்தால், தனக்குப்பின் அரியாசனம் ஏறும் சந்தர்ப்பம் யோனத்தானுக்குக் கிடையாது என்பதனால் தாவீதைக் கொன்றுவிடப் போவதாகக் கூறினார். தனது உயிருக்குயிரான நண்பரைத் தனது தந்தை கொல்லப் போவதாகக் கூறியது யோனத்தான் அதிர்ச்சியடைந்தான். அத்துடன் மன வேதனையும் அவனை ஆட்டிப்படைத்தது.

யோனத்தான் தாவீதின் அருங்குணங்களையெல்லாம் எடுத்துரைத்தான். தன் நண்பனைக்கொன்று விட்டுத் தான் அரச பதவியில் இருப்பதை எப்போதும் விரும்பப் போவதில்லை என்று உறுதியாகச் சொன்னான். தன் நண்பன் கொல்லப்பட்டால் தானும் உயிருடன் வாழப்போவதில்லை என்றும் சொன்னான்.

யோனத்தானின் வார்த்தைகளைக் கேட்ட சவுல் துணுக்குற்றார். எக்காரணங்கொண்டும் தாவீதை தான் கொல்லப்போவதில்லை என்று ஆண்டவர் மீது ஆணையிட்டுக் கூறினார்.

தனது தந்தையின் கருத்தை யோனத்தான் தாவீதிடம் கூறி, எப்படியாவது சில காலம் தலைமறைவாக இருக்கும்படி தெரிவித்தான்.

யோனத்தான் கூறிய அதே கருத்தையே தனது மனைவி மீகாளும் கூறியிருந்தாள். தான் சவுல் மன்னனுக்கு எதுவித தீங்கும் நினைக்காதிருந்தும்கூட, அவர் ஏன் தன்னைக் கொல்ல நினைக்கிறார் என்று காரணம் தெரியாமல் தவித்த தாவீது, வீட்டை விட்டு இரவோடிரவாகக் கிளம்பினார். ஊர் எல்லையில் ஒரு மலையடிவாரத்தில் மறைவாகவிருந்தார்.

சவுல், யோனத்தானிடம், தாவீதைக் கொல்லப்போவதில்லை என்று ஆண்டவர் மீது ஆணையிட்டுக் கூறியபோதும், தன் தந்தை மீது யோனத்தானுக்கு நம்பிக்கை இல்லை. தீய ஆவியின் தூண்டுதலினால் அடிக்கடி சவுல் மனம் மாறுவதை யோனத்தான் நன்கு அறிந்திருந்தான். ஆகவே வெளியூரில் சென்று சிலகாலம் தலைமறைவாக இருக்கும்படி, தாவீதின் மறைவிடத்தில் அவரைச் சந்தித்த யோனத்தான் கூறினான். இணைபிரியா நண்பர்களிருவரும் ஆற்றொணாத் துயருடன் பிரிந்தனர்.

மீகாளின் இல்லத்தைச் சூழ்ந்து நின்ற சவுலின் காவலர்கள் அடுத்தநாள் அதிகாலையில் முன்கதவைத் தட்டினர். மீகாள் கதவைத் திறந்ததும் காவலர்கள் உள்ளே புகுந்து தாவீது எங்கே என்று வினவினர். தன் கணவர் சுகயீனமாகப் படுத்திருப்பதாக மீகாள் கூறினாள். உருவிய வாளுடன் படுக்கை அறைக்குள் சென்ற ஒருவன், படுக்கையில் துணியால் மூடப்பட்டிருந்த உருவத்தைக் கண்டான். துணியை இழுத்தெறிந்துவிட்டு வாளை ஓங்கினான். ஆனால் படுக்கையில் தாவீதைக் காணவில்லை. அங்கே ஒரு சிலை மட்டும் கிடந்தது.

ஓடிச்சென்று மன்னன் சவுலிடம் விடயத்தைச் சொன்னார்கள். மகள் மீகாளை அழைத்து மன்னன் விசாரித்தார். தாவீது தன்னைக் கொன்று விடுவதாக எச்சரித்துவிட்டு இரவோடிரவாக ஓடித்தப்பிவிட்டார் என்று பொய் சொன்னாள். தனது திட்டத்தை தாவீது அறிந்து கொண்டிருப்பதனால் தனக்கு மென்மேலும் ஆபத்து அதிகரித்துவிட்டதாகவே சவுல் கருதினார்.

## சாமுவேலும் தாவீதும்

தாவீது இராமா என்ற இடத்துக்குப் போனார். அங்கு சாமுவேலைக் கண்டார். எக்காரணமுமின்றி தன்னைக் கொல்வதற்கு தாவீது திட்டமிட்டிருப்பதையும், அவர் செய்த கொலை முயற்சிகளைப் பற்றியும் சாமுவேலிடம் தெரிவித்தார். கர்த்தரின் கிருபையினால் தாவீதின்மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையையும் அதனால் அவர் பெற்றுவரும் செல்வாக்கையும் பற்றி சாமுவேல் அறிந்திருந்தார். இதனால் ஏற்பட்ட பொறாமையும், தன் அரசபதவிக்கே ஆபத்து நேர்ந்துவிடுமோ என்ற அச்சமுமமே சவுலை ஆட்டிப்படைக்கின்றன என்பதை அவர் உணர்ந்திருந்தார். தாவீதையும் அழைத்துக்கொண்டு சாமுவேல் நாவோத்துக்குச் சென்றார்.

நாவோத்திலிருக்கும் தாவீதைப் பிடித்துத் தன்னிடம் கொண்டு வருமாறு சவுல் தனது வீரர்களையும் ஒற்றர்களையும் அனுப்பி வைத்தார். அவ்வாறு சென்றவர்கள் சாமுவேலையும் தாவீதையும் நாவோத்தில் கண்டவுடன், தாங்கள் எதற்காக அனுப்பப்பட்டார்களோ, அதை மறந்து இறைவாக்குரைக்கலானார்கள்.

மற்றொரு படைத் தொகுதியினரையும் சவுல் அனுப்பினார். அவர்களும் முன்பு சென்றவர்களைப்போல் மாறி விட்டனர். அதன்பின்னர் சவுல் தானாகவே புறப்பட்டு நாவோத்தை அடைந்தார். அங்கு சென்று சாமுவேலைக் கண்டதும், சவுல் தனது மேலாடைகளைக் களைந்துவிட்டு இறைவாக்குரைத்தார்.

தாவீது நோபில் என்ற இடத்துக்குச் சென்றார். அங்கிருந்த குரு அகிமெலக்கைக் கண்டு, தான் அரச பணியாக வந்திருப்பதாகக் கூறி உண்ண உணவு பெற்றார். அங்கு துணிகளில் சுற்றி வைக்கப்பட்டிருந்த கோலியாத்துக்குச் சொந்தமான வாளையும் குருவிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

தாவீது அங்கு வந்ததையும் கோலியாத்தின் வாளைப் பெற்றதையும் அங்கிருந்த வண்ணம் தோயேகு என்பவன் கவனித்துக் கொண்டிருந்தான். இவன்- சவுலின் கால்நடைகளை மெய்ப்பவர்களின் தலைவன். அத்துடன் சவுலின் ஒற்றனாகவும் இருந்தான். இவன் சவுலுக்கு தாவீது பற்றிய தகவலை அனுப்பி

## சவுலின் கொலை வெறி



வைத்தான். குரு அகிமெலக்கு தாவீதுக்குச் செய்த உதவிகள் பற்றிய செய்திகளும் தோயேகுவால் மன்னனுக்குத் தெரிவிக்கப்பட்டன. எப்படியாவது தாவீதைப் பிடித்தே ஆகவேண்டும் என்ற துணிவுடன் சவுல் தனது பரிவாரங்களுடன் புறப்பட்டார்.

தன்னைத் தொடர்ந்து சவுல் வந்து கொண்டிருப்பதைக் கேள்வியுற்ற தாவீது, ஒவ்வோரிடமாக- பல வேடங்கள் பூண்டு- தலைமறைவாகச் சென்றார். காத்தின் மன்னனான ஆக்கீசு என்பவன் முன்னிலையில், தான் இன்னார் என்பதைக் காட்டிக் கொள்ளாமல் பைத்தியகாரனைப்போல் வேடமும் போட்டார்.

## கொலை செய்யப்பட்ட குருக்கள்

தாவீது அதுல்லாம் குகைக்குச் சென்று சில நாட்கள் அங்கு தங்கியிருந்தார். அங்கு அவருடைய சகோதரரும் நெருங்கிய உறவினர்களும் வந்து தாவீதைக் கண்டனர். அவர்களை அழைத்துக் கொண்டு மோவாபி மன்னனிடம் சென்றார். தனது உறவினர்களைப் பாதுகாப்பாக மன்னனிடம் ஒப்படைத்தார். பின்னர் யூதா நாட்டுக்குப் புறப்பட்டு எரேத்து என்ற காட்டை அடைந்தார்.

இதற்கிடையில், தாவீதுக்கு உதவிய குரு அகிமிலேக்கு பற்றி சவுலின் ஒற்றன் தோயேகு மன்னனிடம் விவரமாக கூறினான். மன்னனும் குரு அகிமிலேக்கையும் அவர் குடும்பத்தைச் சார்ந்த அனைத்துக்குருக்களையும் தன்னிடம் வருமாறு அழைத்தார். அவர்கள் வந்து சேர்ந்தவுடன், அவர்கள் தாவீதுடன் சேர்ந்து தனக்கு எதிராகச் சதித்திட்டம் போடுவதாகக் குற்றம் சாட்டினார். இதனைக் கேட்ட குரு அகிமிலேக்குத் துணுக்குற்றார். தாவீது அரச விரோதியல்ல என்று வாதிட்டார்.

ஆனால் குருவின் வார்த்தைகளைக் கேட்கும் நிலையில் சவுல் இருக்கவில்லை. குருவையும் உறவினர்களையும் கொன்று விடுமாறு தனது ஏவலாளர்களுக்கு சவுல் கட்டளையிட்டான். ஆனால் கர்த்தரின் குருமாரைக் கொல்வதற்கு அவர்கள் முன்வரவில்லை. தனது ஒற்றனான தோயேகுவிடம் குருக்களைக் கொல்லுமாறு ஆணையிட்டான். அவன் மொத்தம் எண்பத்தைந்து குருக்களையும் வெட்டி வீழ்த்தினான். அதுமட்டுமல்லாமல் நோபில் நகருள் புகுந்து அங்கிருந்த ஆண், பெண், சிறுவர்கள் முதலானோரையும் தோயேகுவும் அவன் ஆட்களும் கொன்று குவித்தனர்.

அகிமெலக்கின் புதல்வர்களுள் ஒருவனான அபியத்தார் என்பவன் எப்படியோ தப்பித்துக் கொண்டான். தாவீதிடம் ஓடிச்சென்று சவுல் புரியும் கொடுமைகளை விவரமாகக் கூறினான்.

தாவீது தன்னுடன் வந்து சேர்ந்தவர்களையும் அழைத்துக்கொண்டு ஓர்சா என்ற இடத்தில் பாதுகாப்பாகத் தங்கியிருந்தார். இதனைத் தனது நண்பர்கள் மூலம் அறிந்து கொண்ட யோனத்தான், ஓர்சா சென்று தன் நண்பனைக் கண்டு கொண்டார். இருவரும் ஆரத்தழுவிக் கொண்டனர். இறைவன் கிருபையால் தனது தந்தையின் கொலை வெறியிலிருந்து தாவீது தப்பிக்கொள்வார் என்ற தனது திடநம்பிக்கையை தாவீதிடம் கூறி தைரியமாக இருக்கும்படி யோனத்தான் கேட்டுக்கொண்டார்.

"என் நண்பனே! ஆண்டவரின் அருள் நிரம்பப்பெற்ற உம்மை என் தந்தையால் ஒரு போதும் கொல்ல முடியாது. இஸ்ரயேலின் அரசனாக ஆண்டவரே உம்மைத் தேர்ந்தெடுத்திருக்கிறார். அரியணையில் நீர் அமர்ந்து அரசோச்சம் போது அருகே நானமர்ந்து, உமது உதவியாளனாக இருப்பேன்! அஞ்சாதீர்!"

தாவீதிடம் இவ்வாறு கூறிய யோனத்தான் தாவீதை ஆரத்தழுவி விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டான்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை 33 விடை** ☛ பெலிஸ்தியர் படையைச் சேர்ந்தவன்.

**பரிசு பெறுவோர்:**


1. கே. காயத்திரி,
கலைமகள் தமிழ் வித்தியாலயம், ஹொப்டன்.
2. மிக்கல் டிலக்சி,
3ம் வட்டாரம், நிலாவெளி, திருமலை.
3. எம்.என். நிலவ்பர்,
இல. 127/B, நந்தெனிகம, மஹோ.
4. கே.ஆர். மலர்,
இல 4, உலப்பன வத்த, உலப்பனை.
5. செல்வி செல்வம் சுதர்சினி, வின்சன்ற் மகளிர் உயர்தரப்பாடசாலை, மட்டக்களப்பு.

**திருமறை 35 வினா:-** தாவீதுக்கு உதவிய குருவின் பெயர் என்ன?

நவ. 21க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 35— தினமுரசு வாரமலர், த.பெ.இல— 1772, கொழும்பு.**

## பயோ டேட்டா



| | | |
|---|---|---|
| பெயர் | : | யாழ் பயணிகள் |
| தொழில் | : | கவசமாக இருத்தல் |
| பிரிக்க முடியாதது | : | அலைச்சலும் கிளியரன்சும்! |
| பிரிந்தே இருப்பது | : | வடக்கும் தெற்கும்! |
| நிறைந்திருப்பது | : | சரக்குக்கப்பலில் மனிதர்கள்! |
| குறைந்திருப்பது | : | மனிதர்கள் என்ற மரியாதை! |
| குறையாதது | : | சோதனையும் கெடுபிடியும்! |
| பிடித்த பாடல் | : | 'இது நீரோடு செல்கின்ற ஓடம். இதில் நியாயங்கள் யார் சொல்லக்கூடும்?' |
| சமீபத்திய எரிச்சல் | : | காற்றில் பறக்கும் வாக்குறுதிகளும், காத்திருப்பும்! |
| நம்புவது | : | அதிஷ்டத்தை. |
| நம்பாதது | : | நஷ்ட ஈட்டை. |

## சூப்பர் பட்ஜெட்

இந்த பட்ஜெட் போதுமா இன்னும் கொஞ்சம் வேணுமா?

சூப்பர் பட்ஜெட்டு-இது
ராக்கெட் பட்ஜெட்டு!

யுத்த பட்ஜெட்டு-இது
யுத்த பட்ஜெட்டு!

குண்டு வாங்க நிதியிருக்கு
ரவுண்ஸ் வாங்க நிதியிருக்கு

விதம் விதமா கவசவாகனம்
ரகம் ரகமாக போர் விமானம்
அழகழகா யுத்த ஆயுதம்
எல்லாம் வாங்கலாம்
சூப்பர் பட்ஜெட்டு!

## பேச்சாளர் பேரம்பலம்



இந்த அரசாங்கத்தின்மீது நாங்கள் விரக்தி அடைந்திருப்பதாக கூறினோமே தவிர கோபம் கொண்டிருக்கிறோம் என்றோ, அதிருப்தியும் எரிச்சலும் கொண்டிருக்கிறோம் என்றோ கூறவில்லை என்பதையும், ஆதரவை விலக்குவது பற்றி தொடர்ந்து ஆதரவளித்தபடி சிந்தித்துக் கொண்டே இருப்போம் என்றும், ஆதரவாக கையை உயர்த்தும் போதும் எங்கள் எண்ணம் எல்லாம் ஆதரவை விலக்குவது பற்றியே இருக்கும் என்றும் நம்பாதவர்கள் விஷமிகள், தீயசக்திகள், கிரிமினல் குற்றம் செய்பவர்கள் என்பதை கூறிவைக்க கடமைப்பட்டுள்ளேன்.

## கந்தசாமியும் முத்துத் தம்பியும்



க: என்ன ஐசே, பட்ஜெட் கம்பியூட்டரிலே ரெடியாகியிருக்கும் போல கிடக்கு.

மு: பட்ஜெட் கம்பியூட்டரிலே. பட் நாட்டு நிலைமை கற்காலத்திலே. ஜெட் வேகத்தில் யுத்தச் செலவு, குட் என்று சொல்லவோ முடியும்? வெட்டொன்று துண்டு ரெண்டாக துணிச்சலாக பிரச்சனைகளை தீர்த்தால் பட்ஜெட் குட்ஜெட்டாக பாயுமல்லோ.

க: பிரச்சனை தீர்ந்தால் பிறகு குளிர்காய நெருப்பு இல்லாமல் போய்விடுமல்லோ. குட்டை இருந்தால்தான் குழப்பிக் குழப்பி மீன் பிடிக்கலாம். யுத்தம் நடந்தால்தான் அதைச் சொல்லிச் சொல்லி ஷோ காட்டலாம்.

மு: இந்த முறையும் டமில் கட்சிகள் பட்ஜெட்டை ஆதரிப்பினமோ? அல்லது கிளர்ந்தெழுவினமோ?

க: சூரியன் வடக்கில் உதிக்காது. தமிழ்க் கட்சிகள் அரசை எதிர்க்காது.

மு: கூட்டணி வாலாக்கள் மட்டும் பாதுகாப்பு செலவை எதிர்க்கிறோம் என்று காட்டிப் போட்டு பட்ஜெட்டுக்கு ஆதரவாக ஜெட் வேகத்திலை கை உயர்த்துவினமாக்கும்.

க: அரசுதான் தங்கள் மேயர்கள் பலியாகக் காரணம் என்று ஆனந்த சங்கரி கூறினவர். அப்படிச் சொல்லிப்போட்டு ஆதரவாக வாக்களித்தால் என்ன அர்த்தம்?

மு: மேயர்களை பலியாக்கியதற்கு தாங் யூ வெரிமச் என்று அர்த்தம்.

க: அரசுக்கு கொடுக்கும் ஆதரவை விலக்க யோசித்திருப்பதாக அறிக்கை விட்டவையல்லோ.

மு: அது தம்பிமாரின் கோபத்தை தணிக்க திரிக்கப்பட்ட கயிறு.

க: ஏனைய டமில் கட்சிகள் என்ன செய்யப் போகினம்?

மு: அண்ணர்மார் காட்டும் வழியம்மா! நாங்களும் வந்தோம் சரணமம்மா! என்று கை உயர்த்தல்தானாக்கும்.

க: நவம்பருக்கு முன்னால் தீர்வு என்று பேராசிரியர் பீரிஸ் கூறியவர் அல்லோ. பொதியை அவிழ்த்தமாதிரித் தெரியேல்லை.

மு: பட்ஜெட்டும் ஒரு பொதிதானே.

க: எல்லாம் கிடக்கட்டும், சரக்குக் கப்பலில் ஆடு மாடுகள்கூட ஏற்றுவது கஷ்டமாம். சனத்தை ஏற்றி இறக்கி சாதனை படைக்கினம் பார்த்தீரோ?

மு: சனமல்லோ சாதனை படைக்குதுகள். மூச்சைப்பிடிச்சு, கடல் தண்ணியில் குளிச்சு, டீசல் மணத்தை சுவாசித்து சரக்குக் கப்பலிலும் மனிதர்கள் பயணிக்கலாம் என்று நிருபிக்கினமல்லோ.

க: அதென்னவோ தெரியேல்லை, வெளிநாடு போற ஆட்கள் மட்டும் கொஞ்சம் சந்தோசப்படுகினம்.

மு: அதென்ன சந்தோசம்?

க: வெளிநாடுகளில் எல்லைகளைத் கடக்க பவுசர்களுக்குள்ளும், கார் டிக்கிகளுக்குள்ளேயும்தானே பயணம் செய்ய வேண்டும். அதுக்கு சரக்கு கப்பல் ரவலிங் ஒரு றெயினிங்காக இருக்குமல்லோ?

மு: அப்படிப் போடும். அரசாங்கம் நல்ல யோசனையில்தான் செய்கிறது என்று சொல்லுகிறீர். உம்மை டமில் கட்சிகள் கண்டால் விடமாட்டினம். அறிக்கை எழுதக் கடத்திக் கொண்டு போகப்போகினம்.

க: சேச்சே டமில் கட்சிகளுக்கு அதுக்கான அவசியமே கிடையாது. ரெடிப் பொசிசனில் அறிக்கை இருக்குமாம். திகதிகள் உட்பட சில மாற்றங்களை செய்துபோட்டு பத்திரிகைகளுக்கு அனுப்ப வேண்டியது தானாம்.

மு: சூப்பர் அரசியல்!

காதிலை பூ கந்தசாமி

www.padippakam.com

Regd. as a News Paper at the G.P.O.(QD/21/NEWS/98)




அருள் ஜுவலர்ஸ்

ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு

436331


# கடச் கடக் கிளிக்



↑ எடுத்த படத்தை உடனடியாக கடச்கட பிரசவிக்கும் 'போலோ றொய்ட்' கமரா இது. உலகில் மிகச் சிறிய கமராவும் இதுதான்.

எடையும் குறைவு; அளவும் குறைவு. கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது என்பது போல், இந்தச் சிறிய கமராவில் பிடிக்கப்படும் படங்கள் மட்டும் மிகவும் துல்லியமாக அமைந்து விடுகின்றன.

பொதுவாக கமரா கைக்கடிகாரம், தொலைக்காட்சி, வானொலிக் கருவிகளை மிக நுணுக்கமாக ஜப்பான் நாடுதான் வடிவமைக்கும். இந்த 'போலோ றொய்ட் பொக்கெற்க்ஸியாஓ' கமராவை- விளையாட்டுப் பொம்மைகளை உருவாக்கும் ஜப்பான் நிறுவனமான ரோனி கம்பெனி-அமெரிக்க, மசாசுசெட்ஸ் போலோ றொய்ட் கோர்ப்பரேஷன் ஒஃப் கேம்பிரிஜ் நிறுவனத் துடன் இணைந்து வடிவமைத்திருக்கிறது.

இக்கமராவின் அளவு- 4.4x13x4 சென்டி மீட்டர்தன். இதற்கான பட்டாரியுடன் சேர்ந்து இதன் எடை ஆக 167 கிராம் மட்டுமே. இப்போதெல்லாம் புகைப்படம் எடுப்பது சுலபமானதாக மாறிவருகிறது. சிறுவர் சிறுமிகள்கூட 'கிளிக் பண்ண வசதியாக கடுகுக் கமராக்கள் புதிதாக அறிமுகமாகின்றன.




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு

323657


# பெரும் வீழ்ச்சி



← இயற்கையின் திருவிளையாடல்களுள் நீர்வீழ்ச்சி மிக உன்னதமானது. வானிலிருந்து ஊற்றெடுத்துப் பாய்வது போல் இதன் காட்சி மிக ரம்மியமானது. சோவென்ற இரைச்சலோடு கொட்டும் வெண்ணுரை பொங்கும் பொழிவு பார்ப்போரைப் பரவசப்படுத்தும்.


எங்கெங்கெல்லாம் நீர்வீழ்ச்சிகள் தென்படுகின்றனவோ அங்கெல்லாம் மக்கள் நிறைந்து நின்று வேடிக்கை பார்ப்பார்கள். காண்போரின் கவலைகளையெல்லாம் விரட்டி அடிக்கும் சக்தி நீர்வீழ்ச்சிக்கு உண்டு.

மலைகளிலிருந்து ஊற்றெடுத்து சிற்றருவிகளாக ஓடிவந்து ஒன்றோடொன்று கலந்து சங்கமமாகி நதியாகப் பெருகிவரும்போது, திடீரென்று அந்நதி ஓடிவரும் நிலம் செங்குத்தான பள்ளமாகியிருக்கும். வேகமாக ஓடிவரும் நீர் வேறுவழியின்றி அப்பள்ளத்தின் விளிம்பில் விழுகிறது. இவ்வாறுதான் நீர்வீழ்ச்சிகள் தோன்றுகின்றன.

அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் இடையில் உள்ள நீர்வீழ்ச்சி நயகரா நீர்வீழ்ச்சியாகும். இது உலகப் பிரசித்தி பெற்ற போதிலும் இதன் உயரம் குறைவுதான்.

படத்தில் காணப்படுவதுதான் உலகிலேயே அதி உயரமான நீர்வீழ்ச்சி. இதன் மொத்த உயரம் 979 மீட்டர். வெனிசுலா நாட்டிலுள்ள ஏஞ்சல் நீர் வீழ்ச்சி இதுவாகும்.

# அண்ணாமலை



↓ இடையை புகழ்வது என்றாலே பெண்களைத்தான் புகழவேண்டும் என்று சட்டமா என்ன? உலகமே வியக்கும் இடை இந்த அண்ணருக்குத்தான். உலக சாதனைப் புத்தகத்திலும் இவரது இடையை மறக்காமல் குறித்து வைத்திருக்கின்றனர்.

அதாகப்பட்டது, உலகிலே பெரிய இடை அழகர் இவர்தான். இவருடைய சூப்பர் இடையின் மொத்தச் சுற்றளவு கேட்டால் தலைசுற்றும். 9 அடி 11 அங்குலம். (3.02 மீட்டர்)

அமெரிக்காவைச் சேர்ந்த இவரது பெயர் வேல்டர் ஹட்சன். இவர் பொழுதுபோக்காக இடைக்கிடையே உட்கொள்ளும் நொறுக்குத்தீனி பட்டியலில் சில அயிட்டங்கள்:

பொரித்த உருளைக்கிழங்கு பக்கட்டுகள்- 10, கொழும்பில் வதக்கப்பட்ட பெரிய இனிப்பு றொட்டிகள்- 12, சீன உணவுப் பொட்டலங்கள்-08, கேக்-500 கிராம். இவை தவிர மூன்று நேர பிரதான உணவுகள் தனி. யப்பா! அண்ணர் ஒரு மலை. ஆகவே அண்ணாமலை.

# 2001



→ இயற்கை உபாதைகளால் மக்கள் சீனக்குடியரசில் பல அழிவுகள் ஏற் படத்தான் செய்கின்றன. இருப்பினும் அந்நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் எத்தகைய பாதிப்புக்குள்ளும் இடர்ப்படவில்லை. பொருளாதார வளமும் வர்த்தகத்துறையும் வளர்ச்சியடையவே செய்கின்றன.

21ம் நூற்றாண்டில், சகல துறைகளிலும் ஏற்படக்கூடிய எச்சவாலையும் சமாளிக்க சீனா தயாராகிவருகிறது.

ஷங்காய் சீனாவின் பிரபல்மான வர்த்தகக் கேந்திர நிலையம். இங்கு பல நவீன கட்டடங்கள் உருவாகிவருகின்றன. நகர நிர்மாணம் நவீனத்துவம் பெறுகின்றது.

இங்கு 460 மீட்டர் (1509 அடி) உயரத்தில் ஷங்காய் உலக பொருளாதார மையம் அமைக்கப்பட்டு வருகிறது. 1997 ஆகஸ்ட் மாதம் இக்கட்டடத்துக்கான கட்டடப்பணி ஆரம்பமாகியது. 2001ம் ஆண்டுதான் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

படத்தில் காணப்படுவதும் ஒரு புதுமையான கட்டடம்தான். ஓரியண்டல் பேள் தொலைக்காட்சிக் கோபுரம் இதுவாகும். 21ம் நூற்றாண்டில் உயரத்தில் உலக சாதனை படைக்கப் போகும் தொலைக்காட்சி கோபுரமாக இது நிர்மாணிக்கப்பட உள்ளதாம்.

பாருங்கள், நாம் கற்காலத்திற்கு சென்று கொண்டிருக்கிறோம் கொழும்பில் இருந்து யாழ் செல்லக்கூட அரசால் கப்பல் விடமுடியவில்லை. சீன அரசு 21ம் நூற்றாண்டுக்குள் இப்போதே தன் மக்களை கொண்டு செல்ல தயாராகிவிட்டது.

# தாக்குதல்



← இரசாயன ஆயுதங்களைக் கொண்டு எதிரிகளை முறியடிக்கும் முறை யுத்தத்தின்போது ஒரு காலத்தில் பயன்படுத்தப்பட்டு வந்தது. இம்முறை தற்போது சர்வதேச ரீதியில் தடை செய்யப்பட்டுவிட்டது. ஆனால் இம்முறை சில உயிரிகளிடம் நடைமுறையிலிருக்கிறது.

படத்தில் காணப்படுவது ஒருவகை வண்ணத்துப் பூச்சியின் புழுப் பருவம். இப்புழு தன்னை ஏதாவது ஒரு பிராணி தாக்கவந்தால் அப்பிராணியை மிகச் சுலபமாக முறியடித்துவிடும். இதன் உடல் முழுவதும் சிறிதும் பெரிதுமாக பல ரோமங்கள் தென்படுகின்றன. இவை சாதாரண ரோமங்களல்ல; அத்தனையும் இரசாயன விஷத்தை நிரப்பிவைத்திருக்கும் கொம்புகள்.

ஏதாவது ஓர் எதிரி இதனைத் தீண்டினால் தீண்டப்பட்ட இடத்திலுள்ள ரோமங்கள் முறிந்துவிடும். அவற்றுள் பொதிந்து கிடக்கும் நச்சு இரசாயனத் திராவகம் தீண்டிய பிராணியைத் தாக்கும். சில பிராணிகள் இதனால் இறந்து போய்விடும். வேறு சில இத் தாக்குதலால் பெரும் பாதிப்புக்குள்ளாகிவிடும்.

உலகில் பூச்சிகள் இல்லாத இடமே கிடையாது. பல இலட்சக்கணக்கான பூச்சி இனங்கள் காணப்படுகின்றன. இவை ஒவ்வொரினத்துக்கு வெவ்வேறு குணாதிசயங்கள், வாழ்க்கை முறைகள் உள்ளன. இருப்பினும் பூச்சி இனங்கள் முழுமையாக வளர்ச்சி அடைந்த பின்னர் உள்ள தோற்றத்துக்கும் ஆரம்ப நிலைக்கும் முற்றிலும் வித்தியாசமான நிலையே இருக்கும்.

முட்டையிலிருந்து புழுவாக வெளிவரும் இவை கூட்டுப்புழுவாக மாறி சிலகாலம் மறைந்து வாழ்ந்த பின்னர் வெளியே வரும்போது- இருநிலைகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லாததொன்றாகவே தோற்றமளிக்கும்.

பார்க்கும்போதே அருவருப்பாக-படத்தில்-காணப்படும் இப்புழுதான் பல வண்ணங்களைக் கொண்ட வண்ணத்துப் பூச்சியாக நம்முன் பறந்து திரிகிறது. வியப்பாக இருக்கிறதல்லவா! இருநிலைகளுக்கும் எத்தனை வித்தியாசம்! அதுசரி, பூச்சிகூட தன்னை பாதுகாக்க தாக்குதல் நடத்துகிறது பார்த்தீர்களா?

# வீச்சு



→ இந்தியக் கிரிக்கெட் அணியின் நம்பிக்கை நட்சத்திரங்களில் ஒருவர் அனில் கும்ளே. சார்ஜா போட்டிகளுக்கு முன்புவரை 151 ஒரு நாள் போட்டிகளில் பங்கு கொண்டு முடித்திருந்தார்.


150ற்கு மேற்பட்ட சர்வதேச ஒருநாள் போட்டிகளில் ஆடிய இந்திய கிரிக்கெட் வீரர்கள் வரிசையில் 5வது இடம் கும்ளேக்கு முதலிடம் இந்திய அணி கப்டன் அசாருதீனுக்கு அவர் 300 போட்டிகளை தாண்டி ரன் குவிப்பில் உலக சாதனையும் படைத்துவிட்டார்.

150 போட்டிகளில் கும்ளே 203 விக்கெட்டுகளை சாய்த்திருந்தார். கொடுத்த ரன்கள் 494.

17.10.1970ல் பெங்களூரில் பிறந்த கும்ளே முதன் முதலில் களமிறங்கியது சார்ஜாவில் இலங்கைக்கு எதிரான போட்டியில்தான். 25.04.1990ல் களமிறங்கிய கும்ளே ஏழே ஆண்டுகளில் 100வது போட்டியை எட்டினார். ஒருநாள் போட்டிகளில் 200 விக்கெட்டுக்களை வேகமாக சாய்த்தவர் என்ற பெருமையும் பெற்றார். 147 போட்டியில் ஸிம்பாப்வேக்கு எதிராக ஆடி 200வது விக்கெட்டை கொய்தார்.

1993ல் மேற்கிந்தியாவுக்கு எதிராக 12 ரன் கொடுத்து ஆறு விக்கெட் கொய்தது சிறப்பு. மேலும் சாதனைகள் செய்ய காத்திருக்கிறார்.

# பிறந்தநாள் வாழ்த்து



செல்வன் கபில் 11.10.1998

தேவதீஸ்வரன்-சசிகலா தம்பதியினரின் செல்வப் புதல்வன் கபில் தனது 1வது பிறந்தநாளை வெகு விமரிசையாக Toronto Canadaவில் 11.10.1998 அன்று குதூகலமாக கொண்டாடினார்.

இவரை அப்பா, அம்மா மற்றும் கனடாவில் இருக்கும் அப்பம்மா, அம்மம்மா, பெரியமாமா-அத்தை, பெரிய சித்தப்பா-சித்தி, மாமா-அத்தை, சின்னமாமா-அத்தை, ஆசை மாமா-அத்தை, குஞ்சுமாமா-அத்தை, குட்டிமாமா-அத்தை, சித்தப்பா, அன்ரா, சின்ன அன்ரா, சுதா மச்சாள், துஷா மச்சாள், அபி மச்சாள், துஷானி மச்சாள், அபர்னா மச்சாள், துஸ்வரியா மச்சாள், ரமணன் மச்சான், ரஞ்சித் மச்சான், சுஜன் அண்ணா, சுபதா அக்கா, அனுஜன் மச்சான், அர்வின் மச்சான், விலோசன் மச்சான், விதூசன் மச்சான், அஸ்வரன் மச்சான், அஜித் மச்சான், தாத்தா, விஜிதா அன்ரா, பவன்மாமா மற்றும் உற்றார், உறவினர்கள் இவரை பல்கலைகளும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.